விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 12 செவ்வாய்க்கிழமை (24.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

ராம்கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## அடுத்த கூட்டத் தொடர்

# புதிய அங்கத்துவ நாடுகளை வளைக்க களம் இறங்குகிறார் ஜனாதிபதி

(கொழும்பு), ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத் தொடரில் புதிதாக அங்கத்துவம் பெறும் நாடுகளை தமது பக்கம் வளைத்துப் போடும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இதற்கான முதற்கட்டமாக தற்போதிலிருந்தே இராஜதந்திர மட்டத்தில் காய்நகர்த்தல்களை முன்னெடுக்க அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக தெரியவருகின்றது.

இதன் ஓர் அங்கமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரடியாகக் களத்தில் இறங்கி புதிதாக அங்கத்துவம் பெறும் நாடுகளுக்கு விஜயம் செய்து அந்நாடுகளின் தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாக அறிய முடிகின்றது.

ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத் தொடரின்போது தமக்கு எதிராக மீண்டும் பாதகமான நிலைமைகள் ஏதும் ஏற்படுமாயின் அதனைச் சமாளிப்பதற்கு இலங்கைக்கு அங்கத்துவ நாடுகளின் உதவி தேவைப்படுகின்றது.



ஆனால், 19-வது கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த சீனா, ரஷ்யா, கியூபா, பங்களாதேஷ், சவுதி அரேபியா (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த தென் கொரியா பயணம்

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென் கொரியா சென்றுள்ளார்.

இவரை தென்கொரிய பிரதி வெளிவிவகார அமைச்சர் கிம் சுங் ஹங் வரவேற்றுள்ளார்.

இதன்போது ஜனாதிபதிக்காக 21 மரியாதை வேட்டுக்கள் பிரயோகிக்கப்பட்டன.

இந்த (24ஆம் பக்கம் பார்க்க)

# பலவீனமான சமூகத்தை பாதுகாக்க தவறிய இந்த அரசு பலமானதல்ல!

## அரசைச் சாடுகிறார் அமைச்சர் ஹக்கீம்


பலவீனமானவர்களைப் பாதுகாக்க வேண்டியது பலமுடைய அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால் பலவீனமான சமூகத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தால் முடியாவிட்டால் அதை பலமான அரசாங்கம் என்று கூறமுடியாது என நீதியமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரத்தை மையமாக வைத்து இந்நிகழ்வில் உரையாற்றிய அவர்,

எந்த அரசாங்கமாக இருந்தாலும் பலவீனமானவர்களைப் பாதுகாப்பதே அவர்களின் கடமை. அது தான் சிறந்த ஆட்சியின் அடையாளம். மாறாக பலசாலிகளை பாதுகாப்பது ஒரு அரசாங்கத்தின் கடமை அல்ல எனக் கூறிய அவர், தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒரு பிரச்சினை ஏற்படும்போது அசம்பாவிதங்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தில் உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டும் (24ஆம் பக்கம் பார்க்க)



## இந்தியக் குழுவின் அறிக்கை இன்று அரசிடம் கையளிப்பு

இலங்கைக்கு வந்து சென்ற இந்திய அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை தங்களது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இலங்கை தமிழர்களின் நிலை குறித்த தங்களின் அறிக்கை, மத்திய அரசிடம் இன்று கையளிக்கப்படும் என குழுவில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த என்.எஸ்.வி.சித்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து ஆராய இந்திய எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமயிலான குழுவினர் கடந்த வாரம் இலங்கை வந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## புதுவருடம் கொண்டாடுவதற்காக இந்தியக் குழு வரவில்லை -ஜே.வி.பி

(கொழும்பு)

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு புதுவருடம் கொண்டாடி விட்டுச் செல்ல இலங்கை வரவில்லை என மக்கள் விடுதலை முனனணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய பிரச்சினை என்பது விளையாட்டு அல்ல என கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் சுட்டிக் காட்டினார்.

யுத்தம் முடிந்தபின் முகாம்களில் உள்ள மக்களை பார்வையிட அனுமதி கேட்டு பாதுகாப்புச் செயலாளருக்கு கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதியும் தமக்கு அனுமதி அளிக்கவில்லை. ஆனால் இந்தியக் குழுவினருக்கு அங்கு செல்ல அனுமதி அளிப்பட்டதாகவும் விஜித ஹேரத் (24ஆம் பக்கம் பார்க்க)



## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இருந்து வெளியேறும்!

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தடுக்க அரசாங்கம் தவறியுள்ளதால் அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்வதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தம்புள்ள முஸ்லிம் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், இந்தத் தாக்குதலுக்கு வழங்கப்பட்ட ஆதரவு, பௌத்த பிக்குகள் இதற்கெதிராக தூண்டப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக ஜனாதிபதி இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீது முஸ்லிம் சமூகம் தற்போது அதிருப்தி கொண்டுள்ளது.

தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதல் ஜனாதிபதியின் பூரண ஆதரவுடன், சுமங்கல தேரர், லக்ஸ்மன் பெரேரா எம்.பி ஆகியோர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்கான தகவல்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு தற்போது முழுமையாகக் கிடைத்துள்ளன.

முஸ்லிம் பள்ளிவாசல் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையினால் அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் அமைச்சர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். (ந-8,11)

## சனல் 4 ஆவணப் படம் கனேடியப் பாராளுமன்றில்

சனல் 4 தொலைக்காட்சியின் தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள் ஆவணக் காணொளி முதற் தடவையாக கனேடியப் பாராளுமன்றத்தில் இன்று மாலை 7 மணியளவில் காண்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொன்சவேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பற்றிக் பிறவுண், என்டிபி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முனைவர் கிறெக் இசுகொட் மற்றும் லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி யூடி செரகோ ஆகியோரின் ஆதரவுடன் இக் காணொளி ஒட்டவா பாராளுமன்ற வளாகத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

தமிழ்க் (24ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய அரசின் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க வேண்டும்

## இந்தியக் குழுவிடம் முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துரைப்பு

(கொழும்பு)

அரசியல் அமைப்பில் மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான பொதுப்பட்டியல் நீக்கப்பட்டு அதில் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள் பூரணமாக மாகாணங்களுக்கு கையளிக்கப்படவேண்டுமென இலங்கை வந்திருந்த இந்திய நாடாளுமன்றக் குழுவை சந்தித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவின் பாண்டிச்சேரி போன்ற மாகாண நிர்வாகத்தை கிழக்கு மாகாண முஸ்லிம்கள் விரும்புவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது.

புவியியல் ரீதியாக தொடர்பில்லாத 4 மாவட்டங்களின் நிர்வாகங்கள் பாண்டிச்சேரி நிர்வாக யூனியனின் கீழ் வருகின்றன.

இலங்கை யாப்புக்கான 13வது திருத்தம் 1987இல் செய்யப்பட்டது. இந்தத் திருத்தம் தான் இலங்கையில் மாகாண சபைகள் அமைய வழிவகுத்தது. 13ஆவது திருத்தத்தின்படி அதிகாரங்கள் 3 பட்டியலின் கீழ் வழங்கப்பட்டன. இதன் பிரகாரம் மாகாணங்களுக்கும் மத்திக்கும் பொதுவான அதிகாரங்கள் பொதுப் பட்டியலில் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

இதில் கல்வி, சுகாதாரம், விவசாயம், சமநல சேவைகள், சமூக சேவைகள், புனர்வாழ்வு, வீடமைப்பு, நிர்மாணம், திருமண, பிறப்பு, இறப்பு பதிவுகள், நீர்ப்பாசனம், சொத்துக்களை பொறுப்பெடுத்தல், பாரப்படுத்தல் என்பன (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Special English Classes**

Spoken English, with Grammar, Official Letters and Private Letters, will be Teaching, to b e a Brilliant Just speak in English. Your skills bring the Power of Knowledge

Contact:- M.P. Mahendran
Expert Teacher
Keerimala Rd., Sithankeney.
0775926983

(8222)

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776181216

(8218)

**YAALH ENGLISH ACADEMY**
(077 3212 711)

வழங்கும் இன்றைய தேவை

BASIC + INTERMEDIATE + ADVANCED
**PRACTICAL ENGLISH COURSES**
FOR ADULTS + SCHOOL STUDENTS

கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.

True ease in Language Use
comes from proper practice,
not chance
As they walk with grace,
who've learned to dance !

(8169)

வகுப்பிட அனுசரணை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்


## தந்தை செல்வாவின் 35ஆவது நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 35ஆவது நினைவு நாள் அஞ்சலியும் நினைவுரையும் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா சதுக்க நினைவிடத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுத்தலைவர் அருட் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அஞ்சலி உரையினை மௌலவி இபுறுஹீம் முகமது பாஹிர், அருட் கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகள், அருட் தந்தை எம்.வி.இ.இரவிச்சந்திரன், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள் ஆகியோரும் நினைவுரை யினை மட்டக்களப்பு முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் செல்லையா இராசதுரை யும் ஆற்றவுள்ளார்கள்.

நிகழ்வில் வரவேற்புரையை பெ.கனக சபா பதியும் நன்றியுரையை தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுச் செயலாளர் பேராசிரியர் ச.சத்தியசீலனும் ஆற்றுவர். (ந-9)

## முன்னாள் போராளிகளுக்கு இலகுகடன் வசதி

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சினால் முன்னாள் போராளிகளுக்கு சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையான பணம் இலகு கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

இந்த கடன் உதவியை வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சையினை புனர்வாழ்வு அதி கார சபை மேற்கொண்டு வருகிறது.

வட மாகாணத்திலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகளுக்கு இந் தக் கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டம், கிளிநொச்சி முல்லைத் தீவு மாவட்டங்களில் கடந்த 21ஆம் திகதி தொடக்கம் இந்த நேர்முகத்தேர்வு இடம் பெற்று வருகிறது. (ந-6)



## புகைப்படக் கண்காட்சியும் போட்டியும்

'நல்லிணக்கமும் சமாதானமும்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்கள் தனியாகவும், ஏனையோருக்கும் இரு வகையில் போட்டி நடத்தப்படவுள்ளது.


புகைப்படங்கள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புகைப்படத்தின் Soft Copy (CD/Flash) சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒருவர் ஆகக் கூடியது 5 புகைப்படங்கள் வரையிலும் அனுப்ப முடியும்.

29.04.2012ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களின் Soft Copy (CD/Flash) யாவும் 'இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். மின் அஞ்சல் ஊடாக அனுப்ப விரும்புவர்கள், comvofm2011@gmail.com என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.

தொனிப்பொருளுக்கு அமைவாக எடுக்கப்படும் செய்திப்படங்களில் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படுபவை கண்காட்சியில் காட்சி ப்படுத்தப்படும் என்பதுடன் போட்டியின் இரு பிரிவுகளிலும்

முதலிடத்துக்கு 10,000/=,
இரண்டாம் இடத்துக்கு 7,000/=,
மூன்றாம் இடத்துக்கு 5,000/=
அத்துடன் 10 புகைப்படங்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.




**சுதந்திர ஊடகக் குரல்**
இல.347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்


விளம்பர அனுசரணை: Midea Electro Mart
Authorized Dealer for Abans Ltd.
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA. Tel: 021-2224566 Fax: 021-2221646 | NO.4, NEW MARKET, CHAVAKACHCHERI. Tel: 021-2270268 Fax: 021-2270129 | e-mail:midea21@gmail.com www.mideamart.com


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை நடராஜா (பாலசுந்தரம்)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வதிவிடமாக வும் கொண்ட வேலுப்பிள்ளை நடராஜா (பாலசுந்தரம்) அவர்கள் 22.04.2012 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலேந்திரா (ராசன் - சுவிஸ்), காலஞ் சென்ற இராஜேந்திரா (இந்தி), காலஞ்சென்ற மகேந்திரா (மோகன்) மற்றும் ரஜனி (சுவிஸ்), மாலினி (கனடா) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் கௌரி (சுவிஸ்), ஞானேஸ்வரன் (சுவிஸ்), கிருபாநிதி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பாரிஜா, பவுத்திரா, நிசாந்தன், நிசாயினி, நிதுஜன், ஆபிராமி, திருமுருகன், திருக்குமரன், திருஅழகன், சிவகாமி ஆகியோரின் பாசமிகு பேரனும் வியாகரத்தினம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தருமராஜா மற் றும் செல்வமலர் (இலங்கை), சோமசுந்தரம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சுவிஸில் நாளை 25.04.2012 புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மாலை 3.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மகன் : பாலேந்திரா (ராசன்) 41 219612589, 41 798632894
மருமக்கள் : ஞானேஸ்வரன் (சுவிஸ்) 41 447800146, 41 764453182
கிருபாநிதி (கனடா) 1 6478529919

தகவல் : குடும்பத்தினர்

(C-6432)

# இன்று ஒரு தகவல்

## புரந்தர தாசர்

கன்னட தேசத்திலே ஒரு இரத்தினக்கல் வியாபாரி இருந்தார். அவர் பெயர் நவகோடி நாராயணன். மிகவும் வசதி படைத்தவர். பெரிய கோடீஸ்வர பரம்பரையைச் சேர்ந்தவர்.

பணம்தான் அவரிடம் தாராளமாக இருந்ததே தவிர மனம் இல்லை.

அடுத்தவர்கள் ஒரு உதவி என்று வந்து கேட்டால் திரும்பிக்கூட பார்க்க மாட்டார். தான தருமம் எதுவும் செய்ய மாட்டார். மற்றவர்களையும் உதவி செய்வதற்கு விடமாட்டார்கள். தடுத்து நிறுத்துவதில் சாலச்சிறந்தவர்கள்.

அவரது மனைவி லஷ்மி அம்மாளுக்கு மிகவும் தாராளமான மனம்... யார் வந்து உதவி என்று கேட்டாலும் ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைப்பவர். இருந்தாலும் அந்த அம்மாவையும் எதுவும் செய்ய விடுவதில்லை. அவரது மனம் எப்போதுமே சங்கடப்பட்டுக்கொண்டே இருக்கும்.

ஒருநாள் அந்த நவகோடி நாராயணன் தனது கடையிலிருந்து வியாபாரத்தை கவனித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் வயதான ஒருவர் அவர் முன் வந்து நின்றார்.

"ஐயா! என் மகளுக்கு திருமணம். மிகவும் சங்கடமாக இருக்கிறது. பணம் இல்லை. நீங்கள் ஏதாவது நிதி உதவி செய்தால் நலமாக இருக்கும்" என்றார்.

இவர் எப்படி கொடுப்பார்? "அதெல்லாம் ஒன்றுமில்லை. சென்று வா..." என்றார். அந்தப் பெரியவர் இதைக் கேட்டதும் உடனே கடையை விட்டு புறப்பட்டார். நேராக நவகோடி நாராயணன் வீட்டிற்குச் சென்றான்.

அங்கே அந்த அம்மா துளசி பூசை செய்து கொண்டிருந்தார். இந்தப் பெரியவர் தனது நிலைமையை எடுத்துச் சொல்லி உதவி கேட்டார். அந்த அம்மா இவரின் பரிதாப நிலைமையை அறிந்து தனது வைர மூக்குத்தியை கழற்றிக் கொடுத்தார்.

அதை வாங்கிக்கொண்டு அந்தப் பெரியவர் நேராக எங்கே போனார் தெரியுமா? நவகோடி நாராயணன் கடைக்கு வந்தார். இந்த மூக்குத்தியை வைத்துக்கொண்டு பணம் கொடுக்குமாறு கேட்டார். அவர் மூக்குத்தியை வாங்கிப் பார்த்தார்.

"என்ன இது? இது எங்களின் வீட்டு மூக்குத்தி மாதிரி தெரியுது...?" என்று சந்தேகப்பட்டார். "என்ன செய்யலாம்?" என்று யோசனை செய்தார்.

அந்த மூக்குத்தியை ஒரு பெட்டியிலே வைத்து பூட்டினார். "ஐயா! சற்று இங்கே அமர்ந்திருங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு, எழுந்து நேராக வீட்டிற்குச் சென்றார்.

"லஷ்மி இங்கே வா" என்று அழைத்தார். "எங்கே உன் மூக்குத்தி?" என்று கேட்டார்.

"இன்று எண்ணெய் தேய்த்து குளித்தேன். அதுதான் கழற்றி வைத்திருக்கிறேன்" என்றார்.

"எங்கே வைத்திருக்கிறாய் எடுத்துவா பார்க்கலாம்" என்றார்.

அந்த அம்மாவிற்கு பயம் பற்றிக் கொண்டது. எதுவுமே செய்ய முடியவில்லை.

"துளசி அம்மனே! நீ தான் துணை!" என்று வேண்டிக் கொண்டு பெட்டியைத் திறந்தாள்.

அங்கே பார்த்தால்... மூக்குத்தி இருந்தது. உடனே அதை எடுத்து கணவனிடம் கொடுத்தாள்.

நவகோடி நாராயணன் பார்த்தார். உடனே திரும்பிக் கடைக்கு வந்தார். அங்கே வந்து பார்த்தால் அந்தப் பெரியவரைக் காணவில்லை. பெட்டியிலே வைத்திருந்த மூக்குத்தியையும் காணவில்லை. அவருக்கு ஒரே ஆச்சரியம்.

மனைவி கொடுத்த மூக்குத்தியையும் மறுபடியும் எடுத்துப் பார்த்தார். அப்போது ஒரு காட்சி அதிலே தெரிந்தது. பாற்கடலிலே நாராயணன் ஆதிசேஷன் மேலே படுத்திருக்கிறார். எதிரிலே நாரதர் நிற்கிறார். அந்த நாரதர்தான் தான் என்ற உணர்வு நவகோடி நாராயணனுக்கு ஏற்பட்டது. அவ்வளவுதான்! உடனே வீட்டை அப்படியே திறந்து விட்டுவிட்டு மனைவியை அழைத்துக் கொண்டு பண்டரிபுரம் சென்றார்.

"போவதற்கு முன்னர் நமது சொத்துக்களையெல்லாம் ஏழை மக்களிடம் கொடுத்துவிட்டு போவோம்" என்றார்.

"அப்படி செய்யக்கூடாது" என்றார் நாராயணன்.

"என்ன இது... முன்பு போலவே அப்படியே செய்கிறீர்கள்" என்றாள்.

"முன்பு அந்த சொத்து என்னுடையது என்று நினைத்தேன். அது இப்போது பண்டரிநாதனுடையது என்று தெரிந்து விட்டது" என்றார்.

அதனாலே அதை யாருக்கும் கொடுப்பதற்கு நமக்கு என்ன உரிமை? என்று கூறிவிட்டு புறப்பட்டார்.

அப்படி புறப்பட்ட நவகோடி நாராயணன் யார் என்று நினைக்கிறீர்கள்.

அவர்தான் பின்னாடி புரந்தரதாசரா மாறி நிறைய கீர்த்தனைகளையெல்லாம் எழுத்தினார்.

"சேர்! எங்கள் வீட்டுக்கார அம்மாவும் எண்ணெய் தேய்ப்பதற்காக மூக்குத்தியை கழற்றி ஒரு பெட்டியிலே வைத்தார். மறுபடியும் திறந்து பார்க்கும்போது, அது காணாமல் போய் விட்டது" என்றார்.

"ஐய்யய்யோ அதன்பின் என்ன நடந்தது?" என்றேன்.

கடவுளை வேண்டினேன். மறுகணம் திடீரென அந்தப் பெட்டியிலேயே அது வந்து விட்டது சேர்! என்றார்.

"இதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை" என்றேன்.

"எப்படி?" என்றேன்.

"அந்த மூக்குத்தியை நான்தானே எடுத்து ஒரு அவசரத் தேவைக்கு அடகுக் கடையிலே வைத்திருந்தேன்" என்றார்.

அவர்– புரந்தரதாசர்.
இவர்– மனைவிக்கு
நிரந்தரதாசர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரச சிறுவர் ஓவிய விழாவிற்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(சாவகச்சேரி)

கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இலங்கைக் கலைக்கழகத்தின் அரச ஓவியம், சிற்பக்குழு ஆகியவை ஒன்றிணைந்து அரச சிறுவர் ஓவிய விழாவினை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறுவர் உலகில் சிந்தனைக் கலை என்னும் தலைப்பில் நடத்தவுள்ள இந்த ஓவிய விழாவில் 5 வயது தொடக்கம் 18 வயது வரையான சிறுவர்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள பாடசாலைகள், கலைக்கழகங்கள், சமய பாடசாலைகள், கலாசார மத்திய நிலையங்கள் ஊடாக சிறுவர், சிறுமிகள் தமது ஓவியங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தேசிய கலாபவனம் நெளும் கொக்குண மாவத்தை கொழும்பு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் பிரிவு (வயது 5-6), சிறுவர் பிரிவு (வயது 7-9), கனிஷ்ட பிரிவு (வயது10-12), சிரேஷ்ட பிரிவு (வயது 13-15), சிரேஷ்ட திறந்த பிரிவு (வயது 16-18) ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட ரீதியாக கிடைக்கும் விண்ணப்பங்களில் முதல் சுற்றுக்கு 150 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

சிறுவர்களின் 2 ஆம் சுற்றுக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். இரண்டாம் சுற்றில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களில் அதி விசேட விருதுக்காக ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் ஒருவர் வீதம் 5 பேரும் விசேட விருதுக்காக தலா 10 மாணவர்கள் வீதம் 50 பேரும் விசேட சான்றுதழ்களுக்காக தலா 15 மாணவர்கள் வீதம் 75 பேரும் திறமைச்சான்றிதழுக்காக தலா 20 மாணவர்கள் வீதம் 100 பேருமாக மொத்தம் 230 மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அதிசிறந்த சான்றிதழ் பெறும் மாணவர்களுக்கு பணப்பரிசுடன் சான்றிதழ் மற்றும் பதக்கமும் மற்றைய வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களுடன் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

ஒக்டோபர் மாதத்தில் நடாத்தப்படும் சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் இதற்கான பரிசில்கள் வழங்கப்படுமென கலாசார திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-3-29)

## மஹோற்சவம்

மாதகல் நுணசை திருவருள் மிகு முருக மூர்த்தி ஆலய நந்தன வருட மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை 11.30க்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 85 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 35 | 20 | 40 |
| தக்காளி | 70 | 60 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 10 | 10 | 30 |
| கரட் | 35 | 40 | 60 |
| பூசணி | 20 | 20 | 30 |
| புடோல் | 40 | 40 | 30 |
| வாழைக்காய் | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-80 | 50-60 |
| பெரிய வெங்காயம் | 85 | 100 | 90 |
| பாகற்காய் | 100 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 80 | 70 | 90 |
| பீற்றூட் | 20 | 40 | 60 |
| கறிமிளகாய் | 40 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 300-320 | 350 | 280 |
| போஞ்சி | 40 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 20-25 |

## இராசி பலன்

*24.04.2012*
*(சித்திரை 03, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*திருதியை முன்னிரவு 7.11 மணிவரை*
*ரோகினி முழுவதும்*
*இராகுகாலம் 3.00-4.30 மணிவரை*
*சுபநேரம் 11.00-1.30 மணிவரை*
*மங்கயற்கரசியார் குருபூசை*
*அக்சய திருதியை*

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வீர்கள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், அம்பிகை வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள்.

**இடபம்** குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், உடல் நலம் சீராகும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள்.

**மிதுனம்** நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம், வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம், சயன சுகக்குறைவான நாள்.

**கடகம்** கௌரவம், அந்தஸ்து உயர்வடையும், நீண்ட தூர பயணம் செய்ய போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைக்கும் நாள், குறைந்தளவில் ஆதாயத்தை எதிர்பார்த்த வேலையொன்றில் பெரியளவில் இலாபம் கிடைக்கலாம், தொட்ட காரியம் துளிர் விடும் நாள்.

**கன்னி** தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், வரவேண்டிய பணவரவுகள் இன்று எளிதில் வசூலாகலாம், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர்.

**துலாம்** பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, கௌரவக்குறைவான நாள்.

**விருச்சிகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், தொழில் முன்னேற்றமுண்டு, போசன நன்மையுண்டு.

**தனுசு** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், சுவாரஸ்யமான நாள்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், கனவுகள் நனவாகலாம், பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கும்பம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், தொழில் நலனில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்களும் ஏற்படலாம், உடன்பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் நன்மையுண்டு.

வளவன்

# ஜெனீவா தீர்மானம் அரசை பணிய வைக்கும் முயற்சியே

## மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர மானம் இலங்கை அரசினை மேற்குலகிடம் பணிய வைப்பதற்கான ஒரு முயற்சியே தவிர தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுத் தருவது நோக்கமல்ல என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் சி.கா. செந்தி வேல் தெரிவித்துள்ளார்.

கட்சியின் வடபிராந்திய பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,




எமது மக்களினை மீண்டும் மீண்டும் இந்தியாவினை நம்புமாறு த.தே.கூ.கூறுவது ஆரோக்கியமான அரசியலுக்கு உகந்ததல்ல. பொதுமக்களால் கடந்த கால வரலாற்றினை கற்கத்தவறியமையினால் தான் இன்று இந் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்றும் நாம் இத்தவறினை மீண்டும் விட்டால் இனப்பிரச்சினை இன்னும் 30 வரு டங்கள் சென்றால் என்ன 60 வருடங்கள் சென்றாலும் தீர்க்கப்படாது.

அடக்கப்பட்ட தேசிய இனத்தின் தினமாக மேதினத்தை அரசியல் கட்சிகள் கொண்டாட முடிபு செய்துள்ளன.

அதை நாம் ஏன் ஒடுக்கப்பட்ட மக்களின் தினமாக யாழ். நகரில் அனுஷ்டிக்கக்கூடாது.

எமது மக்கள் அரசியல் வனாந்தரத்தில் துணையற்று நிர்க்கதியாக்கப்பட்டுள்ள நிலை யில் இங்கு சலுகை அரசியல் நடைபெறு கின்றது.

வடகிழக்கு தமிழ் மக்களின் உரிமைக ளினை வென்றெடுக்க கூடிய தீர்வினை எமது தமிழ்க்கட்சிகள் முன்வைக்கும் என எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை.

தொடர்ந்தும் பிழையான வழிகாட்டல் களுடன் மீண்டுமொரு முள்ளிவாய்க்கா லுக்கு அழைத்துச் செல்ல முற்படுகின்றனர்.

எம்மக்களுக்குள்ளே இருக்கின்ற பிளவு களை பயன்படுத்தியும் எமது கோரிக்கைக ளினை தென்பகுதி மக்களிடம் திரிபுபடுத்தி யும் தமிழீழம் என்ற மாயையை உருவாக்கி தீர்ப்பினைப் பெற்றுத்தராமல் தனது பேரின வாத நிலைப்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

மேதினமன்று நடைபெறவுள்ள நிகழ்வுக ளினை நடத்துவதற்கு எமக்கு யாழ். நகரி லுள்ள மண்டபங்கள் மறுக்கப்பட்டன.

அத்துடன் மேதினத்தில் சுன்னாகத்திலி ருந்து சைக்கிள் பேரணியும் நடத்தப்பட வுள்ளதோடு புதிய உயர்கலைக்கல்லூரியி லும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளதாக வும் அவர் குறிப்பிட்டார். (2-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர் ந்து பன்னிரண்டு தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி வியாழ்க்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை யினர் அறிவித்துள்ளனர். (2-9)

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை-அடைக்கலம் தோட் டம் திருவருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் நந்தன வருட மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர் ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறு நாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி க்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபா லன சபையினர் அறிவித்துள்ளனர். (2-9)

# தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க வடக்கில் தொழில் நீதிமன்றம் இல்லை

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி சுட்டிக்காட்டு

வடக்கில் தொழிலாளர்கள் பிரச்சினைகள் அதிகளவில் காணப்படுகின்ற போதிலும் இங்கு தொழில் நீதிமன்றம் இதுவரை ஸ்தாபிக்கப்படவில்லை என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலளர் சி.கா. செந்திவேல் தெரிவித்தார்.

தொழில்சார் உரிமைகளினை வென்றெ டுப்பதற்கான தொழில் நீதின்றம் இன்று வரையும் வடக்கில் ஸ்தாபிக்கப்படாமல் அரசு மேதினம் கொண்டாடுகின்றது.

எமது மக்கள் அவர்களுக்கு தொழிலாளர் களாக தெரிவதில்லை. பெரும் வர்த்தகர்க ளும் பணமுடையோரும்தான் அவர்களுக்கு வர்த்தகர்களாக தெரிகின்றனர். விவசாயிகள், சிறு தொழிலாளர்கள் தொழிலாளர்களாக தெரிவதில்லை.

தொழில்சார் வழக்கிற்காக எமது தொழி லாளர்கள் அநுராதபுரம், கொழும்பிற்கு செல்லவேண்டிய சூழ்நிலைகளே இங்கு காணப் படுகின்றன. சில அதிகாரிகளுக்கு தொழில் நீதி மன்றம் இங்கு இல்லை என்பதுகூட தெரியாது.

தேசிய ரீதியில் ஒடுக்கப்பட்டவர்களின் தினமாகவே மேதினம் கொண்டாடப்படுகின் றது. இதனையும் அரசியலாக்கும் நடவடி க்கை தொடர்கின்றது.

இன்றும் யாழ். குடாநாட்டில் 6 ஆயிரத் திற்கு குறைவான சம்பளம் பெறும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களின் நலன் கருத்திற்கொள்ளப்படு வதில்லை.

போராட்டங்களின் போதும் பாதிக்கப்பட்ட வறிய தொழிலாளர்களே அவர்களுக்கான தொழில் நீதிமன்று இங்கு அமைக்கப்பட வேண் டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, கோம்பயன் மணல் பிரதேசம்,கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம்,அராலி ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி வதிரிச் சந்தி பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணிக்கு இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர் புடைய முக்கிய இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வர்த்தகர் நெல்லியடியில் உள்ள தனது வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு விடு நோக்கி சென்று கொண்டிருந்த வேளை இவ்வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த வர்த்தகர் வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்த பெண் ஒருவரிடம் வைத்திருந்த தகாத உறவை அறிந்த உறவினர்கள் இரு வரே இவ்வாள் வீச்சை மேற்கொண்டுள்ள தாக விசாரணைகள் மூலம் தெரியவருகின் றது. இத்தகாத் உறவு தொடர்பாக ஏற்கனவே நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

# வளர்ப்பு பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சிகிச்சை


(யாழ்ப்பாணம்)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் வளர்க் கப்படும் பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சத்திர சிகிச்சைகள் நேற்றைய தினம் ஆரம்பமாகி நாளை புதன்கிழமை வரை மேற்கொள்ளப்படவுள்ளதாக சங்கானை மேற் பார்வை பொது சுகாதார பரிசோதகர் வே .ரதீன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை சங்கானை பொது சுகாதார பரிசோதகர் பிரி வுக்குட்பட்ட நிச்சாமம் சரஸ்வதி சனசமூக நிலையம், அராலி வீதி குடியேற்றத்திட்டம், சங்கானை மீன் சந்தைக்கு அருகாமை யிலும் ,

நாளை புதன்கிழமை வட்டுக்கோட்டை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட முதலிகோவிலடி அம்பாள் சனசமூக நிலை யம், செம்பாட்டான் தோட்டம் பொது நோக்கு மண்டபம், வட்டு. கிழக்கு அறிவொளி சனசமூக நிலையம், துணவி வளர்மதி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் வளர்ப்பு பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகர்களுடன் முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-9)



ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானத்தில் சிவக்கன்று மருதப்பு சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட திருநாவுக்கரசு நாயனார் குருபூசையின் நூற்றாண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட அப்பர் அருளமுதம் நூல் வெளியீட்டு விழாவில் நயினை நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வை. மு.ப. முத்துகுமாரசுவாமி குருக்கள் ஆசியுரை வழங்குவதையும் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீசன் நூலை வெளியிட்டு வைக்க அதனை வைத்திய கலாநிதி ஆ. பேரின்பநாதன் பெற்றுக்கொள்வதையும் வெளியீட்டுரையை தென்மராட்சி கல்வி வலய பிரதி கல்விப்பணிப்பாளர் ஆ. சிறிஸ்கந்தமூர்த்தி நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதியிடமிருந்து நீதியையும் பாதுகாப்பையும் பெற்று தாருங்கள்

## தமிழ், முஸ்லிம் மக்கள் ஹக்கீமிடம் மன்றாட்டம்

தங்களுக்கு ஜனாதிபதியிடமிருந்து நீதி பெற்றுத் தரும்படியும் பாதுகாப்பு வழங்கும் படியும் தம்புள்ள பகுதி தமிழ், முஸ்லிம் மக்கள் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை நேற்று முன்தினம் காலை நேரடியாகச் சந்தித்து கேட்டுக் கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு முன்பதாக பௌத்த குருமார் உள்ளிட்ட பெரும்பான்மை சமூகத்தினரால் தாக்கி சேதமாக்கப்பட்ட பள்ளிவாசலை நீதியமைச்சர் நேற்று முன்தினம் காலை சென்று பார்வையிட்டுநிலைமைகளை கருத்தில் கொண்டார்.

பள்ளிவாசலுக்கு மாத்தளை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் திலக் அபேசிரிவர்தன தம்புள்ள மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் திஸ்ஸ பண்டார நாயக்க ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சிலரும் வருகை தந்திருந்தனர்.

அப்போது பள்ளிவாசலில் கூடியிருந்த மக்கள் தங்களால் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்புடன் தொழுகையை மேற்கொள்ள முடியாதெனவும் சுதந்திரமான வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவித்தனர். பள்ளிவாசலைத் தாக்குவதற்கு முன்னிலை வகித்த பௌத்த தேரரினால் தங்களுக்கு அச்சுறுத்தல் இருந்து வருவதாகவும் உயிராபத்து உள்ளதெனவும் முறையிட்டனர்.

பள்ளிவாசலுக்கு வருகை தந்திருந்த தம்புள்ள தமிழ் மக்கள் தங்களது கோயிலும் சம்பந்தப்பட்டவர்களால் தாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட தேரர் தங்களை தம்புள்ளயை விட்டும் வெளியேற்றும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அமைச்சரிடம் முறையிட்டு தங்களுக்கு ஜனாதிபதியிடம் இருந்து பாதுகாப்புப் பெற்றுத்தரும்படி கேட்டுக் கொண்டனர்.

பள்ளிவாசலில் தம்புள்ள முஸ்லிம் மக்களுடன் இரண்டு ரக்அத் தொழுகையை நிறைவேற்றிய அமைச்சர் உடனடியாக ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கிருந்த மக்களிடம் உறுதியளித்தார். அமைச்சரவைக் கூட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரையாடி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் உறுதியளித்தார். (அ-2)

## மின்னல் தாக்கத்தினால் 15 பேர் உயிரிழப்பு

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி 22 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலையில் நேற்று காலை மின்னல் தாக்கி ஒருவரும் இதேவேளை, எஹலியகொடை பிரதேசத்தில் மின்னல் தாக்கி சிறுவன் ஒருவன் நேற்று முன்தினமும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் 16 வயதுடைய பாடசாலை மாணவரொருவரே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## மாலைதீவு கடற்பயிற்சியில் இலங்கை காவல் படையினரும்

மாலைதீவு கடலில் நேற்று தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கடற்பயிற்சியில் இலங்கை கரையோரக்காவல் படையினர் பங்குபற்றவுள்ளதாக கடற்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு கரையோர காவல் படையினர் இணைந்து நடத்தும் மேற்படி கடற்பயிற்சியில் கலந்து கொள்வதற்காக கரையோரக் கண்காணிப்புக் கப்பலான எஸ்.எல்.என்.எஸ்.சாகர மாலைதீவு நோக்கிப் பயணித்துக் கொண்டுள்ளது.

நாடுகளிடையே நட்புறவை வலுப்படுத்தல், பரஸ்பர செயலாற்றுகையை விருத்தி செய்தல் என்னும் நோக்கங்களுடன் இப்பயிற்சி நடத்தப்படுகிறது. இப்பயிற்சியின் போது கடல் ஆராய்சி, மீட்பு வேலைகள், கடல் மாசுபடுத்தலை தடுத்தல் என்னும் விடயங்களில் கவனம் செலுத்தப்படும்.

இந்நாடுகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அமைந்துள்ளதால் சகல கடலோடிகளுக்குமாக இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மூன்று நட்பு நாடுகளினதும் கரையோரப் படைகளின் இலட்சியமாகும்.

(அ-2)

## வவுனியாவில் இளைஞர் பரிமாற்ற வேலைத்திட்டம்

(வவுனியா)

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் விருத்தி அமைச்சின் அனுசரணையுடன் இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் பரிமாற்ற வேலைத் திட்டம் வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் கிராமத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

மொனராகலையில் இருந்து வருகை தந்த 50 இளைஞர், யுவதிகள் வவுனியா புதுக்குளம் மற்றும் சாஸ்திரிகூழாங்குளத்தை சேர்ந்த 50 இளைஞர், யுவதிகளுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மொனராகலையில் இருந்து வருகை தந்த இவ் இளைஞர், யுவதிகள் புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் முன்றலில் இருந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரனுடன் அழைத்து வரப்பட்டனர். இதனை அடுத்து சாஸ்திரிகூழாங்குளம் செந்தூரன் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற விசேட வைபவத்திலும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 28 ஆம் திகதி வரை வவுனியாவில் தங்கியிருக்கவுள்ள இவர்கள் இக்கிராமங்களில் சிரமதானப்பணிகள் மற்றும் கல்விச்சுற்றுலாவிலும் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் இவர்கள் முல்லைத்தீவுக்கும் செல்லவுள்ளனர். (அ-266)

## எல்லை மீறி செயற்பட்டால் கன்னத்தில் அறைவேன்

எல்லை மீறி செயற்பட்டால் கன்னத்தில் அறைவேன் என அமைச்சர் டிலான் பெரேராவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவேசமாக எச்சரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்தில் இணைந்து கொண்ட அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்னவின் அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக அமைச்சர் டிலான் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அமைச்சர் டிலான் பெரேராவின் ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அமைச்சரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பவம் தொடர்பாக அமைச்சர் கடுமையாக எச்சரித்து தலை,கால் தெரியாமல் குடித்துவிட்டு மீண்டும் இவ்வாறு செயற்பட்டால் கன்னத்தில் அறைவேன் என ஜனாதிபதி ஆவேசத்துடன் எச்சரித்துவிட்டு தொலைபேசியை துண்டித்தார். (அ-2)

## சிறுவர் இல்லங்கள் மனித நேயத்துடன் செயலாற்றுவதே காலத்தின் தேவை

### யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு



நாம் மனிதர்களாக வாழப்பழக வேண்டும். பணத்திற்காக சிறுவர் பராமரிப்பு இல்லங்களினை நடாத்தி எல்லாவற்றினையும் இழந்து நிற்கின்ற பாலகர்கள் மீது கொடுமைகள் விளைவிக்கக் கூடாது என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வென் அதபகஸ்கத சதாராம கீர்த்தி ஸ்ரீ சுமண சித்தார்த்த கல்யாண திஸ்ஸபிக்கான தேரோ வினை கௌரவிக்கும் நிகழ்வு இராணுவத் தினரின் ஏற்பாட்டில் யாழ். விகாரை கட்டடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; அனத்தம் ஏற்படுகின்ற போது மனிதன் இன, மத, மொழி பேதமற்றே அழிவினை எதிர் நோக்குகின்றான்.மதத்தின் பெயராலே ஒரு நாட்டில் கொடு மைகள் இடம்பெறுவதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

சுனாமி அனர்த்தத்தின் போதும் இன மத மொழி பாகுபாடு இல்லாமல் ஒவ்வொரு வருக்கொருவர் உதவி செய்தே வாழ்ந்தோம்.

நான்கு மதங்களிலும் உண்மையாக வாழ்கின்றவர்கள் கடவுளாகப் போற்றப்படுகின்றார்கள்.

நாம் கடவுளாகளாக வாழ முயற்சிக்கா விட்டாலும் சாதாரண உணர்வுகள் கொண்ட மனிதர்களாகவாவது வாழ முயற்சி செய்ய வேண்டும்.

ஊர் இழந்து உறவிழந்து மொத்தத்தில் எல்லாவற்றினையும் இழந்து நிர்க்கதியற்று வாழ்வின் விளிம்பில் நிற்கும் சிறார்களுக்கு பணத்தினை காட்டி வசதியினைக் காட்டி பணம் வசூலிப்பதற்காக இயக்கப்படும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் அனுமதித்து கொடுமைகளிலும் கொடுமை செய்கின்றனர்.

ஒரு மதத்தில் சொல்லப்படுகின்ற மனித கோட்பாடுகளை தான் நாம் வணங்க வேண்டும்.

கடவுள் மாடமாளிகைகளில் வாழ்பவர் அல்ல் துன்பப்படுகின்ற துயரப்படுகின்ற ஏழை மக்கள் மீதே கடவுள் வாழ்கின்றார். நாம் அவர்களுக்கு உதவி செய்தால் கடவுளின் அருள் தானாகவே வந்து சேரும்.

இன்றும் போர்க்கால வடுக்கள் ஆறாத மக்கள் எங்களுள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

மேலும் இந் நிகழ்வில் யாழ். நீதிமன்ற நீதவான், யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், வட மாகாண கல்விப் பணிப்பாளர்,யாழ் மாநகர சபை முதல்வர் மற்றும் படையதிகாரிகள் சமயப் பெரியோர்கள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் இறுதியில் மாணவர்களுக்கான காலணிகளும் வழங்கப்பட்டன.

(அ-2-4)

## மட்டு.ஊறணியில் விபத்து; மூவர் காயம்!

மட்டக்களப்பு ஊறணியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் காயம் அடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாசிக்குடா இருந்து சுற்றுலா சென்று திரும்பிய பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றது.

திருப்பெருந்துறை பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்த தாய் ,தந்தை மற்றும் மகன் ஆகிய மூவரும் ஊறணிச் சந்தியில் பேருந்தைக் கடக்க முற்பட்ட வேளையில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது மூவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# தமிழ் பிரதிநிதிகளும் மக்களும் இணைந்து அஹிம்சை வழியில் போராட வேண்டும்

## விக்கிரமபாகு தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைத் தமிழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்குக, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துக, 13 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றெல்லாம் இலங்கைக்கு இந்தியா கூறினாலும் மஹிந்த அரசானது அதனை நடைமுறைப்படுத்தாது. இந்த அரசானது தமிழ் மக்களை அடிமைப் படுத்தியே ஆட்சி செய்யும் என நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும் தெஹிவளை கல்கிஸை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்குச் சென்று திரும்பியுள்ளமை குறித்து நேற்று முன்தினம் மாலை தமிழ் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கை வந்து பல விடயங்களை மஹிந்த அரசுக்கு கூறிவிட்டு சென்றுள்ளது. தமிழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்குக, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துக,13 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றெல்லாம் பல விடங்களை மஹிந்த அரசாங்கத்துக்கு இந்திய நாடாளுமன்றக் குழு கூறிவிட்டு சென்றுள்ளது.

அதேவேளை, சர்வதேச நாடுகளும் ஜெனீவா தீர்மானத்துக்கு பின்னர் இலங்கைக்குபல அறிவுரைகளை கூறியுள்ளது. ஆனால், இவற்றையெல்லாம் ஜனாதிபதி கேட்கப் போவதில்லை. தான் நினைத்த மாதிரித்தான் இந்த அரசு செயற்படும்.

குடும்ப ஆட்சி செய்து இனவாதத்தை கக்கி வரும் அரசானது தமிழ் மக்களை அடிமைப் படுத்தியே வைத்திருக்கும். இது மஹிந்த அரசின் குணமாகும்.

எனவே, தமிழ் மக்களும் தமிழ் பிரதி நிதிகளும் அகிம்சை வழியில் போராட வேண்டும். அவ்வாறு செய்தால் தான் தமிழ் மக்கள் தம் உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம் என விக்ரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (2)

## தமிழ்த்தினப் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலய வலயமட்ட தமிழ்த்தின போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் எழுத்தாக்கப் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

கோட்ட மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

## வெளிநாட்டு அஞ்சல் பொதிகளை சோதனைக்குட்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்துவரும் அஞ்சல் பொதிகளை அஞ்சல் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு முன்பதாக அவற்றை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இலத்திரனியல் உபகரணங்களை கொண்டு சோதனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அஞ்சல்மா அதிபர் ஜீவன் குமாரதுங்க இத் தகவலை தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளிநாட்டில் இருந்து வந்திருந்த அஞ்சல் பொதியொன்றின் மூலம் இலங்கைக்கு போதைப்பொருள் கொண்டுவர முயற்சித்த சம்பவமொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அஞ்சல்மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## பெரிய வெங்காய உற்பத்தியை அதிகரிக்க விவசாய அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்தாண்டு முடிவுக்குள் பெரிய வெங்காய இறக்குமதி முற்றாக நிறுத்தப்படுமென விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தம்புள்ள கனேவெல பிரதேசங்களிலுள்ள பெரிய வெங்காய செய்கைகளை பார்வையிடும் விஜயத்தின் போது அமைச்சர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். ஐம்பது சதவீதமான தேவை தற்போது எட்டப்பட்டுள்ளதாகவும் இவ்வாண்டு முடிவுக்குள் இச்சதவீதம் 75 சதவீதமாக அதிகரிக்கப்படுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, பொலநறுவை, அநுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் பெரிய வெங்காயச் செய்கையை ஊக்கப்படுத்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதன் மூலம் எதிர்காலத் தேவையை நிறைவு செய்வதோடு பெரிய வெங்காயச் செய்கையில் தன்னிறைவு அடையும் அரசின் நோக்கமும் நிறைவேறும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

## கிழக்கு மாகாணசபை தேர்தலின் பின்னர் முதலமைச்சர் பெயர் அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் இவர் தான் என்று பெயர் குறிப்பிடாமலேயே வேட்பாளர்களை நிறுத்தி தேர்தலின் பின்பே முதலமைச்சர் யார் என்பதை அறிவிப்பது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

கிழக்கு முதலமைச்சர் வேட்பாளராக இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நியமிக்க ஜனாதிபதி முன்னர் தீர்மானித்திருந்த போதிலும் அரசியல் கட்சிகள் சிலவற்றிலிருந்து வெளிப்பட்ட ஆட்சேபனையை அடுத்து மேற்படி முடிவுக்கு ஜனாதிபதி வந்துள்ளதாக கூறப்படுகின்றது.

கிழக்குக்கு மாகாணசபை முஸ்லிம் முதலமைச்சர் அல்லது தமிழ் முதலமைச்சர் எனப் பகிரங்கமாக அறிவிப்பதால் அரசாங்கம் சிலவேளை பின்னடைவுகளை எதிர்நோக்கக் கூடுமென ஜனாதிபதிக்கு குறித்த அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. இதனையடுத்தே அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பில் அவர் எடுத்துள்ள தீர்மானத்தை அறிவிக்கும் வகையில் கிழக்கில் போட்டியிடவுள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளைத் தனித்தனியாக அழைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விளக்கம் அளிக்கவுள்ளார் எனக்கூறப்படுகின்றது. (2)

## புதையல் தோண்டிய மூவருக்கு நீதிமன்றம் அபராதம் விதிப்பு

புதையல் தோண்டியது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் மொனராகலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட மூவரை குற்றவாளிகளாக் கண்ட நீதிபதி நந்தனி அபேகுணவர்த்தன 75 ஆயிரம் ரூபாவினை அபராதமாக விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளார்.

மொகராகலை பகுதியில் புராதன விகாரையொன்றின் அருகாமையில் புதையல் தோண்டப்படுவதாக கிடைத்த புகாரொன்றினையடுத்து விரைந்த மொனராகலை பொலிஸார் குறிப்பிட்ட இடத்தை சுற்றிவளைத்து புதையல் தோண்டிக் கொண்டிருந்த மூவரை கைது செய்தனர். மேலும் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பெருமளவிலான உபகரணங்களையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் அவர்கள் மூவரும் மொனராகலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிபதி முன்னிலையில் அம் மூவரும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் நீதிபதி அம் மூவரையும் கடுமையாக எச்சரித்ததோடு தலா இருபத்தையாயிரம் ரூபா என்ற அடிப்படையில் 75 ஆயிரம் ரூபாவினை அபராதமாக விதித்து தீர்ப்பளித்தார். (2)



யா/சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மாணவர்களின் கலைவிழா நாடக நிகழ்வினைப் படத்தில் காணலாம். (படம்:- மல்லாவிச் செய்தியாளர்)

## 125 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லை.மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் முல்லை.மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 125 மாணவர்களுக்கு பாடசாலை காலணி உள்ளடங்கலாக கற்றல் உபகரணத்தொகுதிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முல்லை.மாவட்ட செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் வழங்கப்பட்டவுள்ளது என முல்லை.மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணைப்பாளர் வை.ரஜனிகாந்தன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி திருமதி அனோமா திசநாயக்கா கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பிப்பதுடன் கருத்துரையாற்றவுள்ளார். இந்நிகழ்வில் கிராம சேவையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)

## நெடுங்கேணியில் துப்பாக்கி ரவைகள் வைத்திருந்தவர் கைது

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி பகுதியில் பெருந்தொகை துப்பாக்கி ரவைகளை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்த ரி-56 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் இரண்டாயிரத்து 250 ரவைகள் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட குழுவினர் சந்தேக நபரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

சந்தேக நபர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (2)

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 13.04.2012 - 13.05.2012



## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4, பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்**

**வாய்ப்புகள் வீடுதேடி வரும்! எந்த முடிவையும் எளிதில் மாற்றிக் கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!**

சுறுசுறுப்புக்கு இலக்கணமாக திகழ்பவர்கள் நீங்கள். சொல்லை செயலாக்கிக் காட்டுபவர்கள் தான் மனிதர்கள் என்று செல்லுவீர்கள். தளராத முயற்சியும், துவளாத மனமும் உங்கள் முன்னேற்றத்தின் முதற்படியாக இருக்கும். மற்றவர்கள்செய்ய முடியாததை நீங்கள் செய்துகாட்டுவதுதான் உங்களுக்குரிய தனி சிறப்பாகும்.

உங்களுக்கு இந்த சித்திரைமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் உச்சம்பெறுவது நன்மைதான். அதேநேரத்தில் அர்த்தாஷ்டமசனியும் வக்ரம்பெற்று விளங்குகிறார். எனவே, சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியம் இப்போது துரிதமாக நடைபெறும். செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் உச்சம்பெறும்போது, மிகுந்த நன்மையைக் கொடுக்கும். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, வீடு,

### இது மிகுந்த யோகம்தரும் நேரமாகும் புதிய திருப்பங்கள் ஏற்படப்போகிறது!


இடம் வாங்குவது சம்பந்தமாக எடுத்த முடிவுகளை மறுபரிசீலனை செய்வீர்கள். தாய்வழி பகைமாறும். தன் உடலில் இதுவரை குடிகொண்டு இருந்த நோய்கள் எப்படி விலகியது என்று நீங்களே ஆச்சரியம் அடைவீர்கள். நீண்டதூரப் பயணங்கள் ஏற்பாடு செய்தும் நிறைவேறாது இருந்த உங்களுக்கு, இப்போது பயணம் நிறைவேறி மகிழ்ச்சியைக் கொடுக்கும். பங்காளி பகைமாறி, தங்களுக்குரிய பங்குகளை ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வர்.

என்ன இருந்தாலும், விரய ஸ்தாத்தில் கேது சஞ்சரிப்பதால், விரயங்கள் அதிகரிக்கும். தனாதிபதி உங்கள் இராசியை பார்த்து மாதம் தொடங்குவதால் தனவரவிற்கு குறைவிருக்காது. என்றாலும், பணம் வந்த மறு நிமிடமே செலவாகி விடும். இது போன்ற காலங்களில் குலதெய்வ வழிபாடும் சனீஸ்வரர் வழிபாடும் உகந்தது.

ஏப்ரல் 29 ஆம்திகதி மேட இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இது மிகுந்த யோகம்தரும் நேரமாகும். இராசிநாதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது, பொருளாதாரநிலை உயரும். புதிய திருப்பங்கள் ஏற்படும். அருளாளர்களின் தொடர்பால் அனைத்துக்காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள். வாங்கல்- கொடுக்கல்கள் ஒழுங்காகும். வாளர்ச்சிப் பாதையில் ஒரு படி உயரும் சூழ்நிலை உண்டு.

மிதுன இராசியில் மே 2 ஆம்திகதி சுக்கிரன் சஞ்சரிக்கபோகிறார். இதன் விளைவாக, பிள்ளைகள் வழியில் பெருமைகுரிய சம்பவங்கள் நடைபெறும். திருமண முயற்சிகள் கைகூடும். தெய்வ பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளியூர் மற்றும் வெளிநாட்டு பயணத்திற்கான அறிகுறிகள் தோன்றும். பெண்குழந்தைகளின் கல்யாண தேவைகள் முன்னிட்டு நகைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்களால் பலன் கிடைக்கும். வாகன மாற்றம் செய்ய முனவருவீர்கள். இம்மாதம் கேது ரீதியாக வெள்ளி தோறும் விநாயகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது. வக்ரச் சனி நற்பலன்கள் தரவும், சிக்கல்களிலிருந்து விடுபடவும் சனக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இம்மாதம் தொடக்கத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். வாங்கல்- கொடுக்கல்களை ஒழுங்கு செய்துகொள்வீர்கள். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். சனியின் வக்ர இயக்கம் உடல் ஆரோக்கியத்தை சீராக்க வழி காட்டும். மருத்துவச்செலவுகள் குறையும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் உறவு மேம்படும். குரு உங்களின் இராசிக்கு ஏழாமிடத்தை பார்ப்பதால் குடும்ப ஒற்றுமை கூடவும், மன நிம்மதி கிடைக்கும். தென்முகக் கடவுளை வழிபட்டு வருவது நல்லது.

### ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்! மற்றவர்கள் மனதில் இடம்பிடிக்க டிகத்தான வழியைக் கையாளும் கடக இராசி நேயர்களே!**

அறிவுப்பூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் அறிந்து செயற்படுபவர்கள் நீங்கள். ஒரு காரியத்தை உங்களிடம் கொடுத்தால் யாரைப் பார்த்து, எப்படி முடிக்க வேண்டுமோ அப்படி முடித்து விடுவீர்கள். மற்றவருக்கு பொழுது போகாது, ஆனால், உங்களுக்கோ பொழுது போதாது. நீங்கள் சொல்லும் சொற்களை யோசிக்காமல் சொன்னாலும், அது வெல்லும் சொற்களாகவே மாறும்.

உங்களுக்கு இந்த சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்0போது, யோகாதிபதி செவ்வாயைக் குரு பார்க்கிறார். எனவே, குரு மங்கள யோகமும் செயற்படும். குரு சந்திர யோகமும் செயற்பட்டு மாதம் தொடங்குகிறது. எதை நீங்கள் நினைத்தீர்களோ அது வெற்றிபெறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கைகூடும். ஆசைப்பட்டவர்களை அடைய நினைக்கும்போது முன்பெல்லாம் சிறு குறுக்கீடுகள் வந்திருக்கலாம். குறிப்பாக வீடு வாங்குவது, வேலையில் சேர்வது, அரசியலில் பொறுப்புகளை மேற்கொள்வது போன்றவற்றில் நீங்கள் ஆசைப்பட்டிருந்தால் அவைகளுக்கெல்லாம் குறிக்கீடு சக்திகள் ஏராளமாக வந்திருக்கலாம். அந்த எதிர்ப்புகளை முறியடிக்கிற ஆற்றல் குருவின் பார்வைக்கு உண்டு.

எனவே, பார்க்கும் குருவைப் பலப்படுத்த குரு கவசம் பாடி பரிகாரம் செய்யுங்கள். அதோடு மட்டும் அல்லாமல் அர்த்தாஷ்டம சனியும் பின்னோக்கிச்சென்று மூன்றாமிடத்தில் இப்போது சஞ்சரிக்கிறார். எனவே, வழக்குகளில் வெற்றி கிடைத்து வருமான பெருக்கமும் ஏற்படப் போகிறது. அண்ணன், தம்பிக்குள் உள்ள பகைமை மாறி பாசம்கூடும். இட மாற்றம் ஊர் மாற்றங்கள் வருவது போல் இருந்து மாறிவிடலாம். மேலதிகாரிகளின் ஆதரவோடு உத்தி யோகத்தில் இருப்பவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

மேட இராசியில் புதன் சஞ்சரிக்கும் நேரம் உங்களுக்கு மேன்மைகள் அதிகம் வந்துசேரும் நேரமாகும். அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். 3, 12 க்கு அதிபதியான புதன் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது தொழிலில் எதிர்பாராத சில விரயங்களை ஏற்படுத்தினாலும், புதிய ஒப்பந்தங்கள் மூலம் ஒரு தொகையை வர வழைத்துக் கொடுப்பார். கூட்டு முயற்சிகள் தனி முயற்சியாக மாறலாம்.

மிதுன இராசியில் மே 2 ஆம் திகதி சுக்கிரன் பெயர்ச்சி ஆகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். தங்கம், வெற்றி போன்றவைகள் வாங்க, எடுத்த முயற்சி கைகூடும். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அந்நிய தேசம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் அனுகூலம் தரும். பெண்வழிப் பிரச்சினைகள் தீரும். பிள்ளைகள் வழியில் வரும் சுப காரியப் பேச்சுக்களை முடிப்பதற்கு ஆயத்தமாவீர்கள். மனக்கசப்புகள் மாறும் இந்த நேரத்தில் பணப்புழக்கமும் அதிகரிக்கும். பாராட்டுகூடும். இம்மாதம் வியாழன் தோறும் விரதமிருந்து குருவழிபாட்டை மேற்கொண்டால் குடிப்பழக்கங்களில் இருந்து விடுபட இயலும். குரு கவசம் பாடி தெட்சணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

### இக்காலம் இனிய பொற்காலமாக அமையும் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்

இராசிநாதன் சந்திரனை குரு பார்த்துத் தொடங்கும் மாதம் இது. என்பதால், நேச மனப்பான்மை கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். சனி வக்ரகதியில் இருப்பதால் பக்கத்து வீட்டாரின் பகை மாறும். உடல் நலன்கருதி மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். குரு மங்கள யோகம் உண்டு. கணவன்- மனைவிக்குள் உறவு மேம்படும். கட்டிடங்கள் கட்டும் பணியில் ஆர்வம்காட்டுவீர்கள். செவ்வாய்க்கிழமை அம்பிகை வழிபாடு இலாபம் தரும்.

(தொடரும்)

# நாட்டின் பிரச்சினையை நாமே தீர்க்கவேண்டும்;

# வேறு நாட்டின் பிரதிநிதிகளிடம் கூறுவது முறையல்ல

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

**சில கட்சிகள் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் பொய் யான தகவல்களை வெளியிட்டமை குறித்து கவலை அடைவதாகவும் நாட்டின் பிரச்சினையை நாம் தீர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அதனை வேறுநாட்டின் பிரதிநிதிகளிடம் கூறுவது முறையல்ல எனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இந்திய தூதுக்குழுவில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என பலமொழி பேசும் பிரதிநிதிகள் பல தரப்பினர் காணப்பட்டனர்.

ஆனால் அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறியதும் தாங்கள் அனைவரும் இந்தியர்கள் என்ற அடிப்படையில் செயற் பட்டனர்.

மாறாக தமது நாட்டின் அரசியல் பிரச் சினைகளை இங்கு கூறவில்லை. அதனை நாம் உதாரணமாக கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் தெரிவுக் குழுவில் இடம்பெற வேண்டும்.

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் நம் பிக்கை வைக்க ஏன் தயங்குகின்றன என்று புரியவில்லை எனவும் பசில் கூறியுள்ளார்.

இலங்கை பாராளுமன்ற தூதுக்குழு இந்தி யாவுக்கு அண்மையில் மேற்கொண்ட நல் லெண்ண விஜயத்தின் அடிப்படையிலேயே இந்திய சர்வகட்சி எம்.பிக்கள் குழுவின் இல ங்கை விஜயம் அமைந்திருந்தது.

ஆனால் வழமைக்கு மாறாக இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் இல ங்கை விஜயத்தின் பயண அட்டவணையை இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு பதி லாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகமே ஏற்பாடு செய்திருந்தது.

இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த பயண அட்டவணை ஒழுங்கு செய் யப்பட்டிருக்கும் என நம்புகின்றோம்.

அந்த வகையில் அவர்கள் நாட்டுக்குள் எங்கு விஜயம் செய்ய வேண்டும் என நாங் கள் எதுவும் கூறவில்லை. மாறாக அவர்கள் எமக்கு வழங்கிய பயண அட்டவணைக்கு ஏற்ப நாங்கள் ஏற்பாடுகளை செய்தோம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் சில கட்சிகள் இலங்கையை அசௌகரியப் படுத்தும் வகையில் கருத்துக்களை வெளி யிட்டிருந்தன.

அது தொடர்பில் நான் இந்திய தூதுக்கு ழுவை சந்தித்த போது குறிப்பிட்டிருந்தேன். இறுதியில் மெனிக்பாம் முகாமுக்கு செல்ல வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அந்த நேரத்தில் நாங்கள் அசௌகரியத்துக்கு உட் பட்டோம்.

அத்துடன் எமது வெளிவிவகார அமை ச்சும் அதனை அந்தளவு தூரம் விரும்ப வில்லை. ஆனால் ஜனாதிபதி அதற்கு இட மளிக்குமாறு கூறினார்.

அதன்பின்னர் இலங்கை வந்த இந்திய குழுவினர் என்னை சந்தித்தனர். அவர் களுக்கு நான் வடக்கின் அபிவிருத்தி குறித்து விளக்கிய போது அவர்கள் மீள்குடியேற் றப்பட்ட பிரதேசங்களுக்கும் செல்லவேண்டும் என்று கோரினர். உடனடியாக அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்தோம்.

இந்தியாவின் அரசியல் நிலைமைக ளுக்கு மத்தியில் குறிப்பாக தமிழகத்தில் இரண்டு கட்சிகள் தமது பிரதிநிதிகளை அனுப் பாத நிலையிலும் இந்திய குழுவினர் இலங்கை வந்தமை குறித்து அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

இந்தியாவின் பல கட்சிகள் இதனை தடு க்க முயற்சித்திருந்தன. ஆனால் அந்த முய ற்சி பலனளிக்கவில்லை எனவும் பசில் ராஜ பக்ஷ கூறியுள்ளார். (2)

# மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படக்கூடிய சாத்தியமில்லை

(கொழும்பு)

விரைவில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படக்கூடிய சாத்தியமில்லை என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் வெகுவிரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

எனினும் கூடிய விரைவில் தேர்தல் நடத் தப்படக்கூடிய சாத்தியமில்லை என பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் கிழக்கு, சப்ரகமுவா மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்படக் கூடும் என அரசியல் கட்சிகள் ஊகம் வெளி யிட்டிருந்தன.

தேர்தல்கள் தொடர்பில் இதுவரையில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வில்லை என பிரதித் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

பதவிக்காலம் நிறைவடைதல் அல்லது மாகாண சபையை கலைத்தல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே தேர்தல் நடத்தப்பட முடி யும் என அவர் தெரிவித்துள்ளார். (2)

# மதங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது-ஜே.வி.பி. குற்றச்சாட்டு

நாட்டில் மதங்களுக்கு இடையில் முரண் பாட்டை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருவதாக ஜே.வி.பி. கட்சி குற்றம் சுமத்தியு ள்ளது.

அரசியல் நோக்கங்களுக்காக சிலர் மேற் கொண்டு வரும் முயற்சிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரி வித்துள்ளார்.

நாட்டில் புனிதப் போர் வெடிக்க மக்கள் காரணமாக அமைந்து விடக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளர்.

இனவாத யுத்தத்தினால் நாடு மூன்று தசாப்த காலமாக எதிர்நோக்கிய துன்பங்கள், துயரங்கள் போதுமானது. பிரச்சினைக்கு தீர்வு காண்பதை விடுத்து அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் பிரச்சினையை மேலும் தூண் டும் வகையில் செயற்படுகின்றமை வருத்த மளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## எழுத்தாளர் கௌரவிப்பு

உலக புத்தக தினத்தையொட்டி எழுத் தாளர் கௌரவிப்பு இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை கைதடி பொது நூலகத்தில் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சிற் றம்பலம் துரைராசா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செய லக சமூக சேவை உத்தியோகத்தர் கௌர விக்கப்படவுள்ளார். (2)

# மேதின ஊர்வலத்தை நடத்துவது குறித்து ஐ.தே.க. தலைவர்களுக்கு மேர்வின் அறிவுரை

(கொழும்பு)

மேதின ஊர்வலத்தை எங்கு நடத்துவது என்பது தொடர்பாக ஐ.தே.க. தலைவர்கள் மோதலில் ஈடுபட்டுள்ளதாக பொதுமக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா கூறி யுள்ளார்.

களனியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

வரலாற்றில் முதல்தடவையாக இப்புது வருடத்தின் பின் புதிய வகை போட்டியொன்று ஐ.தே.கவின் இரு அணிகளிடையே ஏற் பட்டுள்ளது.


வடக்கிலா கொழும்பு வாழைத்தோட்டத் திலா மேதின ஊர்வலத்தை நடத்துவது என் பதே இப்போட்டியாகும்.


இந்நாட்டில் பாரிய பிரச்சினைகள் உள் ளன. மக்களின் பிரச்சினைகள் குறித்து நாம் கலந்துரையாட வேண்டும்.

ஆனால் மேதின ஊர்வலம் தொடர்பாக அந்த கட்சி விவாதிக்கின்றது என அவர் கூறினார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க வும் ஏனையோரும் யாழ்ப்பாணத்தில் மே தின ஊர்வலத்தை நடத்த முயற்சிப்பதாகவும் ஆனால் ஐ.தே.க. பிரதித்தலைவர் சஜித் பிரே மதாசவும் வேறு சிலரும் கொழும்பு வாழைத் தோட்டத்தில் மேதின ஊர்வலத்தை நடத்த முயற்சிப்பதாகவும் அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

இம்மோதலை நிறுத்தி இணக்கப்பா டொன்றை காணுமாறும் அத்தினத்தில் ஆலய மொன்றுக்கு சென்று ஆன்மீக நடவடிக்கை களில் ஈடுபடுமாறும் ஐ.தே.க. தலைவர் களை அமைச்சர் மேர்வின் சில்வா கோரியுள் ளார். (2)





தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலய வருடாந்த தேர் உற்சவத்தின்போது...

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 110

இத்திட்டம் செயல் முனைப்பானதாயும் உறுதியானதாயுமிருந்தது. பிரதான தாக்குதல்களின் திசையை தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமானதாயிருந்தது. சோவியத் துருப்புகள் வெற்றி அடையும்போது இவை, தெற்கு உக்ரேன் படைத் தொகுதியின் பிரதான சக்தியாகிய 6-வது ஜேர்மனியப்படைப் படையை சுற்றி வளைத்து 3-வது, 4-வது ருமேனியப்படைகளை இதிலிருந்து தனிமைப்படுத்தி அவற்றை தனித்தனியே ஒழித்துக்கட்ட வழிகோல வேண்டும் முக்கிய அடிகள் எதிரியின் தற்காப்பு மற்றும் படைத் திரட்டின் மிகவும் புண்படத்தக்க இடங்களின் மீது 2-வது உக்ரேனிய சேனையின் மண்டலத்தில் பலப்படுத்தப்பட்ட தீர்கு-ஃப்ருமொஸ் மற்றும் யாஸ்ஸி பிரதேசங்களுக்கு இடையிலும், 3-வது உக்ரேனிய சேனையின் மணிடலத்தில் பாசிச ஜேர்மனிய மற்றும் ருமேனியத் துருப்புகளின் இணைப்பு இடத்திலும்- திட்டமிடப்பட்டன. முற்றுகை முழுமை பெறும் எல்லையாக புருட் ஆறு தேர்ந்தெடுக்கப்பட்டதானது, எதிரியின் கிஷினேவ் படைத்திரட்டு பின்வாங்கிச் செல்லும் பாதையைத் தடுக்கும் கடமையை நிறைவேற்றுவது எளிதாக்கியது.

இரண்டு சேனைகளிலும் பீரங்கிப் படைத் தாக்குதலை மூன்று காலகட்டங்களில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. 2-வது உக்ரேனிய சேனையில் பூர்வாங்கப் பீரங்கிப்படைத் தாக்குதலை 90 நிமிடங்களும் 3-வது உக்ரேனிய செனையில் 105 நிமிடங்களும் தொடர முடிவு செய்யப்பட்டது. தாக்குதலுக்கான பீரங்கிப்படை ஆதரவு 2-வது உக்ரேனிய சேனையல் 2 கி.மீ ஆழத்திற்கு இரட்டைப் பீரங்கித் தாக்குத்தல் அலை மூலமாயும் 3-வது உக்ரேனிய சேனையில் 2.5-5கி.மீ. தற்காப்பின் ஆழத்திற்கு ஒரேபீரங்கித் தாக்குதல் அலை மூலமும் நிறைவேற்றப்படவேண்டும். தற்காப்பின் ஆழத்தில் சண்டை நடைபெறும்போது இரண்டு சேனைகளிலுமே எதிரியின் ஆதார நிலையங்கள் மீது தொடர்ச்சியாக குண்டு மழை பொழிந்து கொண்டே துருப்புகளுடன் பீரங்கிப்படை செல்வதென திட்டமிடப்பட்டது.

சோவியத்பீரங்கிப்படை இயக்கத்தின் ஒருசிறப்பு அம்சத்தை தனித் தனியாகக் குறிப்பிட வேண்டும். 3-வது உக்ரேனிய சேனையில் பூர்வாங்கப் பீரங்கிப்படைத்தாக்குதலின் போது குண்டு வீச்சு பொய்யாக எதிரியின் தற்காப்பின் ஆழத்திற்கு மாற்றப்பட்டது. இதே நேரத்தில் முதல் படை வரிசைத் துருப்புகள் உர்ரா என்ற முழக்கங்களுடனும் பலத்த ஆயுத-பீரங்கி முழக்கங்களுடனும் முன்னேறித் தாக்குவதைப் போன்று நடித்தால் எதிரி மறைவிடங்களை விட்டு வெளியேறி தொடங்கிய தாக்குதலை முறியடிப்பதற்காக பதுங்கு குழிகளுக்குச் செல்லுமாறு கட்டாயப் படுத்தப்பட்டான். அப்போது பீரங்கிப்படை, குண்டு வீச்சை மீண்டும் முதல் பதுங்கு குழிகளுக்கு மாற்றி எதிரிக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியது.

நடவடிக்கையின்முதல் இரண்டு, மூன்று தினங்களுக்கு எதிரியின் தற்காப்பைப் பிளந்து செல்ல தரைப் படைகளுக்கு உதவி, இப்பிளவினுள் மொபைல் துருப்புகளை அனுப்ப வகை செய்யும் கடமை இரண்டு சேனைகளின் விமானப் படைக்கும் அளிக்கப்பட்டது. அடுத்து வந்த நாட்களில் செயல்முறை ஆழத்தில் மொபைல் யூனிட்டுக்களின் இயக்கத்திற்கு உதவுமாறும் எதிர்ப்பு மையங்கள், பின்வாங்கிச் செல்லும் துருப்புகள், இருப்புப்பாதை மையங்கள், ஆறுகளை எதிரி கடக்கும் இடங்கள் ஆகியவற்றைத் தாக்குமாறும் இதற்குக் கட்டளையிடப்பட்டது.

நடவடிக்கையின் தயாரிப்புக்கான சிறப்பு அம்சங்களில் தாக்குதலுக்கான தயாரிப்புகளை மூடி மறைக்கும் பொருட்டு படைத் தலைமை மேற்கொண்ட செயல்முறை உருமாற்ற நடவடிக்கைகளையும், சோவியத்துருப்புகளின் பிரதான தாக்குதலின் திசை சம்பந்தமாக எதிரிக்கு குழப்பத்தை ஏற்படுத்தியதையும் குறிப்பிடவேண்டும் உதாரணமாக, 2-வது உக்ரேனிய சேனையின் படைத் தலைமை வலது பிரிவிற்கு அருகே முக்கிய நெடுஞ்சாலையும் இருப்புப் பாதையும் சென்ற ரொமான் திசையில் முக்கிய தாக்குதல் படைத் திரட்டைக் குவிப்பதாக பாவனை செய்தது. இங்கே 60 டாங்கி அட்டை மாதிரிகளும் 400 பீரங்கி அட்டை மாதிரிகளும் தயாரிக்கப்பட்டு திரட்டை குவிப்பதாக பாவனை செய்யப்பட்டது. இவையனைத்தும் எதிரியின் கவனத்தைச் சிதறடித்தது. நடவடிக்கை தொடங்கவதற்கு ஒரு நாள் முன்னராகத்தான் எதிரியால் பிரதான தாக்குதல் திசையைக்கண்டு பிடிக்க முடிந்தால், எந்தவித கணிசமான எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இயலவில்லை.

3-வது உக்ரேனிய சேனையிலும் துணைத்திசையில், 5-வது முக்கிய தாக்குதல் படையின் மண்டலத்தில் முக்கிய தாக்குதல் படைத் திரட்டைக் குவிப்பதுபோல் நடிக்கப்பட்டது. இங்கும்தீவிர பூர்வாங்கச் சண்டை நடந்தது, 17-வது வான்படையின் விமானங்கள் எதிரி தற்காப்பின்மீது முறையாக குண்டுவீசின. 5-வது முக்கிய தாக்குதல்படைக்கு திராக எதிரி தொடர்ந்து 6-வது ஜேர்மனியப் படையின் பெரும் சக்திகளை நிறுத்தி வைத்திருக்கும் அளவுக்கு இந் நிறுத்தப்பட்டன. தீவிரமாக வேவு பார்ப்பது நடத்தப்பட்டது. பலப்படுத்தப்பட்ட தீர்கு-ஃப்ருமொஸ் வட்டத்தின் நீண்ட கால பீரங்கி சடும் இடங்கள் மீது முறையாக சுடப்பட்டது. போர்முனையின் இடப்பிரிவிலும் முக்கிய தாக்குதல் படைத் நடவடிக்கைகள் பயன்மிக்கவையாக இருந்தன. இது பென்தேரிக்குத் தெற்கே இருந்த தாக்கு முனையிலிருந்து- இங்கேதான் சேனையின் பிரதான தாக்குதல் தொடுக்கப்பட்டது. எதிரியின் தற்காப்பைப் பிளந்து சென்றபோது சோவியத் துருப்புகள் வெற்றிபெற பெரும் முக்கியத்துவம் உடையதாய் இருந்தது.

3-வது உக்ரேனிய சேனையின் படைத் தலைமையகத்தின் முன்னாள் தலைவர் கர்னஸ் ஜெனரல் பிருஸோவ் நினைவு கூறும்படி எல்லாமே மிகத்துல்லியமக செய்யப்பட்டது...

(தொடரும்)



டாங்கி கொமாண்டர் டார்க்சே-உக்ரேன் சண்டையில் பல வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தவர்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு







பல்லாயிரக்கணக்கான எதிரி இராணுவத்தை வீழ்த்திய சோவியத்தின் குறிபார்த்துச்சுடும் வீராங்கனைகள் (சினைப்பர்ஸ்)




2-ம் உலகப்போரின் போது இறந்த சோவியத் துருப்புகளின் நினைவாகப் பேணப்படும் சின்னங்கள் (உடலின் எலும்புப் பாகங்கள்)

1944-செபஸ்ரோபல் சண்டையை நினைவுகூறும் தேவாலயம்



# அன்பெனும் உருவமெடுத்து வந்த மானிட உருவம் ஸ்ரீ சாய்பாபா



ஆதிக்குச் சமமானது மீண்டும் ஆதியோடு ஐக்கியமாகி அந்தமில்லாததாக ஆவது சமாதி எனப்படும். ஆமாம் சமம்+ ஆதி-சமாதி.

அந்த அந்தமில்லாதது அந்தர்யாமியாக எல்லாவிடத்தும் செறிந்து வியாபித்திருப்பதை பரமாத்மா என்கிறோம்.

அவ்வாறு எங்கும் நிறைந்த பரம்பொருள் ஜீவாத்மாவோடு கலந்து எல்லா மனிதர்களோடும் ஜீவராசிகளோடும் பழகி அவர்களுக்கும் தான் இருப்பதை உணர்ந்த இறங்கி வருதலே அவதாரம்.

அதற்காக அது தனது கற்பனைக்கும் எட்டாத அண்டசராசரங்களையும் ஏன்? அனுவையும் கூட ஆட்டிப்படைக்கின்ற சக்தியை எத்தனையோ மடங்கு சுருக்கி எமக்காக அன்பெனும் உருவமெடுத்து வந்த அந்த மானிட உருவத்திற்குப் பெயர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா!

எம்மை நாம் மறக்கும்போது எம்மை எமக்கு அறிவிக்க வந்தவரே சாயி பாபா. அவரே தன் அமிர்த்த மொழியால் கூறுகின்றார்.

அனைத்து நாடுகளிலும் உள்ள முனிவர்கள், தவசிகள் ஆகியோரது ஒரே பொதுவான குறிக்கோள் யாதெனில், மனிதன் மிருகத்தின் நிலைக்கு சரிந்து விழாது தடுத்து இறைவனை நோக்கி இட்டுச் செல்வதே சம பாவத்தை மனிதன் வளர்த்துக்கொள்ளல் வேண்டும். சத்தியத்திலும் அன்பிலும் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும். அப்போது அவனுள் இருக்கும் இறைவனை அவன் இதயம் பிரதிபலிக்கும். இறைவனை நோக்கிச் செல்லும் பாதையானது முட்புதர்கள் மண்டி வழியே தெரியாது மறைந்து விடும்போது இறைவன் தானே மனித உருவெடுத்து அந்தப் பாதையை திரும்பவும் சரி செய்து சுட்டிக்காட்டுகிறார்.

அதாவது சத்தியமான, என்றும் நிரந்தரமான இறைவன் தர்மமெனும் பாதையை சரிசெய்து, அன்பெனும் இறைஒளியை காட்டி, சாந்தி எனும் அமைதியை ஆனந்தத்தைத் தருகின்றான். உணர வைக்கிறான்.

எங்களுக்குள் இருக்கும் தெய்வீகத்தை உணர வைத்து வெளிப்பட வைக்க அது புனிதமான உடலைத் ததங்கி வந்தது. மீண்டும் உடலை துறந்து தன் இயல்பான பரமாத்ம நிலைக்கு வந்தது.

அது கண்ணுக்குத் தெரியாததால் நாம் தடுமாறுகிறோம். அது தந்த செய்திகள், வாழ்ந்து காட்டிய முறைமைகளை ஆழ்ந்து சிந்தித்துதெளிவுபெற்று நடை முறைப்படுத்தினால் தடுமாற்றம் இல்லாமற்போகும். ஆக மனமாற்றம் - தடுமாற்றத்தைப் போக்கும்.

மனமாற்றம் வருவது சேவையாலும் நமஸ்மரனையாலுமே. தன்னலமற்ற சேவை மூலமே அன்பு, பரிமாற்றப்படுகின்றது. அன்பு ஆணவமாக மாற்றமடையாமல் இருக்க எல்லாம் இறைவனுக்கே அர்ப்பணமாக ஆக்க இறை நாம ஜெபம் உதவி செய்கின்றது. ஏனையோரையும் இறைவனாக நோக்குவதற்கு இது வழியாகின்றது.

ஆணவம் போனால் வருவது அமைதி, அமைதி வந்தால் வருவது அஹிம்சை.

அஹிம்சை என்பது பிற உயிர்களைத் தன்னுயிர் போல் கருதி தீமை செய்யாமல் இருப்பது மட்டுமல்ல. தன்னுடைய தீமையான குணங்களை தான் செய்யும் நல்ல செயல்களால் இல்லாதொழிப்பதுமாகும். தன்னைத் தன்னால் அறியும் நிலைக்கு தன்னையே எடைபோட்டு சுயபரிசோதனைக்கு உட்படுத்தினால் தெய்வீகம் மலரும் என பாபா சொல்கிறார்.

உடலை விட்டாலும் உள்ளம் வாழ்வதால் பரிதவித்த பக்தர்கள் பரவசமடைய ஸ்வாமி விபூதி மழையை பல இடங்களிலும் பொழிந்து வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். பரிகசித்தவர்களும் பக்குவமடைகின்றார்கள்.

சாயி நிலையங்களின் செயற்பாடுகள் ஸ்வாமியின் சமாதியின் பின் மேலும் மேலும் விஸ்தரித்துப் பரவுவதற்குக் காரணமே. சமாதியின் பின் பொழியும் விபூதி, குங்குமம், தேன் மழையே!

கல்லான இதயம் கடவுள் வாழும் கோயிலானால் அதனிலிருந்து தேன் கசியும் காட்சியை தற்போது சுவைக்கின்றோம்.

ஆக எமது இதயத்தையும் கோயிலாக்கி இறைவனை.நாம் பிரதிஷ்டை செய்ய வேண்டும். பாபா கூறுகின்றார்.

இந்த உடல் வெறும் பஞ்ச பூதங்களின் சேர்க்கை மட்டுமே என்று எண்ணக்கூடாது. இதனை இறைவனின் இல்லம். அதாவது கோயில் எனக்கருத வேண்டும். அதனால் மனிதனின் தலையாய கடமை யாதெனில் தன் உடலை தவறான செயல்கள், பழக்கங்களில் ஈடுபடாதவாறும் பொய்மை, அதர்மம் ஆகியவற்றின் பிடியில் சிக்கிக் கொள்ளாத வாறும் பார்த்துக்கொள்வதே. அவன் தன் உடலை உயர்ந்த மனிதப் பண்புகளை ஊக்குவிப்பதற்கும், தெய்வீகப் பாதையை பின்பற்றவும் உபயோகிக்க வேண்டும்.

ஆக பிறந்து, வாழ்ந்து, சமாதி ஆகிய மூன்று நிலைகளிலும் சத்தியசொருபனாக, அன்பின் வாழ்வாக, ஆத்மவியாபகத்தன்மையாக இருப்பவருக்கே சமாதி என்ற நிலை பொருத்தமாகின்றது.

இதையே ஓம் ஸ்ரீ அவ்யக்தரூபினே நமஹ என்று அஷ்டோத்திரத்தில் குறிப்பிடுகின்றோம்.

## பகவான் சத்தியசாயி பாபாவின் முதலாம் ஆண்டு நினைவுதினம்

**சிவஞானம் சிவபாலன்**

அதாவது சிருஷ்டி, ஸதிதி, லயம் என்ற மூன்றிலும் மாறாமல் இருப்பது சத்யமே. இதை உணர்ந்தால் எம்மைவிட்டு ஸ்வாமி பிரியவில்லை என்ற தெளிவு வரும். அதை உறுதிப்படுத்துவதே விபூதி அற்புதமாகும்.

என்றும் ஸ்வாமி எம்மை இயக்குபவர். அதற்குத் தேவை சேவை. நாமஸ்மரனை. அதுமூலம் விளைவது அன்பு. அன்பின் கீர்த்தியே அளவற்றது. அனைவரையும் அரவணைப்பது.

# மஹிந்த பரம்பரை இருக்கும் வரை என்னை எவரும் அசைக்க முடியாது

## சண்டித்தனம் விடுகிறார் மேர்வின்

அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக கப்பம் பெறுதல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

எனினும் இலங்கையில் ராஜபக்ஷ பரம்பரை இருக்கும் வரை தன் மீது எவராலும் கைவைக்க முடியாது என அமைச்சர் மேர்வின் சில்வா கூறி வருகின்றார்.

இந்நிலையில் களனி பிரசேத்தில் அமைப்பாளர் ஒருவரை நீக்குவது, அமைப்பாளர் ஒருவரை மாற்றுவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையிலேயே தங்கியுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களனியில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி களனி அமைப்பாளர் அமைச்சர் மேர்வின் சில்வாவின் இணைப்பு அலுவலகம் ஒன்றை நேற்று திறந்து வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இவ்வாறுகுறிப்பிட்டார். அவர்மேலும்தெரிவிக்கையில்,

களனிப் பிரதேசத்தில் இடம்பெறும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களனி அமைப்பாளர் ஊடகவே செயற்படுத்தப்பட வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவுக்கோ வேறு எந்தவொரு பிரிவுக்கோ அமைப்பாளர் ஒருவரை நீக்கும் அதிகாரம் இல்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு வெளிநாட்டு சூழ்ச்சிகள் செயற்படுத்தப்படுவதாகவும் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. கட்சிகள் அமைச்சர்களின் செயற்பாடுகளை கொண்டு அரசை கவிழ்க்க முயற்சிக்கலாம் எனவும் அதனால் அமைச்சர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (அ-2)

## புலோப்பளைக்கு வருகின்றது மின்சாரம்

(சாவகச்சேரி)

பளைப் பிரதேசத்தில் உள்ள புலோப்பளை கிராமத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவசமாக மின்சார இணைப்பு செய்து கொடுக்க யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

மேற்குறித்த பிரதேச குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான படிவங்கள் பளை பிரதேச செயலகத்தில் வைத்து இலங்கை மின்சார சபை ஊழியர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி கிராமத்திற்கு மின் விநியோகம் மேற்கொள்வதற்கான மின்மாற்றி புலோப்பளை தேவாலயத்திற்கு அருகில் பொருத்தப்பட்டு அண்மையில் லக்ஷபான மின் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# 80 பயனாளிகள் விண்ணப்பித்து 32 பயனாளிகளே தெரிவு

(ஆனைபிறவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட விஸ்வமடு மேற்கு கிராம சேவையாளர்பிரிவில் பகுதிச்சேத வீடு புனரமைப்பதற்கு 80 பயனாளிகள் விண்ணப்பித்தும் 32 பயனாளிகளே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இம் மக்களின் வீடுகள் யுத்தத்தால் சேதமடைந்த போது அதை புனரமைப்பதற்கு 80 பயனாளிகள் விண்ணப்பித்துள்ள நிலையில் 32 பயனாளிகளே யு. என். கபிற்றற் நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய 48 பயனாளிகள் தாம் தெரிவு செய்யப்படாததையிட்டு விசனம் அடைந்துள்ளனர்.

அடிப்படைத்தேவைகளில் ஒன்றான வீடு சேதமடைந்த நிலையில் தாம் புனரமைப்பிற்கு தெரிவு செய்யப்படாதமையையிட்டு வேதனைஅடைந்துள்ளதாக கிராம அபிவிருத்தி சங்கத்தினிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு ஏனையவர்களின் வீடுட்பகுதி சேதத்தையும் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

# ஏழைக்குடும்பத்தவர்களும் அரசியலில் ஈடுபடும் உரிமை இந்த நாட்டில் உண்டு

## பிரதியமைச்சர் கொத்தலாவல

இந்த நாட்டு ஏழைப் பெற்றோரின் பிள்ளைகளும் அரசியல் செய்யும் உரிமையும் சுதந்திரமும் உள்ளது. இவ்வாறு பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல புளத் தெரிவித்துள்ளார்.

சிங்கள பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து அங்கு அவர் உரையாற்றுகையில்,

நான் மக்களுக்கு கடமைப்பட்டுள்ளேன். அவர்களுடைய எத்தகைய அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அதனை செவிமடுத்து சேவை செய்வதே எனது நோக்கமாகும். நாட்டு மக்களுக்கு சேவை செய்வதில் தனிப்பட்ட கால அட்டவணை தேவையில்லை. எனக்கு மக்கள் பலம் உள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு தலைமை தாங்கி மக்களை சரியான பாதையில் வழி நடத்திச் செல்லும் ஒரு தலைவராக விளங்கி வருகின்றார் என்று அவர் கூறினார். (அ-2)





# பழங்களினால் உயிர் தப்பிய சிவாஜி

## அம்புலி மாமா கதைகள்



டில்லி தர்பாரில் முகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப் கோபாவேசமாக உலவிக்கொண்டிருந்தார். சிவாஜி முகலாயர்கள் மீது போர் தொடுத்து அவர்களின் ஆதிக்கத்திலிருந்து பல ராஜ்யங்களை தன் வசம் ஆக்கிக் கொண்டார். அதன் பின்னர் தென்னிந்தியாவையும் தன் வசமாக்கிக் கொண்டார். ஔரங்காபாதின் மீது போர் தொடுத்த சிவாஜி அங்கிருந்த முகலாய சேனையை சின்னாபின்னமாக்கினார். சிவாஜியின் கொட்டத்தை அடக்கியே தீருவேன் என்று சபதம் பூண்ட ஔரங்கசீப் அதற்கான திட்டங்களை வகுத்தார்.

சிவாஜியின் சிறு வயதில் நடந்த நிகழ்ச்சி ஒன்று ஔரங்கசீப்பின் நினைவிற்கு வர அது எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போல் ஆயிற்று. சிவாஜியின் தந்தை ஷாஹாஜி பீஜப்பூர் சுல்தானிடம் பணிபுரிந்து வந்த காலமது! ஒரு முறை சிறுவனாக இருந்த சிவாஜியை தன்னுடன் அழைத்துக் கொண்டு சுல்தானின் தர்பாருக்கு சென்ற அவர் தந்தை சுல்தான் முன் நின்று மூன்று முறை குனிந்து தரையை தொட்டு சுல்தானுக்கு வணக்கம் தெரிவித்தார். சிறுவன் சிவாஜியையும் அவ்வாறு செய்யச் சொன்ன போது அவர் சிலிர்த்துக் கொண்டு வணக்கம் செய்யாமலே வெளி




நடந்தார். தன் மகனின் போக்கை கண்டு ஷாஹாஜி பெருமிதம் அடைந்தார்.

ஏற்கனவே கொடூரமான ஔரங்கசீப்பிற்கு இந்த சம்பவம் ஞாபகம் வர சிவாஜியை நினைத்து அவர் மனம் உலைக்களம் போல் பொங்கியது. தன்னுடைய தந்தை யையே சிறையில் இட்டு பட்டத்திற்கு வந்தவர் ஔரங்கசீப்! பதவிக்குப் போட்டி போடுவார்களோ என்ற நினைப்பில் தன் சகோதரர்கள் மூவரையும் கொடூரமாக கொன்றார். அது மட்டுமா? தன் மூத்த மகனுக்கு ஆயுள் தண்டனை விதித்தார். இரண்டாவது மகனை ஆறு ஆண்டுகள் சிறையில் அடைத்தார்.

அவ்வாறு மிகவும் கொடூரமானவரான ஔரங்கசீப்பை திடீரென்று தாக்கிவிட்டு மறைந்து விடும் சிவாஜியின் நூதன மான யுத்தமுறை ஔரங்கசீப்பையே அதிர் வைத்தது. கொரில்லா யுத்தம் என்று சொல்லப்படும் இந்த நூதனமான தாக்குதலை உலகிற்கு அறிமுகப்படுத்தியதே சிவாஜி தான்! சிவாஜியை சிறைப்பிடிக்க ஔரங்கசீப் ஒரு பெரிய படையை தன் தாய் மாமன் ஷாயிஸ்தாகான் தலைமையில் அனுப்பினார்.

இது நடந்தது 1660 ஆம் ஆண்டில்! ஷாயிஸ்தாகான் மாபெரும் படையுடன் சிவாஜியின் இருப்பிடமான புணேயை அடைந்து சிவாஜியின் வசம் இருந்த நாடுகளை கைப்பற்றினார். ஆனால் அவர் எவ்வளவு முயன்றும் சிவாஜியை சிறைப்பிடிக்க முடியவில்லை. சிறிது சிறிதாக முன்னேறிய முகலாயப்படை சிவாஜி தங்கியிருந்த சிங்கார் கோட்டையை முற்றுகையிட்டது. என்றாவது ஒருநாள் அவரைப் பிடித்து விடலாம் என்று ஷாயிஸ்தாகான் முற்றுகையை நீடித்தார்.

ஓரிரவில் ஒரு கல்யாண ஊர்வலம் முகலாயர்களின் பாசறைகள் இருந்த வழியே சென்று கொண்டிருந்தது. ஊர்வலத்திலிருந்து பிரிந்து வந்த ஓர் அணியினர் திடீரென எதிரிகளின் பாசறைகளில் நுழைந்தனர். அவர்களில் ஒருவர் ஷாயிஸ்தாகான் தங்கியிருந்த பாசறைக்குள்ளேயே நுழைந்து விட்டார். அவர் தான் சிவாஜி! திடீரென நடு இரவில் பாதி உறக்கத்தில் இருந்து விழித்த ஷாயிஸ்தாகான் தன்னெதிரே



சிவாஜியைக் கண்டு பயத்தில் நடுங்கி ஓட முயற்சிக்க சிவாஜி தன் வாளினால் அவர் கை விரல்களை ஒரே சீவாக சீவி விட்டார். ஷாயிஸ்தாகான் எப்படியோ உயிர் தப்பி ஓடி விட்டார்.

அந்த நிகழ்ச்சியிலிருந்து ஷாயிஸ்தாகானுக்கு மரண பயம் ஏற்பட அவர் தன் படைகளுடன் புறமுதுகிட்டு வந்த நிகழ்ச்சி தான் ஔரங்கசீப்பின் கோபத்தை வெகுவாக கிளறியது. உடனே ஜெயசிங் என்ற ராஜபுத்திர தளபதியின் தலைமையில் மற்றொரு மாபெரும் படையை அவர் அனுப்பி வைத்தார். ஜெயிசிங்கின் அபார வீரத்தைப் பற்றி அறிந்திருந்த சிவாஜி இந்த முறை முகலாயப் படையை வெல்வது கடினம் என்று உணர்ந்து கொண்டார்.

அடுத்து நடந்த நிகழ்ச்சி சிவாஜியின் நண்பர்களை வியப்பில் ஆழ்த்தியது. தளபதி ஜெய்சிங்கும் சிவாஜியும் ரகசியமாக சந்தித்து உரையாடினர். ஜெய்சிங்கின் அறிவுரையின் படி சிவாஜி ஔரங்கசீப்பை நேரில் சந்தித்து சமதான உடன்படிக்கை செய்ய ஒப்புக் கொண்டார். சிவாஜியின் ஆதரவாளர்கள் அவரைத் தடுக்க முயன்றனர். ஆனால் சிவாஜி தன் தீர்மானத்தில் உறுதியாக இருந்தார்.

தன் இளம்பிள்ளை சம்புஜியை உடன் அழைத்துக் கொண்டு சிவாஜி ஔரங்கசீப்பை சந்திக்க டில்லி சென்றார். அந்த சமயம் ஔரங்கசீப்பின் பிறந்த தின விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்தது. சிவாஜியை அவமானப்படுத்த விரும்பிய ஔரங்கசீப் அவரை சாதாரணப் பிரஜைகளுடன் உட்காரச் செய்தார். வேண்டுமென்றே ஔரங்கசீப் அவரை புறக்கணிப்பதைக் கண்டு சிவாஜிக்குக் கோபம் உண்டாக அவர் தன் மகனை அழைத்துக் கொண்டு வெளியேறினார்.



அவ்வாறு வெளியேறிய மறுகணமே முகலாய வீரர்கள் அவர்களைப் பிடித்து சிறையில் அடைத்தனர்.

மூன்று மாதங்கள் சென்ற. ஒருநாள் சிவாஜி தனக்கு உடல் நலம் சரியில்லை என்றும் அந்த நிலையில் பத்திய உணவும் பழங்களும் மட்டுமே சாப்பிட விரும்புவதாகவும் அவற்றை தன்னுடைய நண்பர்கள் கொண்டு வந்து தர அனுமதிக்க வேண்டும் என்றும் சிவாஜி ஔரங்கசீப்பிடம் வேண்டிக் கொள்ள சக்கரவர்த்தியும் அனுமதித்தார்.

அதன்படி தினமும் சிவாஜியின் இரு நண்பர்கள் ஒரு பெரிய மூங்கில் கழியின் இருமுனைகளிலும் பெரிய கூடைகளைத் தொங்க விட்டுக் கொண்டு வந்தனர். அந்தக் கூடைகளை தினமும் முகலாய வீரர்களால் பரிசோதிக்கப் பட்ட பின்னரே சிவாஜிக்குத் தரப்பட்டன. பல நாட்கள் கழிந்த பின்னர் காவலர்கள் கூடைகளை பரிசோதிப்பதை நிறுத்தி விட்டனர். ஒருநாள் சிவாஜி தன் உடல் நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும் தன்னை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது என்றும் அறிவித்தார்.

வீரர்களும் அவரை எதுவும் கேட்கவேயில்லை. அன்று இரவு வழக்கப்படி இருவர் கூடைகளைக் கொண்டு வந்தனர். ஆனால் அன்று அவை காலியாக இருந்தன. காலிக்கூடைகள் ஒன்றில் சிவாஜியையும் மற்றொன்றில் அவர் மகனும் நுழைந்துப் பதுங்கிக் கொண்டு சிறையிலிருந்து வெளியே சென்று விட்டனர்.

திடீரென்று சிவாஜி அடைக்கப்பட்டிருந்த சிறையில் ஒரே நிசப்தம் நிலவுவதைக் கண்டு சந்தேகப்பட்ட காவலர்கள் சிறையுள்ளே நுழைந்தனர். போர்வைக்கு அடியில் தலையணைகள் அடுக்கி வைக்கபட்டிருக்க சிவாஜியையும் அவரது மகனையும் மட்டும் காணவில்லை. அதைக் கண்ட காவலர்கள் அதிர்ச்சியடைந்தனர். முதல் நாள் சிவாஜி யைப் போல் தோற்றமளித்த அவருடைய நண்பரான ஹீராஜி தான் சிறையில் தங்கி உடல் முழுக்க போர்த்திக் கொண்டு சிவாஜியையும் அவருடைய மகனையும் தப்பித்து செல்ல வழிவகுத்தார் என்பதும் மறுநாள் ஹீராஜியும் தப்பி விட்டார் என்பதும் அப்போது தான் புரிந்தது.

தப்பி சென்ற இருவரும் சன்னியாசி போல் வேடம் தரித்து தங்கள் அரண்மனைக்கு சென்றனர். அங்கு கவலையுடன். அமர்ந்திருந்த சிவாஜியின் தாய் ஜீஜாபாயிடம் யாரோ இரண்டு சன்னியாசிகள் அவரைப் பார்க்க வந்து இருப்பதாக ஒரு காவலன் அறிவிக்க ஜீஜாபாய் அனுமதி தந்தார். இருவரும் அங்கு வந்து ஜீஜாபாயை வணங்கிய பின் தங்கள் வேடத்தை கலைத்தனர். அவர்களை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் அணைத்துக் கொண்டாள் ஜீஜாபாய்! அவர்கள் தப்பிக்க ஔரங்கசீப்பின் தளபதி ஜெய்சிங் உறுதுணையாக இருந்தார்.

டில்லியில் ஔரங்கசீப்பின் தர்பாரில் ஒரே அமளி ஏற்பட்டது. சிறைக் காவலர்கள் சிவாஜியும் அவர் மகனும் காணவில்லை என்று அறிவித்ததும் ஔரங்கசீப் கோபத்தால் கொதித்தார். காவலர்கள் அனைவரையும் கொன்று விடத் துடித்தார். மீண்டும் தன்வசத்திலிருந்து தப்பிச் சென்ற சிவாஜியை எண்ணி எண்ணி மனம் குமுறினார் ஔரங்கசீப்!






வவுனியா மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆங்கிலப் பயிற்சிநெறி அண் மையில் வவுனியா பிராந்திய உள்ளூராட்சி - உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் செயற் பாடுகள் நடைபெறுவதையும் வளவாளர் ஒருவருக்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# பள்ளிவாசல், ஆலயம் மீதான தாக்குதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## விஜயகலா எம். பி. வலியுறுத்தல்

தம்புள்ள பகுதியில் புனித பூமி என்ற பெயரில் முஸ்லிம் பள்ளிவாசல் சேதமாக்கப் பட்டமையும் இந்து ஆலயம் ஒன்று தாக்கப் பட்டமையும் கண்டிக்கத்தக்க செயற்பாடாகும். இத்தகைய நடவடிக்கைகள் சமூகங்களுக்கு இடையேயும் மதங்களுக்கு இடையேயும் முரண்பாடுகளை தோற்றுவிக்கவே வழி வகுக்கும். எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தம்புள்ளயில் ஹைறியா ஜும்மா பள்ளி வாசல் கடந்த வெள்ளிக்கிழமை பௌத்த பிக்குகளின் தலைமையிலான குழுவினரால் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது. இதே போன்று இந்து ஆலயம் ஒன்றிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் ஆகும் நிலையில் நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுகின்ற இவ்வேளையில் சிறுபான்மை சமூகத்தையும் முஸ்லிம், இந்து மத ஆலயங்களையும் குறிவைத்து நடத்தப்படுகின்ற இத்தகைய தாக்குதல்கள் நாட்டில் மீண்டும் முரண்பாடுகளை தோற்றுவிக்கவே வழி வகுக்கும்.

ஹைறியா ஜும்மா பள்ளிவாசல் கடந்த 65 ஆண்டுகளாக அங்கு இருப்பதாக முஸ்லிம் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இந்து ஆலயமும் பல காலமாக அங்கு இருந்துள்ளது.

எனவே, பல தசாப்த வரலாறு கொண்ட இத்தகைய மத ஸ்தலங்கள் தாக்கப்படுவது அநீதியான செயலாகும்.

தாக்கி சேதமாக்கப்பட்ட பள்ளிவாசலை புனித பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கும் தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விவகாரத்தில் அரசாங்கம் நிதானமாக சிந்தித்து மதக் கலவரங்கள், முரண்பாடுகள் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும்.

எனவே, இத்தகைய தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# நடிகை அஞ்சலாவின் பெயருக்கு போதைப்பொருள் அடங்கிய தபால் பொதி

(கொழும்பு)

நடிகை அஞ்சலா செனவிரட்னவின் பெயருக்கு போதைப்பொருள் அடங்கிய பொதியொன்று அனுப்பப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக அவரிடம் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவினர் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

சுமார் நான்கு மணித்தியாலங்கள் அவரிடம் விசாரணை நடைபெற்றதாக பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவு வட்டாரமொன்று தெரிவித்தது. அவரின் கையெழுத்து மாதிரிகளையும் அதிகாரிகள் பெற்றுள்ளனர்.

போதைப் பொருள் அடங்கிய தபால் பொதியில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரியிலுள்ள கொள்ளுப்பிட்டி வீட்டில் தானும் தனது குடும்பத்தினரும் 7 வருடங்களுக்கு முன்னர் வசித்ததாக ஏஞ்சலா செனவிரட்ன தெரிவித்துள்ளார். பின்னர் தனது கணவர் அப்போது பணியாற்றிய தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அவ்வீடு வாடகைக்கு வழங்கப்பட்டதாகவும் எனவே இச்சம்பவத்துடன் தனக்கு தொடர்பில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பொதியை பெற்றுக்கொள்வதற்காக மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு சென்ற வெளிநாட்டு பிரஜையொருவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். அங்கிருந்து தப்பியோடிய மற்றொரு வெளிநாட்டு பிரஜையை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்குமூலமளிப்பதற்காக தான் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவிக்கு அழைக்கப்பட்டதாக ஏஞ்சலா செனவிரட்ன தெரிவித்தார். தான் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என அவர் கூறினார்.

மேற்படி பொதியை பெறுவதற்கு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு சென்ற நபர்கள் சமர்ப்பித்த தன்னால் வழங்கப்பட்டதாக கூறப்படும் கடிதத்தில் இருந்த கையெழுத்து போலியானது என அதிகாரிகளால் தீர்மானிக்க முடிந்ததகவும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் விவகாரத்தில் நான் ஒருபோதும் சம்பந்தப்படவில்லை என்பதை இது நிரூபிக்கிறது என அவர் கூறினார். (2)

# மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க சதித்திட்டம்

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் மத நல்லிணக்கத்தை சீர் குலைக்க சில தரப்பினர் சதித்திட்டம் தீட்டி வருவதாக முன்னணி சோஷலிச கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மத சமூகங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

விளைச்சலை விற்பனை செய்ய முடியாமல் அவதியுறும் தம்புள்ள மக்களை திசை திருப்பும் நோக்கில் மத அடிப்படைவாத கருத்துக்கள் விதைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

நாட்டில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான முரண்பாடுகள் தூண்டப்படுகின்றனவா என்பதனை மிகவும் உன்னிப்பாக கண்காணிக்க வேண்டுமென முன்னணி சோஷலிச கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தம்புள்ள சம்பவத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் வசந்த பெரேராவிற்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, தமது அரசியல் எதிர்காலத்தை இல்லாமல் செய்யும் நோக்கில் இவ்வாறு அவதூறான பிரசாரங்களை சிலர் மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பெரேரா தெரிவித்துள்ளார். (அ-2)


# நாட்டிய மயில்

இது ஒரு போட்டி நிகழ்ச்சியாகையால்



விதிகள்:-

போட்டியில் கலந்துகொள்ளும் பரதநாட்டிய போட்டியாளர்கள்

1. 18-28 வயதுக்கு இடையில் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
2. போட்டிக்கு விண்ணப்பிக்கும்போது போட்டியாளர்களின் பிறப்புச்சான்றிதழ்களும் இணைக்கப்பட வேண்டும்.
3. போட்டியாளர்கள் நிகழ்வில் வர்ணம் 20-25 நிமிடம் வரை தமிழில் தயாரித்து வழங்கப்படவேண்டும்.
4. பக்கவாத்தியம், இறுவெட்டு அல்லது ஒலிநாடா பாவிக்கலாம்.
5. விண்ணப்பதாரிகள் இலங்கையில் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் அல்லது அவர்களது பெற்றோர்கள் இலங்கையில் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
6. விண்ணப்பங்கள் 31.05.2012 க்கு முதல் கீழ்க்காணும் முகவரியில் சமர்ப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- (இலவச சிங்கள, ஆங்கிலக் கல்விநிலையங்கள்)

| | | |
|---|---|---|
| 29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் T.P:-0217200157 | 27/1, குளுதாகொட வீதி, மௌண்ட்லவேனியா. T.P:-0113088961 | A 9 வீதி, நுணாவில், சாவகச்சேரி, T.P:-0217200738 |

நிகழ்ச்சி அழைப்புக்குழுவின் தலைவர்
M.T.S இராமச்சந்திரன் (சட்டஆலோசகர்)

(சி/6431)

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 25:- இன்சுலின் ஊசிக்கு பதிலாக இன்சுலின் பேனா (Insulin Pen) பயன்படுத்தலாமா?**

பதில்:- தாராளமாக பயன்படுத்தலாம். சொல்லப் போனால் அது நோயாளிக்கு மிகுந்த நன்மை பயக்கும். காரணம் வெளியே செல்லும் பொழுது அதனை எளிதாக எடுத்துச் செல்லாம்.

**கேள்வி 26:- நீரிழிவு நோயாளிக்கு புகை பிடிக்கும் பழக்கம் இருந்தால் அதனால் என்ன பாதிப்பு உண்டாகும்?**

பதில்:- கூடிய மட்டும் எல்லா நீரிழிவு நோயாளிகளும் புகைக்காமல் இருப்பது நன்று. புகை பிடிக்கும் நோயாளிகளுக்கு மாரடைப்பு, பார்வை இழத்தல், கால்களில் இரத்த ஓட்டம் குறைதல், சிறுநீரகம் செயல் இழத்தல் போன்ற பாதிப்புகள் உண்டாகும். இப்படிப்பட்டவர்கள் எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று அலைவார்கள். மருந்து மாத்திரைகளை நிறுத்தி விடுவார்கள். இதன் விளைவாக மேற்சொன்ன அனைத்து பாதிப்புகளும் அவர்களுக்கு வரும்.

**கேள்வி 27:- நீரிழிவு நோய் சுவாச அமைப்பையும் பாதிக்குமா?**

பதில்:- பொதுவாக சுவாச அமைப்பில் இருக்கும் நோய்கள் நீரிழிவு நோயாளியை மிக விரைவில் பாதிக்கும். அவர்களுக்கு சயரோகம் மற்றும் மார்பில் தொற்றுக்கள் உண்டாவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாகும்.

**கேள்வி 28:- நீரிழிவு நோயாளிகளுக்கு மனஉளைச்சல் உண்டாகுமா?**

பதில்:- ஆம், 10% நோயாளிகள் மன உளைச்சலினால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு நீரிழிவு நோய் ஒரு காரணம் என்றால் உணவுக்கட்டுப்பாடு, தினமும் மருந்து மாத்திரைகள் உட்கொள்ளுதல் பிற காரணங்களும் உண்டு.

**கேள்வி 29:- மனஉளைச்சலின் அறிகுறிகள் யாவை?**

பதில்:- எப்போதும் கவலையுடன் அழுது கொண்டிருப்பர், முன்பு விரும்பிய பொருளை இப்போது வெறுப்பர், சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் கோபப்படுவர், சோர்வு, தூக்கமின்மை, பசியின்மை, உடல் வலி போன்றவை பிற அறிகுறிகளாகும்.

**கேள்வி 30:- இந்த மனஉளைச்சலில் இருந்து எவ்வாறு விடுபடுவது?**

பதில்:- இன்றைய தினம் மனஉளைச்சலைப் போக்குவதற்கு ஏராளமான மருந்து மாத்திரைகள் வந்துள்ளன. குடும்பத்தினரும் அவர்களை உற்சாகமாக வைத்திருக்க வேண்டும்.

### உணவு

**கேள்வி 01:- கொழுப்புச்சத்து மிகுந்த உணவு ஏன் நீரிழிவு நோயாளிக்கு தீமை பயக்கிறது?**

பதில்:- உணவு என்பது ஒரு மனிதனின் உயர்ந்த உண்மையான நண்பனாகும். எனினும் அதனைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவில்லை என்றால் அது மனிதனின் பயங்கரமான எதிரியாகிவிடும். உணவிலுள்ள கொழுப்புச்சத்து ஒருவனின் உடல், தொடைகள், இடுப்பு முதலிய பகுதிகளில் படிந்து அவனது உடல் எடையை அதிகரிக்கிறது. கொழுப்புச் சத்து மிக்க உணவு நீரிழிவு நோய்க்கு வழி வகுக்கும் என்பது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அது போல் கொழுப்புச்சத்து இல்லாத உணவு ஒருவனது இரத்தத்திலுள்ள சீனி அளவைக் குறைக்கிறது என்றும் தெரிய வந்துள்ளது. கொழுப்புச்சத்து இல்லாத உணவை நாம் சாப்பிடும் பொழுது ஏற்கனவே நமது உடலில் படிந்துள்ள கொழுப்பு பயன்படுத்தப்பட்டு குளுக்கோஸின் பயன்பாடு அதிகரிக்கின்றது. இன்றைய தினம் இயந்திரங்களில் அரைக்கப்படும் அரிசி, கோதுமை மா, பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் சீனியின் பயன்பாடு அதிகரித்திருப்பதற்கேற்ப நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது.

எனவே, நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த நாம் உண்ணும் உணவில் கொழுப்புச் சத்து குறைவாகவும் தவிட்டுப் பொருள் அதிகமாகவும் இருப்பது அவசியமாகும்.

**கேள்வி 02:- உணவைப் பொறுத்தவரை ஒரு நீரிழிவு நோயாளி என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்?**

பதில்:- நமது பண்டைய மருத்துவ நூல்கள் இந்நோய் (நீரிழிவு) நாம் உண்ணும் உணவினால் கட்டுப்படுத்தக்கூடியது என்று கூறுகின்றன. நீரிழிவு நோயாளிகள் அவர்கள் உடல் எடையை அதிகரிக்காத உணவுகளையே உண்ண வேண்டும். அவர்கள் தங்கள் உணவில் கொழுப்புச்சத்து மற்றும் மாச்சத்து (Carbohydrate) குறைவாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த இரண்டும் உடல் எடையை அதிகரித்து விடும்.

பசுமையும் நார்ச்சத்தும் மிக்க முள்ளங்கி, கொத்தமல்லி தழை, முட்டைக்கோஸ், பசளைக்கீரை, வெந்தயக் கீரை, புதினா, கடுகு இலைகள், கத்தரிக்காய், சுரைக்காய், தக்காளிக்காய், மஞ்சள் பூசணிக்காய், காலிஃப்ளவர், பாகற்காய், வெள்ளை பூசணிக்காய், நூல்கோல், வெள்ளரிக்காய், குடை மிளகாய், காளான் (Mushroom) மற்றும் பச்சை மிளகாய் முதலியவற்றை அதிகம் பயன்படுத்த வேண்டும். இவற்றில் 3-5% மாச்சத்தும் 0.1-2% கொழுப் புச்சத்தும் மட்டுமே உள்ளன. நீரிழிவு நோயாளிகளுக்கு இவை நன்மை பயப்பவையாகும்.

பீட்றூட் இலைகள், பூசணிக்காய் மற்றும் **04** கீரைகளில் 3-5% மாச்சத்தும் 0.1-2% கொழுப்புச்சத்தும் உள்ளன. முள்ளங்கி, பலாப்பழம், வெண்டைக்காய், பீன்ஸ், பப்பாளிக்காய் முதலியனவும் இவ் வகையைச் சேர்ந்தவையாகும்.

மூன்றாவது வகை உணவுப் பொருட்களில் 10-15% மாச்சத்தும் 0.2-1% கொழுப்புச்சத்தும் உள்ளன. அவை சிறிய பாகற்காய், வாழைக்காய், கரட், வெங்காயம், இஞ்சி, பீன்ஸ்.

அதிக மாச்சத்தும் (15-30%) குறைந்த கொழுப்புச்சத்தும் (0.3-0.9%) உள்ளவை- பீன்ஸ், பட்டாணி, பூண்டு, சேனைக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு முதலியவை.

மேலே குறிப்பிட்டுள்ள கீரைகள், காய் கறிகள் மற்றும் கிழங்குகளை நாம் பயன்படுத்தினால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**டாக்டர்.A.K.ஜிங்கான்**

**கேள்வி03:- நீரிழிவு நோயாளி எவ்வகைப் பழங்களைச் சாப்பிடலாம் எவ்வகைப் பழங்களைச் சாப்பிடக் கூடாது?**

பதில்:- நீரிழிவு நோயாளி சாப்பிட வேண்டிய பழங்கள்;நெல்லிக்காய், எலுமிச்சை, தோடம்பழம், தக்காளி, கிர்ணி, தர்ப்பூசணி, பேரிக்காய், நாவற்பழம் போன்றவை நீரிழிவு நோயாளிக்கு அருமையான மருந்தாகும். கொய்யா, ஸ்ரோபெர்ரி, அத்திப் பழம், நாரத்தக்காடி பழங்களான (citrus Fruits) நாரத்தை, சாத்துக்குடி மற்றும் தேங்காய், வேர்க்கடலை, முந்திரி பருப்பு போன்றவற்றையும் நீரிழிவு நோயாளி சாப்பிடலாம்.

எனினும் நீரிழிவு நோயாளிகள் அப்பிள், வாழைப்பழம், திராட்சைப் பழம் முதலியவற்றில் இனிப்பு அதிகம் இருப்பதால் அவற்றை சாப்பிடக்கூடாது.

(தொடரும்)




# நோய் எப்படி உண்டாகிறது?

கப உடற்கூறு கொண்டவர்களுக்கு கழுத்துப் பகுதி தடித்து உப்பு நீர் கலந்து கறுத்துப்போய் பட்டை பட்டையாகத் தோன்றும். மேலும் உடற்கூறுகளுக்குத் தகுந்தவாறு ஒரு சிலருக்கு ஒற்றைத் தலைவலியை உருவாக்கும்.

இதே நீர் தலையில் (சிரசில்) உள்ள தனஞ்செயனில் நின்றுகொண்டு சித்த பிரம்மையை ஏற்படுத்தும். இதே நீர் மூக்கில் நீர்வடியச்செய்து அதுவே சைனஸ் ஆக மாறிவிடும்.

இதே நீர் அதிக பித்த நீருடன் கலந்து விடுமானால் பித்த வாதாக மாறி இரத்த அழுத்தத்தை உண்டு பண்ணுகிறது.

பொதுவாக எந்த உடற்கூறு கொண்டவர்களும் தோள்பட்டை வலி உண்டானால் அது கழுத்துப் பகுதியில் அதிக வியர்வையை உண்டாக்கும். ஒரு சிலருக்கு கழுத்துப் பகுதியிலிருந்து நீர் கீழ் இறங்கி தோள்பட்டைப் பகுதியில் அதிகமான வலியை ஏற்படுத்தும். சில சமயங்களில் இது நெஞ்சுவலி என நினைக்கத் தோன்றும். நெஞ்சு வலிக்கும், தோள் பட்டை வலிக்கும் உள்ள வித்தியாசத்தை கண்டறிவது அவ்வளவு சுலபமல்ல. இந்த கழுத்து வலியானது நாளடைவில் தலைப் பகுதியான சிரசை ஆடச் செய்துவிடும்.

### கழுத்து வலியைப் போக்க

கழுத்து வலியை எக்ஸ்ரே மூலம் படம் பிடித்து பார்த்து உடனே கழுத்துப் பட்டையை அணிய பரிந்துரைக்கின்றனர் இன்றைய நவீன மருத்துவர்கள். ஆனால், இந்திய மருத்துவமுறையில் கழுத்து வலியை முழுமையாகப் போக்க சிறந்த சிகிச்சை முறைகள் உள்ளன. அகத்தியர் அருளிய வர்ம பரிகார முறையில் உள் மருந்துகள் கொடுத்தும் கழுத்து, தோள்பட்டைப் பகுதியில் மூலிகை தைலங்கள் தட்வி சீராக கழுத்தை வர்ம முறையில் நீவி விட்டு வந்தால் கழுத்துப் பகுதியில் உள்ள எலும்புகளைச் சுற்றியுள்ள பசைத்தன்மை இளகி சீரான இரத்த ஓட்டத்தை ஏற்படுத்தும். நாளடைவில் வலி நீங்குவதுடன் மேற்கண்ட குறிகுணங்களும் மாறும்.

இதுபோல் சித்தா, ஆயுர்வேத முறைகளிலும் முழுமையாக கழுத்து வலியை குணப்படுத்தலாம்.

### கழுத்து வலி வராமல் தடுக்க:

இன்றும் கிராமங்களில் பெண்கள் தண்ணீரை தலையில் சுமந்து செல்கின்றனர். மூட்டைகளையும் சுமக்கின்றனர். 100 கிலோ அளவு எடையைத் தாங்கும் கழுத்து. எந்தப் பொருளும் தூக்காதவர்களுக்கு தலையைத் தாங்க முடியாமல் போவதற்கு காரணம் உணவு முறை மாறுபடும், முறையான உடல் உழைப்பும் இல்லாததே.

### உணவு முறை:

நேரம் கடந்த உணவு, அதீத உணவு, எளிதில் சீரணமாகாத உணவு, நொறுக்குத்தீனி, மது, போதைப் பொருள், நீண்ட பட்டினி, வாயு பதார்த்தங்கள் உண்பது. அல்லது அதிக குளிர்ச்சியூட்டும் உணவுகளை உண்பது போன்வற்றை தவிர்க்க வேண்டும்.

மலச்சிக்கலைப் போக்குவதுடன் தினமும் மதிய வேளையில் ஒரு கீரையை சேர்த்து சாப்பிட வேண்டும். இரவில் கீரை, தயிர் இவற்றை தவிர்க்க வேண்டும்.

இரவு நேர உணவு மென்மையானதாகவும் எளிதில் செரிமானம் ஆகக்கூடியதாகவும் இருக்க வேண்டும். பாதி வயிற்றுக்கு சாப்பிடுவது நல்லது. மேலும் படுக்கைக்கு செல்லும் 2 மணி நேரத்திற்கு முன் இரவு உணவை முடித்துவிட வேண்டும்.

குறிப்பாக காலை உணவை தவிர்க்க கூடாது. இரவு முழுவதும் காலியாக உள்ள வயிற்றில் காலை உணவு சாப்பிடாமல் இருந்தால் வயிற்றில் வாய்வு தொல்லை உண்டாகும். இதனால் காலை உணவு கண்டிப்பாக சாப்பிட வேண்டும். புரொய்லர் கோழி, முட்டை, பதப்படுத்தப்பட்ட உணவு, ஊறுகாய் இவற்றை தவிர்ப்பது நல்லது.

### உடல் உழைப்பு

உடல் உழைப்பு என்பது பலருக்கு இல்லாமல் போய்விட்டது. காரணம் கணனி முன் அமர்ந்து வேலை செய்பவர்களே அதிகம் உள்ளனர். இவர்கள் தினமும் அரை மணி நேரமாவது ஒதுக்கி யோகா, உடற்பயிற்சி செய்வது.

யோகா ஆசிரியரை அணுகி முறைப்படி யோகா கற்றுக் கொள்வது நல்லது. மன உளைச்சல், மன எரிச்சல், மன அழுத்தம், டென்ஷன் இவைகளை குறைக்க தியாணம் செய்யலாம்.

அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்பவ ர்கள் சிறிது நேரம் எழுந்து **02** நடந்து பின் வேலை செய்யலாம். குறிப்பாக கணனி முன் வேலை செய்பவர்கள் சிறிது ஓய்வெடுத்து பின் வேலை செய்வது நல்லது.

### படுக்கை

தலையணை அதிக உயரமில்லாமல் இருக்க வேண்டும். பள்ளம், மேடு இல்லாத படுக்கையிலே தூங்க வேண்டும். அதிக குளிர் காற்று உடலில் படும் படியாகத் தூங்கக்கூடாது.

### மருத்துவ முறை

கழுத்து வலிக்கு கழுத்துப் பட்டை, அறுவை சிகிச்சை முறை மட்டும்தான் சிகிச்சை முறை என முன்பு பலர் நினைத்தனர். ஆனால், அறுவை சிகிச்சையில்லாமல் வர்ம பரிகார முறையில் இரண்டு வாரங்கள் தொடர்ந்து உள்மருந்தும் தைலம் தடவி ஒற்றடம் கொடுத்தும் தோள் பட்டை வர்மத்தை, (தோள்பட்டை வாதம்) இயக்கி இறுகிப் போன கழுத்து பகுதிகளை சரிசெய்து வலியைப் போக்கி இரத்த ஓட்டத்தை சீர்படுத்தலாம். இதுவே கழுத்து வலிக்கு சிறந்த சிகிச்சை முறையாகும்.

மேலும் வர்ம மருத்துவத்தில் வயிற்று உபாதைகளுக்கு மருந்து கொடுத்து மீண்டும் கழுத்தில் நீர் கோர்த்துக் கொள்ளாமல் பாதுகாக்கலாம்.

வர்ம சிகிச்சை முறையில் அறுவை சிகிச்சை மற்றும் கழுத்து பட்டை அணியாமல் கழுத்து வலியை பூரண குணமடைய செய்யலாம்.

மேற்கண்ட முறைகளை முறையாகக் கடைப்பிடித்து கழுத்து வலியிருந்து விடுபடலாம்.

(முற்றும்)

# பழ.நெடுமாறன் எழுதிய
# பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம்

தமிழர்களுடைய வரலாற்றில் இரண்டு தமிழ் அமைப்புக்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஒன்று தமிழீழத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்கம். இன்னொன்று தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழர் தேசியக்கட்சி. ஈழத்தில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் அவர்களைப் பற்றித் தமிழகத்தில் தடை செய்யப்பட்ட கட்சியின் தலைவர் நெடுமாறன் அவர்கள் எழுதிய நூல் இங்கே வெளியிடப்படுகிறது.

இது ஒரு வரலாற்று நிகழ்வு என்று உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தனின் பேச்சு அந்த அரங்கத்தில் உணர்ச்சிகளை கொப்பளிக்க வைத்தது. பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம் என்ற பழ.நெடுமாறனின் நூல் வெளியீட்டு விழா ஏப்ரல் 13 மாலை ஐந்து மணிக்கு சென்னை திநகரிலுள்ள சர்பிட்டி தியாகராய கலையரங்கத்தில் நடந்த போது தான் இந்த உணர்ச்சி அலைகள். நிகழ்ச்சிக்கு தலைமையேற்றிருந்த காசி ஆனந்தன் ஒருவேளை இந்திராகாந்தி இருந்திருந்தால் தமிழீழம் இருந்திருக்கும் என்பதை இந்நூலில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அந்த அம்மையார் மறைந்த நேரத்தில் இரண்டு விடுதலைப்புலிகள் கறுப்புக்கொடியை யாழ்ப்பாணத்தில் பறக்க விடுவதற்காக கொடிக்கம்பத்தை நெருங்கிய போது சிங்களப்படை வெறியர்களால் சுட்டு பிணமாக வீழ்த்தப்பட்டார்கள். அம்மையாரின் சாவை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று பிரபாகரன் அறிக்கை வெளியிட்டார்.

1984 ஆம் ஆண்டு ஏப்ரலில் இலங்கையை இரண்டாக பிளப்பதற்குரிய திட்டத்தை நிறைவேற்ற இந்தியா தயாராக இருந்தது. விசாகப் பட்டினத்தில் இந்திய இராணுவ போர்ப்படை நிறுத்தப்பட்டது. தரை வழியாகவும் விமானம் வழியாகவும் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிறைந்து தமிழீழத்தை உருவாக்குவது என திட்டமிடப் பட்டிருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் அந்த திட்டம் கைவிடப்பட்டது. இந்திரா காந்தி அம்மையார் என்ன உணர்வோடு உறுதியாக இந்த திட்டத்தை உருவாக்கியிருப்பார் என்று எண்ணிப் பார்க்கும் போது கசிந்து போகிறேன். இதெல்லாம் இந்த நூலில் வருகிறது.

மனித உரிமை மீறல் என்று தான் ஈழத்தில் நடந்த நிகழ்வுகளை ஐ.நா. மன்றத்திலே தற்போது பார்க்கின்றார்கள். ஜெனோசைட் என்ற வார்த்தையை சொல்லவில்லை. இலங்கையிலேயே சிங்களவர், தமிழர் என்று இரண்டு விதமான மனிதர்கள் இருக்கின்றார்கள்.


மனித உரிமை மீறல் என்றால் சிங்கள மனிதர்களின் உரிமைகளும் மீறப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இங்கு அப்படி நடக்கவில்லை. அத னால்தான் சொல்கிறோம் இது ஒரு இன அழிப்பு. இதை இந்த உலகம் ஒப்புக் கொள்ள வேண்டும். அதற்கான காலம் வரும்.

ஈழத் தமிழர்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுப்பதாக சொல்கிறது அரசு. அவர்களுக்கு தேவை வீடு அல்ல நாடு என்று சொல்ல கூட்டம் கைகளை தட்டி ஆமோதித்தது.

கருத்துரையாற்றிய கொளத்தூர் மணி இந்த நூலின் தலைப்பில் பிரபாகரன் என்று மட்டும் போட்டிருக்கலாம். அதோடு தமிழர் எழுச்சியின் வடிவம் என்று போடப்பட்டிருப்பது... ஈழத்திலிருந்த எழுச்சியையும் சொல்லும் வரலாற்று தொகுப்பு அவருடைய செயற்பாடுகள், போர்த்திறன் ஒருபக்கம் இருந்தாலும் கூட மக்களை குறித்தும் அவர்கள் மத்தியில் அவர் உண்டாக்கி வைத்த எழுச்சி.... விடுதலை வேட்கை இதையெல்லாம் சேர்த்துத்தான் சொல்கிறார். தமிழர்களை பனங்கொட்டை என்று சிங்களவர் கிண்டல் செய்த போது... எறிகுண்டை செய்து அதில் தமிழிலும் சிங்களத்திலும் பனங்கொட்டை என்று எழுதி சிங்களப் பகுதியில் வீசினர். இப்படி இன்னும் பல இரகசியங்கள் இந்த நூலில் உள்ளன என்று குறிப்பிட்டார்.

இதற்கும் நடுவில் இந்த நூல் வெளியாக துணையிருந்த அத்தனை பேருக்கும் தோழர் நல்லகண்ணு நினைவுப் பரிசை வழங்க... வைகோ பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்தார். இரவு 9 மணிக்கு வாழ்த்துரை வழங்கி பேசிய வைகோ 1707 பக்கங்கள் கொண்ட இந்த நூலை பல முறை படித்துக் கொண்டே இருந்தேன். வீர வரலாற்று ஆவணமாக இருக்கின்றது இந்த நூல். யுத்தகள காட்சிகளை பற்றி எப்படி எழுதினீர்கள்? என்று வியப்பாக கேட்டேன். காரணம் இந்த நூலின் உயிர் நாடியே அதுதான்.

ஆருயிர் அண்ணன் நெடுமாறனுக்கு பிரபாகரன் எழுதிய பல கடிதங்களை இந்த நூலில் பதிவு செய்திருக்கிறார். வேலூர் ஜெயிலிலிருந்து புலிகள் எப்படி தப்பித்தார்கள் என்ற இரகசியம்கூட ஒரு கடிதத்தில் இருக்கிறது என்றவர்.



உலக நாடுகள் எல்லாம் ஆயுதம் ஏந்திக் கொண்டு தானே இருக்கின்றன. ஏந்தவில்லை என்றால் இராணுவம் எதற்கு. எல்லா ஆயுதங்களையும் பசுபிக் கடலிலும் அண்டாட்டிக்கா கடலிலும் போட்டுவிட்டீர்களா? மறுபடியும் புலிகளின் போராட்டம் ஆயுதம் ஏந்திய போராட்டம்தானா? என்பதை உலக நாடுகள்தான் தீர்மானிக்க வேண்டும்.

நான்காவது கட்டப் போரை பற்றியும் அண்ணன் நெடுமாறன் எழுதப் போகிறார். அந்த நூலை யாழ்ப்பாணத்தில் வெளியிட வேண்டும் என்று சொல்ல கைதட்டலால் அரங்கம் அதிர்ந்தது.

இறுதியாக பேசிய நெடுமாறன், உலகத்துக்கு சொல்ல வேண்டியதை இந்த நூலில் சொல்லியிருக்கிறேன். பிரபாகரனை புகழ்பாட இந்நூல் எழுதப்படவில்லை. எதற்காக பிரபாகரன் தலைமையில் வீறுகொண்டு விடுதலை போராட்டம் நடந்தது. எந்த சூழ்நிலையில் எத்தனை துரோகங்களை சந்திக்க நேரிட்டது என்பதை இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும். அதன்மூலம் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்று தான் எழுதியிருக்கிறேன்.


இரகசியமாக இருந்த பல

**நக்கீரன்**

தகவல்களை இந்த நூலில் பதிவு செய்திருக்கிறேன் என்றார். கூட்டத்தில் பேசியவர்கள் பலரும் கலைஞரை வறுத்தெடுப்பதிலேயே குறியாக இருந்தவர்கள்... தற்போதைய முதல்வர் குறித்து எந்த கருத்தும் சொல்லவில்லை.







கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் 17 ஆவது ஆண்டு சிறுவர் விளையாட்டு நிகழ்வு அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் எஸ். மகேந்திரராஜா மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் வெற்றிக் கிண்ணங்கள் பெற்றுக் கொண்ட மாணவர்களுடன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# எமது மக்களின் தேவைகளை இந்திய அரசு நிறைவேற்ற வேண்டும்

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கமானது எமது மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய தூதுக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அது நடைபெறும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய எம்.பிக்கள் குழு ஹற்றனுக்கு சென்றிருந்த வேளை டி.கே. டபிள்யு மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் கூறுகையில், இந்திய எதிர்க்கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழு இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் எமது சமூகத்தினரின் பிரச்சினைகளை கண்டறியும் முகமாகவே நாம் அவர்களை இங்கு அழைத்து வந்துள்ளோம்.

இந்திய தூதுக்குழுவிடம் நாம் எமது மக்களின் நிலைமைகள், குறைபாடுகள், தேவைகள் குறித்து மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம். அது மட்டுமல்லாது எழுத்து மூலமாகவும் சமர்ப்பித்திருக்கின்றோம்.

எமது மக்களுக்கான குடியிருப்பு வசதிகளை மேற்கொள்ளுமாறும் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் எமது சமூகம் சார்ந்த தேவைகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் இதனை இந்திய அரசு ஏற்று நிறைவேற்றும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது என்றார். (அ-2)


# துப்பாக்கி சூட்டில் இளைஞன் பலி

(கொழும்பு)

எல்பிட்டிய-ஊரகஹ பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் 17 வயது இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனின் வீட்டிற்கு அருகிலுள்ள வீதியிலேயே இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த வீதியில் சந்தேகத்திற்கிடமான நபரொருவர் நடமாடுவதாக கிடைத்த தகவலை அடுத்து குறித்த இளைஞன் மற்றும் அவரது குடும்பத்தினர் வீட்டிற்கு வெளியே வந்த வேளையில் இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)



கல்முனை பிரதேசத்தில் 15 அடிநீளமுள்ள முதலை ஒன்று நேற்று முன்தினம் மாலை வன பரிபாலனசபை அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

# நாட்டார் கூத்துப் போட்டி முடிபுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தினால் தமிழ்த்தின போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட வலயமட்ட நாட்டார் கூத்துப் போட்டிகளின் முடிவுகளை துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**நாட்டார் கூத்துப் போட்டி**
**(சிந்துநடைக் கூத்து)**

மு/மாங்குளம் மகா வித்தியாலயம், மு/நெட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை, மு/பாலிநகர் மகா வித்தியாலயம்.

**இசை நாடகம்**

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை (2-3-15)


# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

## சின்னத்தம்பி செல்லையா
## (கிளி இல்லம் செல்லையா) சமாதான நீதவான்



மலர்வு 1932.04.22

உதிர்வு 2007.04.24

அன்பின் உருவமாய், பண்பின் சிகரமாய் பாசத்தின் இருப்பிடமாய், இருளில் உதயமாய் ஊருக்கு உத்தமனாய், உண்மையில் ஒரு மனிதனாய் தரணியில் வந்துதித்த தனிப். பெருஞ் செல்வமே. ஊர் போற்றும் உத்தமராய் எம்மை வாழவைத்த எங்கள் அன்புப் பப்பாவே! ஒரு நிமிட மேனும் எம்மைப் பிரிந்து வாழாத நீங்கள் ஐந்தாண்டு காலமாய் எம்மைப் பிரிந்து வாழுவதேன். நீங்கள் எம்மிடம் இருந்து பிரிந்தாலும் எங்கள் உணர்வில் உள்ளத்தில் நினைவில் இருந்து ஐந்தாண்டென்ன ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் பிரிக்க முடியாது உங்கள் நினைவை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்

**மனைவி:-** செ.பூங்கிளி, **பிள்ளைகள்:-** கிளி(ஜேர்மன்), சூரியகலா (ஆசிரியை), நிர்மலா (பிரான்ஸ்), சாந்தி (ஆசிரியை), சுபேந்தி (ஜேர்மன்).
**மருமக்கள்:-** ஸ்ரீஜீவகன் (ஜேர்மனி), ஸ்ரீபவன், லெனின் (பிரான்ஸ்), சுரேஸ்குமார், வசந்தராஜன் (ஜேர்மன்),
**பேரப்பிள்ளைகள்:-** ராகுலன் (ஜேர்மன்), ராகவன் (ஜேர்மன்) ,ரஜீவா (ஜேர்மன்), ரஜீபவன், சரத்பவன், சுஜீவா, சுஜீகா (பிரான்ஸ்), சுஜானி (பிரான்ஸ்), சுஜீவன் (பிரான்ஸ்), புவனகுமரன், பிரணவன், அபிலயன் (ஜேர்மன்) ,ஆகாஸ் (ஜேர்மன்).

கிளி இல்லம்,
துன்னாலை மேற்கு,கரவெட்டி.
0212262733

(8223)

# இலங்கை மீதான பொருளாதாரத்தடை வருமா? வராதா? விவகாரம் சூடுபிடிக்கிறது!


சஜின் வாஸ் குணவர்த்தன

ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தை அடிப்படையாக வைத்து, இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படுமா- இல்லையா என்று பட்டிமன்றம் நடத்தாத குறையாக, இந்த விவகாரம் சூடுபிடித்துள்ளது. ஜெனீவா தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், அங்கிருந்து திரும்பிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், வெளியிட்ட முக்கியமான கருத்து பொருளாதாரத் தடை பற்றியதாகும்.

"ஜெனீவா தீர்மானம் சட்டரீதியாக இலங்கையைக் கட்டுப்படுத்தாது, அதற்கு நாம் கட்டுப்படப்போவதும் இல்லை. இதை வைத்துக்கொண்டு அமெரிக்கா அல்லது மேற்குலகினால் இலங்கைமீது பொருளாதாரத் தடையை விதிக்க முடியாது. அதற்கு ஐ.நா. பாதுகாப்புச்சபையின் அனுமதி தேவை."

என்று அவர் கூறியிருந்தார்.

இதன்பின்னர் கடந்தவாரம் நடத்தப்பட்ட, ஜெனீவா தீர்மானம் பற்றிய நாடாளுமன்ற விவாதத்தின் போது ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல உள்ளிட்ட பலரும் பொருளாதாரத் தடை பற்றி எச்சரித்தனர். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர், பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் அது பற்றி எச்சரித்துள்ளார். இதனால் ஜெனீவா தீர்மானத்தை அடிப்படையாக வைத்து இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடையைக் கொண்டுவர மேற்குலக நாடுகள் முயற்சிக்கலாம் என்ற எச்சரிக்கையும், அப்படி செய்ய முடியாது என்ற எதிர்வாதமும் இப்போது சூடுபிடித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜின் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட பலரும், ஜெனீவாத் தீர்மானத்தை பொருளாதாரத்

**இன்போதமிழ்**

தடைக்கான கருவியாகப் பயன்படுத்த முடியாது என்கிறார்கள். அதேவேளை, அதே அரசில் இடம் பெற்றுள்ள அமைச்சர் திஸ்ஸ விதாரணவோ, அதை நிராகரிக்கிறார். ஒரு நாட்டுக்கு எதிரான பொருளாதாரத்தடையை முழு உலகுடன் இணைந்து விதிக்கக்கூடிய வல்லமை ஐ.நா. விற்கு மட்டும்தான் உள்ளது. ஆனாலும், அவ்வாறான பொருளாதாரத்தடை ஒருபோதும் முழுஉலகினாலும் கடைப்பிடிக்கப்பட்ட வரலாறு இல்லை. எதிரணியில் உள்ள நாடுகள் ஐ.நா.வில் எத்தகைய தடைகளை நிறைவேற்றினாலும், இரகசியமாக உதவிகளை வழங்கி அந்தத் தடைகளை கேள்விக்குள்ளாக்குவது இயல்பு.

ஈராக், ஈரான், வடகொரியா, லிபியா என்று இதற்கு ஏகப்பட்ட உதாரணங்களைச் சொல்லலாம்.

ஒரு நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடையை விதிக்கும் தீர்மானத்தை ஐ.நா.வில் நிறைவேற்றுவதனால், பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டுவந்து பொருளாதாரத்தடை விதிக்கப்படுவதற்கு இப்போதைக்குச் சாத்தியமே இல்லை. ஏனென்றால், பாதுகாப்பு சபையில், இலங்கையைக் காப்பாற்ற இரண்டு நிரந்தர உறுப்பு நாடுகள் தயாராக இருக்கின்றன. விட்டோ அதிகரத்துடன் உள்ள சீனாவும், ரஸ்யாவும், இத்தகைய தடையில் இருந்து இலங்கையைக் காப்பாற்ற, ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை. இந்தத் துணிவில்தான் அரசாங்கம் மேற்குலக நாடுகளின் பலத்த சவால்களையும் எதிர்கொண்டு நிற்கிறது. எனவே, இலங்கைக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் பொருளாதாரத்தடை கொண்டு வருவதற்கான சூழல் இப்போது இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். ஆனால், பாதுகாப்புச்


லக்ஸ்மன் கிரியெல்ல

சபை மூலம் மட்டும்தான் பொருளாதாரத்தடையை விதிக்க முடியும் என்ற வெளிவிவகாரா அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் கருத்து தவறானது.

> **"ஜெனீவா தீர்மானம் சட்டரீதியாக இலங்கையைக் கட்டுப்படுத்தாது, இதற்கு நாம் கட்டுப்படப் போவதும் இல்லை. இதை வைத்துக்கொண்டு அமெரிக்கா அல்லது மேற்குலகினால் இலங்கைமீது பொருளாதாரத்தடையை விதிக்கமுடியாத அதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதிதேவை"** - பீரிஸ்

அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் ஒன்றிணைந்து சுதந்திரமான முறையில் தாமே இந்தத் தடைகளைக் கொண்டு வரமுடியும்.

அதற்காக வாய்ப்புகளை ஒருபோதும் நிராகரிக்க முடியாது என்பதையே, லக்ஸ்மன் கிரியெல்ல, திஸ்ஸ விதாரண போன்றோர் எடுத்துக் கூறியுள்ளனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியனவே இன்று உலகின் வல்லமை மிக்க சக்தியாக உள்ளன.

ஈராக் மீது படையெடுப்பை மேற்கொண்ட போதும், ஆப்கானிஸ்தானில் போரைத் தொடுத்தபோதும், அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளுக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் இருக்கவில்லை.

இப்போது அப்படிச்செய்ய முடியாது என்று கூறப்பட்டாலும், அந்த வாதம் ஒரு நாட்டின் மீதான தாக்குதலுக்கு மட்டுமே பொருத்தமானதாக அமையலாம்.

ஒரு நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க இந்த நாடுகளால் ஒன்றுபடமுடியும். இப்போது சிரிய விவகாரத்தை எடுத்துக்கொண்டால், சீனாவும், ரஸ்யாவும் பாதுகாப்புச் சபையில் ஆசாத் அரசுக்கு கவசமாக நின்றன. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகநாடுகள், அரபுலக நாடுகளுடன் ஆசாத் அரசைத் தோற்கடிக்கப் போராடும் புரட்சியாளர்களுக்கு ஆயுத உதவிகளை வழங்குவதாக வெளிப்படையாக அறிவித்தன. இதன் விளைவாக, சிரியா ஜனாதிபதி ஆசாத் போர் நிறுத்தத்துக்கு இணங்கி வரவேண்டிய நிலை உருவாக்கியுள்ளது. இங்கே ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் செய்யமுடியாததை, மேற்குலகம் பின் கதவால் சாதித்துள்ளது.

அதுபோல், அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத்தடையை விதித்தால், அதை நிராகரித்துவிட்டு இலங்கையுடன் உறவை வைத்துக் கொள்ள எத்தனை நாடுகள்தான் முன்வரும்? மிகச் சிறிய நாடான இலங்கையின் மூலம் கிடைக்கக் கூடிய பொருளாதார நன்மைகளை விட, அமெரிக்கா மற்றும் மேற்குலகின் மூலம் கிடைக்கக் கூடிய பொருளாதார அனுகூலங்களே அதிகம். எனவே, எந்தவொரு நாடும் அத்தகைய தடைக்குக் கட்டுப்படவே செய்யும்.

ஈரானுக்கு எதிராகவோ, சிரியாவுக்கு எதிராகவோ ஐ.நா. மூலம் மேற்குலகினால் எதையும் செய்ய முடியவில்லை. அதற்காக அவர்கள் சும்மாயிருந்து விடவில்லை. பொருளாதாரத் தடை விதித்து மேற்குலகம் நெருக்கடி கொடுக்கிறது. இதனால், சிரியா மெல்ல மெல்ல தனது பிடியில் இருந்து இறங்கி வரவேண்டிய நிலையில் உள்ளது. மியன்மாரிலும் அப்படித்தான். மியன்மார் அரசுக்கு ஆதரவாக சீனாவும், ரஸ்யாவும் கைகோர்த்து நின்றன. ஆனாலும், மியன்மாரில் இராணுவ ஆட்சியாளர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இவையெல்லாம் மேற்குலகைப் பகைத்துக்கொண்டு- அவற்றின் பொருளாதாரத்தடைகளை எதிர்கொண்டு நிமிர்ந்து நிற்க முடியாது என்பதற்கான சில உதாரணங்கள்.


திஸ்ஸ விதாரண

இன்று ஐ.நா. மட்டும் பொருளாதாரத்தடையை விதிக்கக் கூடிய நிலையில் இல்லை.

பொருளாதாரம் பலம்மிக்க எந்த


ஜி.எல்.பீரிஸ்

நாடும், தன்னிச்சையாக அதற்கான முடிவை எடுக்கலாம். அதை எவராலும் தடுக்கமுடியாது.

40 நாடுகளின் இணை அனுசரணையுடன் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு 24 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

ஆக, உலகில் உள்ள 193 நாடுகளில் 51 நாடுகள் வெளிப்படையாக ஜெனீவா தீர்மானத்தை ஆதரிக்கின்றன.

இந்த நாடுகளில் குறைந்தது 40 நாடுகள் இலங்கைக்கு எதிரான பொருளாதாரத்தடைக்கு ஆதரவளித்தால்கூட, அது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

அது மட்டுமல்ல பொருளாதாரத் தடை பற்றி பிரச்சினையை முதலில் எழுப்பியது தமிழ்நாடுதான்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியிருந்தார் முதல்வர் ஜெயலலிதா.

மேற்குலகம் அப்படியான நகர்வில் இறங்கும்போது, தமிழ்நாடு சும்மாயிருக்காது.

இந்த உண்மைகள் எல்லாம் அரசாங்கத்துக்கு தெரியாமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

அரசாங்கம் இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ளவில்லை என்று கூறிமுடியாது.

ஆனால், புரியாதது போன்று பாசாங்கு செய்கிறது.

தூங்குபவனைத் தட்டி எழுப்பலாம் தூங்குவதுபோல் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது. பொருளாதாரத்தடையை விதிக்க முடியாது என்று விவாதம் நடத்துவது தான் இன்றுள்ள அவசியமான இராஜதந்திரம் அல்ல. அத்தகைய வாய்ப்பை மேற்குலகிற்கு விட்டுக் கொடுக்காமல் இருப்பதுதான் இராஜதந்திரம். ஏனென்றால், பொருளாதாரத்தடை என்பது அரசைப் பணிய வைப்பதற்கான ஆயுதமாக இருந்தாலும் அதனால் அதிகம் பாதிக்கப்படுவது சாதாரண மக்கள்தான். நாட்டின் இறைமையைக் காப்பது மட்டும்தான் ஒரு அரசின் பொறுப்பு அல்ல. பொருளாதாரத்தடைபோன்ற இறுக்கமான சர்வதேச தீர்மானங்களில் இருந்து மக்களைக் காக்க வேண்டியதும் அரசின் கடமை தான்.

# முன்னாள் போராளிகளை தேடும் நடவடிக்கை கிழக்கில் ஆரம்பம்

## ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளைத் தேடிப் பிடிக்கும் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்று கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசின் புனர்வாழ்வுக்கு உட்படாமல் மறைந்துள்ள மற்றும் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியுள்ள முன்னாள் போராளிகளைக் குறிவைத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தீவிரவாத விசாரணைப் பிரிவு மற்றும் ஏனைய அரச புலனாய்வுச் சேவைகள் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கைகைய ஆரம்பித்துள்ளன. அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளிகளாக இருந்தவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பதிவுகளின் போது புனர்வாழ்வுக்கு உட்படாத முன்னாள் போராளிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவதா இல்லையா என்பதை புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் முடிவு செய்யவுள்ளனர்.

எனினும் எவரும் கைது செய்யப்படப் போவதில்லை என்றும் முன்னாள் போராளிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவ் ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (2)

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கு இந்தியா விரைவில் அழைப்பு?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் இந்தியாவிற்கு அழைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் இலங்கை விஜயம் தொடர்பில் அந்நாட்டு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கையை தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இந்திய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பலவந்தமாக தீர்வுத்திட்டமொன்றை எட்டாமல் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய வகையிலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

13 ஆம் திருத்தச் சட்ட மூலம் அமுலாக்கம் தொடர்பில் அரசாங்கத்துடன் பிரத்தியேகமாக பேச்சுவார்த்தை நடத்த இந்தியா தீர்மானித்துள்ளது. (2)

# தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதற்கு இந்தியா பங்களிப்பை வழங்க முடியும்

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் முனைப்புக்களில் இந்தியா முக்கியமான பங்களிப்பினை வழங்க முடியும் என ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய பிரதிநிதிகள் தமது விஜயத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென குறிப்பிட்டுள்ளது.

துரிதகதியில் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வழங்குவதற்கு இந்தியா காத்திரமான வழியில் பங்களிப்பினை வழங்க முடியும் என கட்சியின் பொதுச் செயலாளர் குமாரகுருபரன் தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச்சட்ட மூலமோ அல்லது வேறு ஏதேனும் தீர்வுத் திட்டமோ அது தொடர்பில் கண்காணிப்பு நடத்த வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# பாடகர் சதீஸ் பெரேரா காலமானார்

(கொழும்பு)

பிரபல பாடகரான சதீஸ் பெரேரா தனது 43 ஆவது வயதில் நேற்று திங்கட்கிழமை காலை காலமாகியுள்ளார்.

தனியார் வைத் தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே இவர் காலமாகியுள்ளதாகவும் குடும்ப வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. இவர் மறைந்த பாடகரான ஷெல்ரன் பெரேராவின் மகன் ஆவார். (2)

# 2012.04 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1704-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப் பத்திரிகை த பொஸ்டன் நாளிதழ் வெளியிடப்பட்டது.

★ 1863-கலிபோர்னியாவில் கேயிஸ்வில் என்ற இடத்தில் அமெரிக்க பழங்குடிகள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டன.

★ 1877-ஒட்டோமான் பேரரசு மீது ரஷ்யா போரை அறிவித்தது.

★ 1908-லூசியானாவில் புயல் காரணமாக 143 பேர் உயிரிழந்தனர்.

★ 1913-வானளாவிக் கோபுரம் வூல்வேர்த் கோபுரம் நியூயோர்க் நகரில் கட்டப்பட்டது.

★ 1915-ஆர்மீனிய இனப்படுகொலை: கொன்ஸ்டன்டீனபோலில் பல்லா படுகொலை செய்யப்பட்டனர். ஏனையோர் நாட்டை விட்டு விரட்டப்பட்டனர்.

★ 1955-இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் ஆசிய மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது. குடியேற்றவாதம் இனவெறி மற்றும் பனிப்போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★ 1961-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வாசா என்ற சுவீடனின் கப்பல் மீட்டெடுக்கப்பட்டது.

★ 1965-டொமினிக்கன் குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.

★ 1967-சோயூஸ் 1 விண்கலத்தில் பயணித்த ரஷ்ய வீரர் விளாடிமிர் கொமரோவ் அவரது குதிகுடை திறக்க முடியாமல் போனதில் உயிரிழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன்றில் உயிரிழந்த முதலாவது வீரராவார்.

★ 1968-மொரீசியஸ் ஐ.நாவின் உறுப்பு நாடாகியது.

★ 1970-முதல் சீனச் செய்மதி டொங் ஃபாங் ஹொங் 1 ஏவப்பட்டது.

★ 1970-காம்பியா பொதுநலவாய அமைப்பினுள் குடியரசாகியது.

★ 1981-முதலாவது ஐபிஎம் தனி மேசைக் கணனி அறிமுகமானது.

★ 1990-டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் தொலைக்காட்டியை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

★ 1993-இந்தியாவில் பஞ்சாயத்து அரசுத் திட்டம் அமைக்கப்பட்டது.

★ 1993-லண்டன் நகரில் மேற்கொள்ளப்பட்ட சுமையுந்து குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு 44 பேர் படுகாயமடைந்தனர்.

★ 2006-நேபாளத்தில் மன்னருக்கு எதிராக இடம்பெற்ற கலவரங்களை அடுத்து 2002 இல் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீள அமைக்க மன்னர் உத்தரவிட்டார்.

### பிறப்புக்கள்

★ 1820-ஜி.யு.போப், தமிழுக்கு சேவை செய்த அமெரிக்கர் (இ.1908)

★ 1845-கார்ல் ஸ்பிட்டெலர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1924)

★ 1934-ஜெயகாந்தன், தமிழக எழுத்தாளர்

★ 1973-சச்சின் டெண்டுல்கர், இந்தியத் துடுப்பாட்ட மட்டையாளர்

### இறப்புக்கள்

★ 1960-மாக்ஸ் லாவுவே, நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி.1879)

★ 1964-ஜெரார்ட் டொமாக், மருத்துவத்துக்கான நோபல் பரிசினை மறுத்த ஜேர்மனியர் (பி.1895)

### சிறப்பு நாள்

★ காம்பியா-குடியரசு தினம் (1970)



★ 1951- ஈழத்து எழுத்தாளர் தம்பிஜயா தேவதாசின் பிறந்த தினம்.

# இளைஞர்களும் ஆன்மீகமும்



## ஆன்மீகம் 30

இளைஞர்களின் கவனம் எப்போதும் வெற்றியிலிருக்கிறது. ஆனால், வெற்றிக்கான அலகுகள் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கின்றன. சில வருடங்கள் முன்பு- ஒரு இருபது வருடங்கள் முன்பு நிறைய நகைகளை அணிவது வெற்றியை அளக்கும் கோலாக இருந்தது. இன்று அது அப்படி இல்லை. உங்கள் புன்னகையின் தரத்தில் (பலத்தில்) நான் வெற்றியை அளக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் வெற்றிஉயின் அடையாளம் நீங்காத புன்னகை, வாழ்வின் அசைக்கமுடியாத நம்பிக்கை, சுற்றிலும் இருக்கும் அனைவரிடமும் சொந்தம் பாராட்டும் தன்மை, இவையே, எந்த அளவுக்கு மனம் உடைந்து போகாமல் பாதுகாப்பான உணர்வுடன் இருக்கிறார்களோ அந்த அளவுக்கு வெற்றி; இளைஞர்கள் தங்கள் வாழ்வில் இதை வளர்த்துக்கொள்வதை இலட்சியமாகக்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் இளைஞர்கள் இந்தியக் கல்வியையும் இந்தியப் பண்பாட்டை அறியும் வாய்ப்பையும் இழந்து விட்டனர். அவர்கள் போலியான மதச்சார்பின்மையிலும், போலியான பொதுவுடமைத் தத்துவத்தி லும் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் தான், அவர்கள் இந்தியாவில் உள்ளவற்றால் பெருமிதம் கொள்வதில்லை, அக்கரையிலிருந்து வருபவை தான் அவர்களைக் கவர்கிறது. இப்படி ஒரு சூழலில் இந்திய வளம் பெறுவது மிகவும் சிரமமான ஒன்று. இந்த அடிப்படைக் கருத்து மாறவேண்டும். பெருமித உணர்வு படிப்படியாக வளர்க்கப்படவேண்டும்.

நான் ஒரு குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருந்த தளர்ந்த ஒருபெண்மணியைப்பார்த்தேன். அவர் ஒரு கைக்குட்டை தயாரித்திருந்தார். அவர் உலகத்திலேயே அந்த கைக்குட்டை மிக உயர்ந்தது என்பதற்கு பதினேழு காரணங்கள் கூறினார். அதுவெறும் சிறிய கைக்குட்டையே, ஆனால், அவர் அதன் சிறப்பை எடுத்துக்கூறிய விதம்தான் மிகவும் கவருவதாக இருந்தது. அதன் வடிவம், நிறம், தையல் நேர்த்தி, அதன் மூலைகள் இவற்றிலிருக்கும் பதினேழுவகைச் சிறப்பு அம்சங்களைச் சொல்லி அதுதான் இந்த உலகத்திலேயே மிக உயர்ந்தது என்று நம்பிக்கையும் பெருமிதமும் கொண்டார். மக்கள் அவ்விதம் பெருமிதம் கொள்ளும்பொழுது அவர்கள் வாழ்க்கையில் உயர்வார்கள். இந்தியாவில் சில காரணங்களுக் காக தங்களைப் பத்திரிகைக்காரர்கள்என்றுசொல்லிக்கொள்பவர்களும், பொதுவுடமைவாதிகளும் நம்முடைய சொந்த பாரம்பரியத்தின் மேலுள்ள நம்பிக்கையை அழித்துவிட்டார்கள். படிப்படியாக அதன் மதிப்பைக் குறைத்துவிட்டார்கள்.



இந்தியாவின் பரப்பளவைப்பார். அது நிலப்பரப்பில் அமெரிக்காவில் மூன்றில் ஒரு பங்கும், மக்கள் தொகையில் அதைவிட மூன்று மடங்கும் உடையது. இருபத்திரண்டு மொழிகளும், அதைவிட அதிக கிளைமொழிகளும், துணைமொழிகளும் வழக்கில் உள்ளன. பல வகை கலாசாரங்களும், பழக்கவழக்கங்களும் கொள்கைகளும் உள்ளன. இத்தனை வேறுபாடுகளையும் தாண்டி, இந்நாடு முன்னேறிக்கொண் டிருக்கிறது. இது ஓர் அதிசயம். இதன் ஜனத்தொகையைக் கணக்கில் கொள்ளும்போது மனநிலை பாதிக்கப்பட்டவர்களும், மனஅழுத்தத்தில் உள்ளவர்களும், குற்ற விகிதமும் மிகக் குறைவு. உண்மையில் நியூயோர்க்கில் மட்டுமே நடக்கும் குற்றங்களின் எண்ணிக்கைகள் இந்தியா முழுவதும் நடப்பவற்றைவிட மிக அதிகம். இந்த விதத்தில், இந்தியா மிகவும் உயர்வாய் இருக்கிறது. இந்நாட்டில் இருக்கும் ஆன்மீக சக்தியே இந்த உயர்வுக்குக் காரணம். இன்னமும் மக்கள் புன்னகையுடனும் சந்தோசமாகவும் இருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள மருத்துவர்களில் 1/3 பங்கு இந்தியர்கள், விஞ்ஞானிகளில் 12% பேர் இந்தியர், நாசாவில் உள்ள விண் வெளிக்கழத்தில் 24% பேர் இந்தியர்கள் என்பதில் பெருமிதம் அடையவேண்டும்.

வாழ்க்கையில் இலக்குகளை நிர்ணயித்துக்கொள்; பிறகு செயற்படு; வாழ்வில் என்ன இலக்குகளை நீ நிர்ணயித்துக் கொள்வாய்? பல தடைகள் வரலாம். ஆனால், எதற்காகவும் உன்னுடைய உயர்ந்த இலட்சியங்களைக் கைவிடாதே. அவை உன் வாழ்க்கைக்குத் திசை காட்டுகிறது. வாழ்க்கை என்பது எப்போதும் சுலபமாக வாழக்கூடியதாக இருக்கும் என்று நான் சொல்லவில்லை. அவை எப்போதும் ரோஜா இதழ்களால் ஆனதாக இருக்காது. ஆனால், அதே துடிப்புடன், ஒரே குறிக்கோளுடன் பரந்த இலக்குடன் நீ தொடர்ந்து முன்னேறிச்சென்று கொண்டிருந்தால் உனக்குப்பலம் கிடைக்கும்.

பொறுப்பு எடுத்துக்கொள்வதிலிருந்து உன்னை எது தடைசெய்கிறது? பயம். சரியோ? தப்போ? உன்னால் முடிக்க முடியுமோ? முழு சோம்பேறித்தனம். நீ தோல்வியடைந்து விடுவாய்? எனும் பயம். தோல்வியின் அறிகுறிகள் உன்னைப் பெரிதும் பாதிக்கிறது. இதைப்பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டால் அதுவே உனக்கு நன்மை பயக்கும்.

அறிவாளிகளில் பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குள் வறட்சியை, குறையை உணர்கிறார்கள். ஆதரவு உள்ளிருந்து கிட்டவேண்டும். தேவைப்படுபவை உணவும் தண்ணீரும் மட்டுமல்ல. ஆன்மீக பலம் உன்னைத் தூக்கி

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

விடும். ஆன்மீகம் உன் வாழ்விலுள்ள வெற்றிடத்தை நிரப்பும். தற்கொலை விகிதங்களும், மனச்சோர்வடைவோரின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டே போகின்றன. ஏனெனில், சேவை செய்வதில் மதிப்பை பற்றி பேசப்படுவதில்லை. வாழ்க்கையில் திருப்தி அடையவேண்டுமானால் நீ சேவை செய்யவேண்டும்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 30

### இருதய இரேகை அமைப்பும் பலாபலன்களும்


**1.** இருதய இரேகையின் இறுதி முனை குருமேட்டில் நின்றிருக்குமாயின் பாசபந்தத்தைக் காட்டும். அன்பை வைத்தவிடத்து வளர்க்கும் அவாவுடையவராவர். அன்பு மிகுந்தவிடத்து மிக்க கண்ணியமாயிருக்கும். தரித்திரம் வந்துற்றபோதிலும் அன்பு பிரகாசிக்கும்.

**2.** இருதய இரேகையின் இறுதி சனிமேட்டிற்கும், குருமேட்டுக்கும் மத்தியில் மேல்நோக்கிச்சென்றிருக்குமாயின், விவேகமும் ஆசாபாசத்தோடுங்கூடிய அன்புமிகுந்திருக்கும். ஆனால், இலாபத்தை முன்னிட்டு அன்பு செலுத்துவதில்லை. மற்றவர்களின் அபிப்பிராயத்தில் சுலபமாகக் கட்டுப்படமாட்டார். மூடத்தன்மையுமிராது.


**சக்தி**

**3.** இருதய இரேகை சனிமேட்டிலேறியிருக்குமாயின் போகத்துக்குரிய வழியில் அன்பு தழைக்கும் சுக்கிர மேடு செழித்தோங்கி இரேகையும் சிவந்த நிறங்கட்டியிருந்தால் காதல் வழியில் அன்பு மிகுதியாய்ச் செல்லும். சுருக்கிச் சொல்லில் விஷய சுகத்திலீடுபட்டிருப்பர். இத்தகையோருக்கு ஸ்தூலபுத்தியே நாட்டம்.

**4.** இருதய இரேகை மூன்று கிளைகளுடன் படத்திலுள்ளதுபோல் அமையப்பெறின், இருதயம் இயற்கையிலேயே விவேகம், பாசம், தேகபலம் ஆகிய மூன்றையும் ஏகிபவமாய் உடையதென்றும், கட்டைவிரல் பலத்தும், புத்தி இரேகை மெல்லியதாயும் இருந்தால், புத்தியின் ஆட்சியின்றி யாவும் நடைபெறுவதை விளக்குவதாகும். மூன்று கிளைகளில் எந்த இரேகை நன்கு பதிந்துள்ளதோ அவ்வகையில் உணர்ச்சி அதிகமென்பதாயறிய வேண்டும். இத்தகையோர் விவேக முதிர்ச்சியினால் ஓர் அன்புள்ள அரசனைப்போல் உற்றார் உறவினர்களையும் மற்றோரையும் நேசிப்பர். சுயநலமின்றி எப்போதும் பிறர் நன்மையில் கருத்தைச் செலுத்துபவராவர். விசாலமான இருதயமே இதற்குக் காரணமாகும். இருதய இரேகையின் கிளைகள் மூன்றுக்கு மேலும் ஏற்படலாம். அப்பொழுதும் பரோபகாரமான வழியிலீடுபடுவதேயாம். இன்னும் செல்வாக்குள்ள பல நண்பர்கள் உண்டென்பதையும் குறிக்கும்.



**5.** இருதய இரேகையின் இறுதி தாழ்ந்து புத்தி இரேகைக்குச் சமமாய் அமையும். இதனால் புத்திக்கே




ஆட்சிப்பலமுண்டாகும். இங்கே புத்திக்குப் பிரதமஸ்தானம் ஏற்பட்டிருப்பதாய் அறியவேண்டும். சில சமயம் இருதய இரேகை புத்தி இரேகையோடு பொருந்திநிற்கும். அப்பொழுது புத்தி பலத்துக்குட்டபட்டது, இருதயம் என்பதாகக் குறிக்கும். இருதய இரேகையைவிடப் புத்தி இரேகை நன்கு பதிந்து சுத்தமாயிருந்தால் மேற்சொன்னதை உறுதிப்படுத்துவதாகும். இரண்டும் சமடும். அப்பொழுது கிரகங்களின் எல்லையையும் கவனித்துக்கொண்டால், இருதய இரேகை குறுகியவிடத்து, சனிமேட்டுக்குட்பட்டிருந்தாலும், அல்லது இரத புதன் குரு மேட்டிலிருந்தாலும், புத்தியினால் ஆளப்படுவதாய் அறிவிக்கும். சூரிய மேடு இருதய ஆட்சிக்குட்பட்டது.

புதன் மேட்டிலாவது, சனி குரு மேடுகளிலாவது இருதய இரேகை மிகச் சிறியதாய் காணப்படில், அதன்

## ரேகைகளும் கிரகங்களும்

அந்தஸ்துடன் விளங்குமாயின் விவகாரங்களில் போட்டியுண்டாகும். புத்தி விசாரணையில் காரண காரியம் தேடி ஆராயும். இருதயம் உணர்ச்சியிலிருக்கும். இவ்விதமான சந்தர்ப்பத்தில் எது ஆட்சியிலிருக்கிறதென்பதைத் திட்டமாகச் சொல்வதற்கில்லை. என்றாலும், இரேகையின் அளவுக் காலம் இவைகளை கவனிக்கவேண்டும். இறுதியில் காலளவில் மிகக் கஷ்டத்தைக் கொடுக்கும். இருதயத் துடிப்பு இயற்கையளவினின்றும் குறையும். மற்றவர்களிடம் அன்பாவது இரக்கமாவது உண்டாகாது. இவ்வித இருதய இரேகை அமைந்திருந்தால், கிரக மேடுகளின் நிலைமையைக்கொண்டு பலாபலன்களைக் கவனிக்கவேண்டும்.

(தொடரும்)

# இந்தியத் தூதுக்குழு பொய்களை மட்டுமே சுமந்து வந்தது

## சீமான் தெரிவிப்பு



**தமிழ் ஈழத்துக்காக சாத்வீக வழியில் போராடிய தந்தை செல்வாவின் போராட்டங்களை ஆயுத வன்முறையின் மூலம் இலங்கை அரசு தொடர்ந்து ஒடுக்கியதன் எதிர் விளைவாகவே தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் தொடங்கியது.**

தமிழ் மக்களின் முழுமையான ஆதரவுடன் நடந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத்தான் இந்தியா உள்ளிட்ட தெற்காசிய வல்லாதிக்கங்களின் துணையுடன் தமிழர்களை அழிக்கும் இன அழிப்புப் போராக சிங்கள இனவெறி அரசு நடத்தி முடித்தது. இரண்டரையாண்டு காலம் நடந்த அப்போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அப்படிப்பட்ட ஒரு கொடூரமான போரில் தங்கள் சொந்தங்களை இழந்தும் வாழ்விடங்களை இழந்தும் வாழ வழியின்றியும் தவித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் துயர நிலையை கண்டறிய சென்ற நாடாளுமன்றக் குழுவினர் அவர்களின் துயரத்தைப் போக்க இலங்கை அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்காததைப் பற்றிப் பேசாமல் தமிழர்கள் அரசியல் தீர்வைப்பற்றி பேசுகின்றார்கள் என்று கூறுவது வடி கட்டிய பொய்யாகும்.

இலங்கையில் போர் நடந்த பகுதிகளில் சகஜ நிலை திரும்பி வருவதாக கூறிகிறார் ரங்கராசன் அப்படி ஒரு கருத்தை நாடாளுமன்றக் குழுவில் சென்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட கூற வில்லையே?

இலங்கை தமிழர்களின் தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம் என்று ஓங்கிக் குரல் எழுப்பும் மார்க்சிஸ்ட் கட்சியின் உறுப்பினர் தன் கருத்தை ஈழத் தமிழர்களின் கருத்தாக அங்கு போய் விட்டு வந்து கூறுவது கடைதெடுத்த அரசியல் மோசடியாகும்.

தமிழர்கள் அரசியல் தீர்வைத்தான் விரும்புகிறார்கள். விடுதலையை அல்ல என்று கூறும் மார்க்சிஸ்ட் கட்சி ஈழத் தமிழர்களிடம் விடுதலைத் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்கத் தயாரா? என்று நாம் தமிழர் கட்சி கேட்கிறது.

நாடாளுமன்ற குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற சுஷ்மா சுவராஜ் மற்ற உறுப்பினர்கள் அனைவரையும் தவிர்த்து விட்டு தனியாக சென்று இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்து பேசியிருக்கிறார். இப்படியொரு தனித்த சந்திப்பு எதற்காக என்று தெளிவுப்படுத்தப்படவில்லை. அது குறித்து மற்ற உறப்பினர்கள் ஒருவரும் விளக்கவில்லை. இலங்கைக்கு சென்ற இந்திய நாடாளுமன்ற குழுவில் தமிழர்களு க்கு ஆதரவான கட்சிகள் இடம்பெறாததும் இடம்பெற்றவர்களில் பெரு ம்பான்மை உறுப்பினர்கள் இலங்கை பிரச்சினை என்றால் என்னவென்று தெரியாதவர்கள் என்பதும் இக்குழுவின் பயணம் ஒரு திட்டமிட்ட நாடகமே என்பதை பறை சாற்றுகிறது இவ்வாறு அதில் கூறியுள்ளார். (அ-2)

# முல்லைப்பெரியாறு விவகாரம் இம்மாத இறுதியில் நீதிமன்றிற்கு

(புதுடில்லி)

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பான இறுதி அறிக்கை திட்டமிட்டபடி இம்மாத இறுதியில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் தலைவரும் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியுமான ஏ.எஸ். ஆனந்த் தெரிவித்தார்.

கூட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களிடம் குழுவின் தலைவர் ஏ.எஸ். ஆனந்த் கூறியது, முல்லைப்பெரியாறு அறிக்கைக்கு திங்கட்கிழமை இறுதி வடிவம் அளிக்கப்படும். திட்டமிட்டபடி ஏப்ரல் இறுதியில் உச்சநீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படும். குழுவுக்கு மீண்டும் கால நீடிப்பு தேவையற்றது என்று அவர் தெரிவித்தார். முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக ஆய்வு நடத்த அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவை 2010 இல் உச்ச நீதிமன்றம் நியமித்தது. இந்தக் குழுவின் நீடிக்கப்பட்ட பதவிக்காலம் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

(அ-2)

# நாட்டில் 800 பேருக்கு பன்றிக்காய்ச்சல்

(நாமக்கல்)

இந்தியா முழுவதும் 800 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் காந்தி செல்வன் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் காந்தி செல்வன் தமிழகத்தில் மட்டும் 64 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் இதில் இருவர் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார். மேலும் தற்போது இக் காய்ச்சல் கட்டுக்குள் இருப்பதாகவும் நாடு முழுவதும் மருத்துவ முன்னேற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

(அ-2)

# மத்திய அரசு கூறுவதுபோல் 2015 ஆம் ஆண்டுக்குள் வறுமையை ஒழிக்கமுடியாது

## டி. ராஜா தெரிவிப்பு

மத்திய அரசு கூறுவதுபோல இந்தியாவில் 2015 ஆம் ஆண்டுக்குள் வறுமையை ஒழிக்க முடியாது என்று இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயலர் டி. ராஜா தெரிவித்தார்.

சென்னையில் அனைத்து இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களின் கூட்டமைப்பு மாநாட்டில் ஞாயிற்றுக்கிழமை அவர் பேசியது: வறுமையை ஒழிக்க முடியாமல் இந்தியா வளர்ந்த நாடாக முன்னேற முடியாது. ஆனால், அதே நேரத்தில் இந்தியா உலகளவில் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் தவிர்க்க முடியாத நாடாக வளர்ந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.


நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கு புதிய பொருளாதார கொள்கைகளை வகுக்க வேண்டும். ஆனால், இப்போதுள்ள மத்திய அரசு இவ்வாறான மாற்றங்களை மேற்கொள்ளாமல் மௌனம் சாதித்து வருகிறது. எப்பொழுதும் அரசியலையும் பொருளாதாரத்தையும் பிரித்து பார்க்க முடியாது. ஆனால், அப்படியொரு காரியத்தைத்தான் மத்திய அரசு செய்கிறது.



அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டால்தான் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படும். அப்படியொரு மாற்றத்தை மக்களால் மட்டுமே செய்ய முடியும். இப்போது இந்தியாவில் பொருளாதார நெருக்கடி உள்ளதை மத்திய அரசு மறுத்து வருகிறது. பொருளாதார சீர்திருத்தங்களையும் மத்திய அரசு அமுல் படுத்தவில்லை. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.


இதனால் பொருளாதார சிக்கல்களுக்கு மக்களே தீர்வு காணும் நிலை உருவாகியுள்ளது என்றார். (அ-2)



ஈரோடு அடுத்த சென்னிமலை ராஜீவ்காந்தி பாலிடெக்னிக் கல்லூரியில் ராஜீவ் காந்தி மற்றும் விவேகானந்தர் சிலைகளை மத்திய அமைச்சர் சிதம்பரம் திறந்து வைத்தார். அருகில் கல்லூரி தாளாளர் மக்கள் ராஜன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்கும் அப்துல்கலாம்



இந்திய திருநாட்டின் ஜனாதிபதியாக தமிழகத்தை சேர்ந்தவரும் விஞ்ஞானியுமான அப்துல்கலாமை மீண்டும் பதவியில் அமரச் செய்ய அ.தி.மு.க. சமாஜ்வாடி கட்சி (முலாயம்சிங்) திரணாமுல்காங் (மம்தா ) ஆகியோர் சம்மதம் தெரிவித்துள்ளதாக தகவல் அறிந்த வட்டாரம் தெரிவிக்கின்றது.

வரும் ஜுலை மாதத்துடன் ஜனாதிபதி பிரதீபா பட்டேல் பதவிக்காலம் முடிவுக்கு வருகின்றது. இதனையடுத்து நடக்கவிருக்கும் தேர்தலில் யாரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கலாம் என காங்கிரஸ் வட்டாரத்தில் பரபரப்பாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி பாதுகாப்பு துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி அமீது அன்சாரி ஆகியோரது பெயர்கள்பரிசீலணையில்உள்ளது.

இதற்கிடையில் விஞ்ஞானி அப்துல்கலாம் மீண்டும் ஜனாதிபதியாக்கிட அ.தி.மு.க. சமாஸ்வாடி திரிணாமுல் காங்கிரஸ் விரும்புகிறது. இவரை நிறுத்தினால் ஓட்டுப்போட தயாராக இருப்பதாகவும் ஒத்துக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. பா.ஜ. காலத்தில் கலாம் ஜனாதிபதியாக இருந்து நற்பெயர் பெற்றவர் என்பதாலும் சிறுபான்மை சமூதாயத்தை சேர்ந்தவர் என்பதாலும் அரசியலுக்கு அப்பாற்றப்பட்டவர் என்பதாலும் இவருக்கு மேலும் ஆதரவு பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# சென்னையில் இந்தோனேசிய துணைத் தூதரகம் அமையும்

(சென்னை)

சென்னையில் இந்தோனேசிய துணைத் தூதரகத்தை அமைக்க வாய்ப்புள்ளது என்று அந்நாட்டின் இந்தியாவுக்கான தூதர் எம்.காலிப் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தியா- இந்தோனேசியா இடையேயான வர்த்தக முன்னேற்றம் குறித்த பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியது, இந்தோனேசியாவிலிருந்து இந்தியாவுக்கு பெருமளவில் நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகின்றது.

இந்தியா- இந்தோனேசியா இடையேயான வர்த்தகம் இதுவரை ஒரு இலட்சம் கோடிக்கு நடந்துள்ளது. இது 2015 ஆம் ஆண்டுக்குள் 2.25 இலட்சம் கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் மே 6 ஆம் திகதியிலிருந்து 13 ஆம் திகதி வரை இந்தியாவைச் சேர்ந்த வர்த்தகர்கள் ஒரு வார சுற்றுப் பயணமாக இந்தோனேசியா செல்லவுள்ளனர்.

இந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் இந்தோனேசியாவின் கருடா ஏர்லைன்ஸ் இந்தியா- இந்தோனேசியா இடையேயான விமான சேவையை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கிடையே 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இந்தியா- இந்தோனேசியா இடையேயான வர்த்தகம் எதிர்பார்த்ததைவிட அதிகமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்றார்.

(அ-2)

# பதவியேற்பை தள்ளிப்போடுகிறது ஆங்சாங் சூகியின் கட்சி

மியன்மார் நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் அமோக வெற்றிபெற்ற ஆங் சாங் சூகியும் அவரது கட்சித் தோழர்களும் பதவியேற்பதை ஒத்திவைத்துள்ளார்கள்.

பதவியேற்பு உறுதிமொழியில் உள்ள வாசகங்களை மாற்றும் படி கோரியதை இராணுவ ஆட்சியாளர்கள் தெய்ன் செய்ன் ஏற்க மறுத்துவிட்டதால் இந்த முடிபு எடுக்கப்பட்டிருக்கின்றது.

பதவியேற்பை தள்ளி வைத்திருக்கின்றோமே தவிர ஒரேயடியாகப் புறக்கணித்து விட்டவில்லை என்று கட்சியின் பத்திரிகைத் தொடர்பாளர் ஆன் கைங் விளக்கம் அளித்தார்.

இப்போதுள்ள அரசியல் சட்டமானது இதற்கு முன்பு பதவியில் இருந்த இராணுவ ஆட்சியாளர்களால் வகுக்கப்பட்டது. உலகின் எந்த நாட்டிலும் இல்லாதவகையில் நாடாளுமன்றத்தின் 25 வீத இடங்கள் இராணுவத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

அந்த இடங்களுக்கும் தேர்தல் இல்லாமல் இராணுவம் தலைமையே உறுப்பினர்களை நியமித்துக் கொள்ளும்.


இப்படியொரு கேலிக்கூத்தான நாடாளுமன்றத்தை ஏற்படுத்தியிருக்கும் அரசியல் சட்டத்தைப் பாதுகாப்பேன் என்று ஒவ்வொரு உறுப்பினரும் உறுதிமொழி எடுக்க வேண்டும் என்பதை ஏற்க முடியாது என்று சூகி மறுத்திருக்கின்றார். அதற்குப் பதிலாக அரசியல் சட்டத்தை மதித்து நடப்போம் என்று வேண்டுமானால் மாற்றுங்கள் என்று கூறியிருக்கிறார்.

அரசியல்வாதிகள் தான் அரசியல் சட்டத்துடன் விளையாடுவார்கள் என்றில்லை. இராணுவ ஆட்சியாளர்களும் விளையாடுவார்கள் என்பது உலக அனுபவம். இந்த அளவுக்கு உலக நாடுகளின் கவனம் தன் மீது இருக்கும் நிலையிலும் கூட இராணுவ ஆட்சியாளர்கள் ஜனநாயகத்தை அனுமதிக்கவே முடியாது என்று பிடிவாதத்துடன் இருப்பது வியப்பாக இருக்கின்றது.

மியன்மாரில் ஜனநாயக உரிமைகளை மீட்டுத்தராவிட்டால் அந்த நாட்டின் மீது பொருளாதார இராணுவத் தடைகளை விதிக்க நேரிடும் என்ற சர்வதேச சமூகம் எச்சரித்த பின்னர் தான் ஆங் சாங் சூகி தேர்தலில் போட்டியிட விதித்திருந்த தடைகளை இராணுவ அரசு திரும்பப் பெற்றது.

அந்த நடவடிக்கைகள் வராமல் தடுத்துவிட்டால் ஜனநாயக உரிமைகளை மீட்டுக்கொடுக்க இராணுவத் தலைமை விரும்பவில்லை என்று தெரிகின்றது. (அ-2)

# ஆளில்லா விமானம் போல் தயாரிக்கிறது ஈரான்



(டெஹ்ரான்)

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் எல்லையில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளை தாக்குவதற்கு ஆளில்லா விமானங்களை அமெரிக்கா பயன்படுத்துகின்றது.

குறிப்பிட்ட இலக்கை குறிவைத்து தாக்குதல் நடத்த பயன்படும் இந்த வகை விமானங்கள் இரகசிய தகவல்களை சேகரிப்புக்கும் பயன்படுத்தப் படுகின்றது. கடந்த ஆண்டு டிசெம்பரில் கிழக்கு ஈரானில் தாக்குதல் நடத்த வந்த அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தை ஈரான் படையினர் பிடித்துவிட்டனர்.

அதை ஆய்வு செய்து அதேபோல் ஆளில்லா விமானங்களை தயாரிக்கும் பணியில் ஈரான் தற்போது ஈடுபட்டு வருகின்றது. இதை அந்நாட்டு விமானப்படை அதிகாரி அமிர் ஹாஜிஜடே தெரிவித்துள்ளார். (அ-2)

# ஹெக்லிக் எல்லை பகுதியிலிருந்து தெற்கு சூடான் படைகள் வாபஸ்

சூடான் எல்லையில் உள்ள சர்ச்சைக்குரிய எண்ணெய் வள பகுதியில் இருந்து சூடான் தனது படைகளை முற்றிலும் வாபஸ் பெற்றுள்ளது. சூடான் நாட்டில் 20 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டு சண்டையில் 15 இலட்சம் பேர் பலியாயினர்.

ஐ.நா. தலையீட்டின் பேரில் கடந்த ஆண்டு தெற்கு சூடான் தனி நாடாக உருவானது. சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தினர் தற்போது தெற்கு சூடானை ஆட்சி செய்து வருகின்றனர்.

இருநாட்டு எல்லையில் உள்ள ஹெக்லிக் என்ற இடத்தில் எண்ணெய் வளம் அதிகமாக உள்ளது.

இதை தங்களிடம் ஒப்படைக்கும் படி சூடான் அரசு தெற்கு சூடானை எச்சரித்து வந்தது. இதற்கு தெற்கு சூடான் மறுப்புத் தெரிவித்தால் இரு நாடுகளிடையே சமீபத்தில் சண்டை நடந்தது.

இந்த சண்டையில் இரு தப்பிலும் 22 வீரர்கள் பலியாகினர். ஹெக்லிக் பகுதியிலிருந்து தெற்கு சூடான் தனது படையை வாபுஸ் பெறவில்லை என்றால் அந்நாட்டுடன் போர் நடக்கும் என சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பஷீர் தெரிவித்திருந்தார்.

சண்டை நடந்தால் தெற்கு சூடானுக்கு ஆதரவளிப்போம் என உகாண்டா தெரிவித்திருந்தது.

நிலைமை விபரீதமாக போவதை கண்ட ஐ.நா. பொது செயலர் பான் கீ மூன் சர்ச்சைக்குரிய ஹெக்லிக் பகுதியிருந்து தெற்கு சூடான் தனது படைகளை வாபஸ் பெற வேண்டும் என கூறியிருந்தார்.

சர்வதேச வரைபடத்தின் படி ஹெக்லிக் சூடான் வசம் தான் உள்ளது. இருப்பினும் இந்த பகுதி தங்களுக்கு தான் சொந்தம் என தெற்கு சூடான் உரிமை கொண்டாடி வருகின்றது.

இந்த பகுதி இன்னும் சரியாக வரையறுக்கப்பட்டாத காரணத்தால் சர்ச்சை நீடிக்கின்றது. சூடான் நாட்டுடன் நடந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து மூன்று நாட்களுக்குள் தன்னுடைய படைகளை வாபஸ் பெறுவதாக தெற்கு சூடான் ஜனாதிபதி சால்வா கிர் உறுதியளித்துள்ளார். (அ-2)

# வற்றாத நஞ்சுப்பொய்கையும் வற்றத் தொடங்கிவிட்டது

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடஸ்ராஜ் சிவன் கோயிலில் பல நூறு ஆண்டுகளாக வற்றாமல் இருந்த மிகப் பெரிய குளம் வற்றத் தொடங்கிவிட்டது.

மகாபாரத காலத்தில் இந்த இடத்தில் இருந்த பொய்கையின் நீரைக் குடித்துத்தான் சகாதேவன், நகுலன், அர்ஜுனன், பீமன் ஆகியோர் மயக்கம் அடைந்து புல் தரையில் விழுந்தாதகவும் அங்கு வந்த தர்மன் கண்ணுக்கு தெரியாமல் யட்சனாக வந்த தர்மதேவதையின் கேள்விகளுக்கெல்லாம் அற்புதமாகப் பதில் கூறி தன்னுடைய 4 தம்பிகளையும் உயிரோடு எழுப்பிச் சென்றதாகவும் புராணம் கூறுகிறது. இந்த இடத்தில் உள்ள சிவன் கோயில் தேசப் பிரிவினைக்குப் பின்னர் பராமரிப்பு இல்லாமல் சிதிலம் அடைந்து வருகிறது.

அத்வானி பாகிஸ்தான் சென்ற போது இந்த இடத்துக்குச் சென்று சிவனை வழிபட்டார். அப்போது இருநாடுகளும் இணைந்து கோயிலைப் புதுப்பித்துக்கட்டலாம் என்று கூட பேசப்பட்டது.

இப்போது இந்தக் குளத்தைச் சுற்றி 3 சிமெண்டு ஆலைகள் உருவாகியுள்ளன. உள்ளாட்சி அமைப்புகள் இதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்காததால் குளத்தை அடுத்து 2 ஆழ்துளை கிணறுகளை அமைத்து எப்போதும் தண்ணீர் எடுத்து வருகின்றனர்.

இதனால் குளம் வற்றி வருகிறது. இந்தக் குளத்தின் அருகில் உள்ள கோயிலும் எப்போது வேண்டுமானாலும் இடிந்து வீழலாம் என்ற நிலையில் இருக்கிறது. (அ-2)

# போதைமருந்து விற்பனைக்கு கிலானி மகன் மீது குற்றச்சாட்டு

பாகிஸ்தானில் போதை மருந்து விற்பனைக்கு துணை போனதாக கூறி அந்நாட்டு பிரதமர் யூசுப் ரசா கிலானியின் மகன் அலி முசா பெயர் ஒரு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் சட்டவிரோத போதை மருந்து விற் பனை தொடர்பான மனுவை போதைபொருள் தடுப்பு படை (ஏஎன்எப்) உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்தது. முல்தானை சேர்ந்த 2 நிறுவனங்களுக்கு ரூபா 700 கோடி மதிப்பிலான போதை மருந்துகளை சட்டத்துக்கு புறம்பாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்தசட்ட விரோத செயலில் பிரதமர் கிலானியின் மகன் அலி முசாவுக்கு தொடர்பு உள்ளது. மேலும் பிரதமரின் முதன்மை செயலர் குஷ்நூத், போதைபொருள் கட்டுப்பாட்டாளர் ஷேக் அன்சார் உட்பட 7 பேர் அதிகார துஷ்பியோகம் செய்து போதைப்பொருள் விற்பனைக்கு துணை போயுள்ளனர். பிரதமர் அலுவலகம் உட்பட பல்வேறு இடங்களில் நடத்திய விசாரணையில் இது தெரியவந்ததாக ஏஎன்எப் குறிப்பிட்டுள்ளது. (அ-2)



பிரான்சில் நடந்த ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதியும் வேட்பாளருமான நிகோலஸ் சர்கோசி மற்றும் அவரது மனைவி கார்லஸ் புருனி வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிக்கு சென்றதைப் படத்தில்காணலாம்.

## உலக தரிசனம்

# பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தல்; ஹாலண்டுக்கு வெற்றி வாய்ப்பு

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவு நேற்று நடந்தது. இந்த தேர்தலில் நிக்கோலஸ் சர்கோசியை (57) தோற்கடித்து பிரான்காய்ஸ் ஹாலண்ட் புதிய ஜனாதிபதியாவதற்கானவாய்ப்பு இருப்பாதகக் கூறப்படுகிறது. யூனியன் பார் பார்ப்புலர் மூவ்மெண்ட் கட்சியைச் சேர்ந்த சர்கோசி கடந்த 2007 பிரான்ஸ் ஜனாதிபதியபனார். இவரது பதவிக்காலம் மே 15 இல் முடிகிறது. இவர் 2வது முறையாக ஜனாதிபதிதேர்தலில் போட்டியிடுகிறார். இது தவிர மேலும் 9 பேர் களத்தில் உள்ளனர். எனினும் இவருக்கும் பிரான்ஸ்சோஷலிஸ் கட்சியின் பிரான்காய்ஸ் ஹாலண்டுக்கும் (57) இடையேதான் கடும் போட்டி நிலவுகிறது.

கடந்த சில வாரங்களாக தேர்தல் பிரசாரம் அனல் பறந்தது. சர்கோசி ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்து விட்டதாகவும் ஹாலண்ட் தமது பிரசாரத்தின் போது குற்றம் சாட்டினார். இது போல் ஹாலண்ட் அனுபவம் இல்லாதவர் என்றும் உறுதியான முடிவு எடுக்க அவரால் முடியாது என்றும் சர்கோசி பிரசாரம் செய்தார்.

இந்நிலையில் முதல்கட்ட தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. மொத்தம் உள்ள 4.4 கோடி வாக்காளர்களில் 70 முதல் 75 சதவீத வாக்குகள் பதிவாகி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தேர்தலில் சர்கோசி, ஹாலண்ட் மட்டுமே களத்தில் இருப்பர். மற்ற 8 பேரும் தகுதியை இழப்பார்கள் என்று கருதப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக மே 6 ஆம் திகதி இறுதிகட்ட தேர்தல்நடைபெறஉள்ளது.

இறதி கட்ட தேர்தலில் சர்கோசி தோல்வியை தழுவுவார் என்றும் ஹாலண்ட் புதிய ஜனாதிபதி ஆவார் என்றும் பல்வேறு கருத்து கணிப்புகள் கூறியுள்ளன. அவ்வாறு சர்கோசி தோற்றால் கடந்த 30 ஆண்டுகளில் இராண்டாம் முறை போட்டியிட்டுதோற்றமுதல்ஜனாதிபதி இவராகத்தான் இருக்கும். அதுபோல் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் சோஷலிஸ்ட்கட்சியைச்சேர்ந்தஒருவர்ஜனாதிபதியாவார். மத்திய கொரெசி பகுதியில் உள்ள டுல்லே நகரை சேர்ந்த ஹாலண்ட் அதே பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். (அ-2)

சதா தள்ளாடுவதை விட ஒரு தடவை விழுந்து எழுவது சிறந்தது.

-ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சிங்கத்தை எதிர்ப்பதற்கு மாடுகளிடம் ஒற்றுமை வேண்டும்

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் இப்போது பௌத்த–இஸ்லாமிய மதங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு பங்கம் விளைவிப்பதாக மாறியுள்ளது.

நிலைமை சுமுகமாகத் தீர்க்கப்படாமல் போகுமாயின் மதக்கலவரங்கள் எழக் கூடியதான நிலைமைகளும் தோன்றலாம். எதுவாயினும் இந்த நாட்டின் நீதியமைச்சராக இருக்கின்ற அமைச்சர் ரவூப்ஹக்கீமுக்கு இது சவால் நிறைந்த விடயமாக அமையப்போவது திண்ணம்.

ஜெனிவாவுக்குச் சென்று இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடிப்பதில் முனைப்புடன் செயற்பட்ட நீதியமைச்சர் ஹக்கீம் மற்றும் ஜெனிவாத் தீர்மானத்தில் இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட முஸ்லிம் நாடுகளுக்கு தம்புள்ள பள்ளிவாசல் ஒரு படிப்பினையாக அமையும்.

இலங்கைத்தீவில் சிறுபான்மை தமிழ் மக்கள் தங்கள் உரிமை தொடர்பில் ஏதோ ஒரு [illegible]கையில் போராடிக்கொண்டிருப்பதன் காரணமாகவே முஸ்லிம் மக்கள் தங்கள் நலன்களை பாதுகாத்து வருகின்றனர்.

தமிழ்–சிங்கள உறவு பலப்படுமாக இருந்தால் சிங்கள இனத்தால் மிகமோசமான பாதிப்புக்களை முஸ்லிம் மக்கள் அனுபவிக்க வேண்டிவரும்.

இந்த நிலை எப்போதும் ஏற்படலாம். ஆனால் இந்த உண்மையை முஸ்லிம் மக்கள் உணர்வதாக இல்லை. உண்மையில் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்பட்டு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்திருப்பார்களாக இருந்தால், தம்புள்ள பள்ளிவாசல் போன்ற பிரச்சினைகள் எழுந்திருக்க மாட்டாது.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்ட போதெல்லாம் முஸ்லிம் அமைச்சர்கள், முஸ்லிம் அரசியல் வாதிகள் மௌன[illegible]கவே இருந்தார்கள். சம்பிரதாயத்திற்கேனும் அவர்கள் குரல் கொடுக்கவில்லை.

குறிப்பாக வன்னியுத்தத்தின் போது தமிழ் மக்கள் பட்ட துன்பம் சொல்லிமாளா. இருந்தும் முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித்தலைவர்கள் யாரேனும் வன்னிமக்களுக்காக குரல் கொடுக்கவில்லை.

ஆனால் நியாயத்துவம் உணர்ந்த சிங்களத் தலைவர்கள் அவர்களுக்காக குரல்கொடுத்தனர். அதில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன முக்கியமானவர்.

இப்போது இந்த நாட்டின் நீதி அமைச்சராக இருக்கின்ற ரவூப் ஹக்கீம் தனது அமைச்சர் பதவியில் இருந்து கொண்டு நீதியை நிலை நாட்ட முடிகின்றதா என்று ஒரு கணம் சிந்திப்பாராயின் அவருக்கு உண்மை புரியும். நீதி அமைச்சராலேயே நீதியை நிலைநாட்ட முடியவில்லை.

நீதி நிலைநாட்டப்பட்டிருந்தால் தம்புள்ளையில் பள்ளிவாசல் உடைக்கப்பட்டிருக்க மாட்டாதல்லவா?

இந்த உண்மையை, விசாரணையின்றி சிறையில் வாழும் தமிழ் இளைஞர்களின் கண்ணீரில் இருந்துநீதி அமைச்சர் ஹக்கீம்கற்றிருக்கவேண்டும்.

அது தமிழர்கள் என்ற பார்வையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவின் மறுதாக்கமே தம்புள்ளையில் அடித்திருக்கிறது.

ஓ! முஸ்லிம் அமைச்சர்களே! சிங்கத்தை எதிர்ப்பதாக இருந்தால் மாடுகளிடம் ஒற்றுமை இருக்க வேண்டும் என்ற கதையை ஒருகணம் ஞாபகப்படுத்துங்கள். இதைநாம் இவ்விடத்தில் எழுதும் போது யாழ்ப்பாணத்தில் ஒரு காளை மாடு கதறுகிறது.

அந்தக்கதறல் தம்புள்ளையில் நிச்சயம் ஒலிக்கும்.

# ஸ்ரீ.சு.கட்சியின் சிரேஷ்டர்கள் கோத்தபாய மீது சீற்றம்

(கொழும்பு)

படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது இலங்கை சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் அதிருப்தி கொண்டுள்ளதாக தெரியவருகின்றது. இதனால் கோத்தபாய ராஜபக்ஷவை இம் மூத்த உறுப்பினர்கள் பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்துள்ளதாக கூறப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்க மற்றும் அமைச்சர் ஜோன் செனவிரத்ன ஆகியோரே இவ்வாறு கோத்தபாய ராஜபக்ஷ மீது பகிரங்கமாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரும், படைத்துறைச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களாக படைத்தரப்பு அதிகாரிகளை நியமித்து கட்சிக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதாக அவர்கள் குற்றம்சுமத்தியுள்ளனர்.

கோத்தபாய ராஜபக்ஷவின் இந் நடவடிக்கை சுதந்திரக்கட்சியின் யாப்புக்கு முற்றிலும் முரணானது என சுட்டிக்காட்டியுள்ள இவர்கள், எந்த வொரு சிரேஷ்ட உறுப்பினர்களின்கருத்துக்களையும் அவர் கவனத்தில் கொள்வதில்லை எனவும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், இலங்கையின் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனைத்து மாவட்டங்களிலும் படைத்தரப்பினரின் உதவிகளை அவர் பெற்றுவருவது தொடர்பிலும் சுதந்திரக்கட்சியின் அந்தந்த தொகுதி அமைப்பாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் இடம் பெறுகின்ற ஆட்கடத்தல்கள் சம்பவங்களின் பின்னணியில் படைத்துறைச் செயலாளரே இருப்பதாக கூறப்பட்டு வரும் நிலையில், ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கதான் ஒரு இலங்கையர் எனக் கூறுவதற்கு வெட்கப்படுவதாக குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே. (ந-8,11)

# தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் முஸ்லிம் அமைச்சர்கள் விசனம்

(கொழும்பு)

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை பொய்யான தகவல் களைக் கொண்டுள்ளதாக தெரிவந்துள்ளது.

தம்புள்ள ஹைறியா ஜும்ஆ பள்ளிவாசலை அகற்ற இலங்கையின் பிரதமரும், புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

இவ் விவகாரம் தொடர்பில் கம்பளையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில், முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் காணப்பட்ட இணக்கப் பாட்டையடுத்தே பிரதமர் இந்த உத்தரவை விடுத்திருந்தார்.

இக் கலந்துரையாடலில் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, பிரதி அமைச்சர்களான அப்துல்காதர், எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோரும் கலந்து கொண்டதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இச் சந்திப்பில் அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள முஸ்லிம் அமைச்சர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என தெரியவந்துள்ளது.

இச் சந்திப்பில் தான் கலந்து கொள்ளவில்லை என பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா கூறியுள்ளார். அதேபோன்று இச்சந்திப்பில் தானோ, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானாவோ கலந்து கொள்ளவில்லை என சிரேஷ்ட அமைச்சரான பௌசியும் தெரிவித்துள்ளார்.

இதனை உறுதிப்படுத்தியுள்ள அலவி மௌலானா இப்பள்ளிவாசலை அகற்றவோ அல்லது வேறு இடத்திற்கு மாற்றவோ தான் ஆதரவு தெரிவிக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

அத்துடன், இப் பள்ளிவாசலை வேறு இடத்திற்கு மாற்றுவது தொடர்பில் முஸ் லிம் அரசியல் தலைமைகளுடன் எவ்வித இணக்கப்பாடும் காணப்படவில்லை. குறிப்பிட்ட இடத்திலிருந்து இப் பள்ளி வாசலை அகற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அமைச்சர் பௌசி உறுதியாகத் தெரிவித்துள்ளார். (ந-8,11)

# சாவகச்சேரி நகரசபை பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபைத் தலைவர் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து நகர சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், சபை உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து நேற்று நகர சபைக் காரியாலயத்திற்கு முன்பாக ஒருமணி நேரம் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி நகர சபைத் தலைவராகப் பணியாற்றி வரும் தேவசகாயம் பிள்ளையின் வீட்டின் மீது கடந்த சனிக்கிழமை நள்ளிரவு வேளை 4 மோட்டார் சைக்கிளில் சென்ற குழுவொன்று தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதைக் கண்டித்தே நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை சாவகச்சேரி நகர சபையின் அனைத்து உறுப்பினர்கள், ஊழியர்கள் ஒன்று சேர்ந்து இப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதில் நகர பிதாவின் வீடு தாக்கப்பட்டதை கண்டிக்கின்றோம், தாக்கியவர்களை கைது செய், மக்களின் அபிலாசைகளை உங்கள் வன்முறையால் அடக்க முடியாது, மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவருக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பது எதற்கு? நகர பிதா வீட்டின் மீது நடந்த தாக்குதல் நகர மக்களாகிய எமக்கு விழுந்த அடியே, நகரத் தலைவருக்கே பாதுகாப்பு இல்லையெனில் நமக் கேது பாதுகாப்பு? என்ற சொற்றொடர் கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறு பணிப்புறக்கணிப்பில் ஈடு பட்டனர்.

இப்பணிப்புறக்கணிப்பின் போது சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ந-3,29)

## மாங்குளம் கமக்காரர் விசேட பொதுக்கூட்டம்

(மாங்குளம்)

மாங்குளம் கமக்கார அமைப்பின் விசேட பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 2மணிக்கு கமக்கார அமைப்புத் தலைவர் சிவானந்தம் தலைமையில் மாங்குளம் கிராம சேவையாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து மாங்குள கமக்கார அமைப்பு அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (ந-261)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பெயர் நிலைக்க வேண்டும்



. குழந்தை தன் தேவைக்கு தாயை நம்புவது போல் பெரியவர்கள் தன் தேவைக்கு அம்பிகையை நம்பி வாழ்கிறார்கள்.

தெய்வத்தை அன்னையாக வழிபாடுசெய்யும் போது வாழ்வில் அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

அம்பாள் கருணையே வடிவானவள் அனைத்து சக்தியும் கொண்டவள்.எங்கும் நிறைந்தவள்.

உலகத்தில் இருக்கும் ஒட்டு மொத்த சக்தியும் திரண்டு நிற்கும் தெய்வீக வடிவே அம்பாள்.அவளே உலக இயக்கத்துக்கு ஆதாரமாக இருக்கிறாள்.

நல்ல லட்சியத்தைத் தேர்வு செய்து தைரியத்துடன் வீரானாக இருங்கள். வாழ்ந்து மறையும் போது உங்கள் பெயர் நிலைத்திருக்கும் வகையில் அழியாத அறிகுறி ஒன்றை விட்டுச்செல்லுங்கள்.

மகத்தான செயல்களைச் செய்வதற்கு இறைவன் நம்மை படைத்திருக்கிறான். அந்தச் செயல்களை நாம் செய்து முடிப்போம்.

வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியும் பெரும் மன உறுதியும் வேண்டும் விடாமுயற்சி செய்பவன் கடலையே குடித்துவிடுவான்.

# அற்புத அதிசய பலன்தரும் அட்ஷய திருதியை

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான காத்தற் கடவுள் ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியின் அருட் சக்தி மகாலட்சுமியின் அருள் பெற்றுய்ய உகந்த விரதம்தான் இந்த அட்ஷய திருதியை.

சைவ மக்களின் பெருநாளான அற்புத அதிசய பலன் தரும் இந்த அட்ஷய திருதியை ஒரு புனித புண்ணியத் திருநாளாகும். அட்ஷயம் என்ற சொல்லுக்கு வளர்வது என்று பொருள். வறுமையில் வாடிய குசேலர் குபேரனாக மாறிடக் காரணம் கிருஷ்ணர் சொன்ன **அட்ஷயம்** என்ற ஒரே சொல் தான்.

பாரதத்திலே பாஞ்சாலி துகிலுரியப்பட்ட போதும் அவளது சேலை நீண்டு வளர்வதற்குக் காரணமாக அமைந்ததும் இந்த அட்ஷயம் எனும் சொல் தான். சித்திரை மாதத்திலே சிறப்புக்குரிய நாட்கள் பல. சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைச் சித்திரை, சித்திரா பௌர்ணமி, அட்ஷய திருதியை, சித்திரைச் சதயம் என்பன விசேட தினங்களாகும். இவற்றுள் அட்ஷய திருதியை தனித்துவமான சிறப்புடைய திருநாள் என்பது ஆன்றோர் முடிபு.

இந்த அட்சய திருதியை நாளில் தங்கம் வாங்கினால் எங்கும் பொங்கும் மங்களம் நிறைந்து வாழ்க்கை வளம் பெறும் என்று கூறப்படுகிறது.

இந்தப் புனித புண்ணிய நாளில் அதிகாலை எழுந்து புனித புண்ணிய நீராடி பூசை அறையிலே நெய் விளக்கு ஏற்றுங்கள்.

வீட்டிலுள்ள மகாலட்சுமி படத்தின் முன் தலைவாழை இலை போட்டு அதிலே கொஞ்சப் பச்சரிசியையிட்டு நிறைகுடமாக கும்பம் வையுங்கள். மஞ்சளால் ஒரு பிள்ளையார் பிடித்து அதைக் கும்பத்துக்கு அருகில் வைத்துப் பொட்டு வைத்து மலர் சூட்டுங்கள்.

கற்பூர தீபங் காட்டி பாயாசம் வைத்து மகாலட்சுமியை மன தார நினைந்து வணங்கி தோத் திரங்களைச் சொல்லி வழிபாடியி யற்றுங்கள். வாட்டிடும் வறுமை நீங்கிச் செல் வச் செழிப்போடு வாழ்வீர்கள்.

இந்த அட்ஷய திருதியை அன்று அன்னதானஞ் செய்து ஏழை எளியவர்களுக்குத் தான தர்மம் செய்தால் அது மென்மேலும் வளர்ந்து பல்கிப்பெருகி அரிய பல சிறப்புக்களை அள்ளித்தரும்.

இந்த அட்சய திருதியை நாளில் தான் சந்திரனைத் தலையில் சூடி அவனுக்குப் பாப விமோசனம் கொடுத்தார் சிவபெருமான். இப்படிப்பட்ட சிறந்த திருநாளில் நாங்கள் நல்லனவற்றைச் செய்து நல்வாழ்வு கிட்ட நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.

கலாபூஷணம்
இராசையை ஸ்ரீதரன்

# மேதினத்தில் மாபெரும் பேரணி

மே தினத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி பெரும் பேரணியையும் பொதுக்கூட்டத்தையும் யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிட்டுள்ளதாக அக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடாக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுத்த தினமான மே தினத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மாபெரும் பேரணியையும், பொதுக்கூட்டத்தையும் யாழ்ப்பாணத்தில் நடாத்தவுள்ளது.

இந்தப் பேரணியில் பல்வேறு தொழிற்சங்க அமைப்புக்களைச்சேர்ந்த தொழிலாளர்கள், விவசாயிகள், வர்த்தக ஊழியர்கள், கிராம உழைப்பாளர்கள் மற்றும் போக்குவரத்துத்துறை ஊழியர்கள் உட்பட பெருமளவு பொதுமக்களும் பங்கேற்கவுள்ளனர்.

யாழ்.குடா நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து மேதினப் பேரணியில் பங்கேற்கும் பொருட்டு, யாழ்ப்பாணத்தை நோக்கி வரும் தொழிலாளர்கள் நகரத்தின் மூன்று வெவ்வேறு இடங்களில் ஒருங்கிணைந்து ஊர்வலமாக வேம்படிச் சந்திக்கு வருகை தரவுள்ளனர்.

அங்கிருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் பிரதான ஊர்வலம் முதலாம் ஆம் குறுக்குத்தெரு ஊடாக பிரதான வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து சுப்பிரமணிய பூங்காவிற்கு எதிரில் உள்ள யாழ்.மாநகரசபைத் திடலைச் சென்றடையவுள்ளது.

இந்த ஊர்வலத்தில் உழைக்கும் மக்களின் உரிமைகளை வலியுறுத்தும் பல்வேறு பதாகைகளும் ஊர்திகளும் இடம்பெறவுள்ளது என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

# பாலஸ்தீன வெளிவிவகார அமைச்சரை இஸ்ரேல் அமைச்சராக்கிய ஜீ.எல். பீரிஸ்

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் வித்தியாசம் தெரியாமல் செய்தியாளர் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தடுமாறியது இராஜதந்திர வட்டாரங்களில் மிகவும் கேலிக்குரிய விவகாரமாக பார்க்கப்படுகின்றது. அண்மையில் பாலஸ்தீன ஜனாதிபதி அப்பாசுடன் கொழும்பு வந்திருந்த பாலஸ்தீன வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தன் பக்கத்தில் பாலஸ்தீன வெளிவிவகார அமைச்சரை வைத்துக்கொண்டே மதிப்புக்குரிய இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் ரியாட் அல் மலிகி மதிப்புக்குரிய இஸ்ரேல் தூதுவர் என்று வரவேற்கத்தொடங்கினார்.

அப்போது அவருக்கருகில் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சரோ, தூதுவரோ இருக்கவில்லை. பாலஸ்தீன விவகார அமைச்சரும் தூதுவரும் தான் உடனிருந்தனர். வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இவ்வாறு கூறியதும் பாலஸ்தீன வெளிவிவகார அமைச்சர் மற்றும் தூதுவரின் முகங்கள் சிவந்தன. ஒன்றுக்கு இரண்டு முறை இஸ்ரேல் என்று அடுத்தடுத்து பீரிஸ் கூறியது அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆனால் பீரிஸ் மிக சாதாரணமாக மன்னிக்கவும் என்று கூறிவிட்டு தொடர்ந்து பேசினார். பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் குறைந்த பட்ச வித்தியாசத்தை கூட உணராமல் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மிகப்பெரிய ராஜதந்திர தவறை இழைத்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று விமர்சித்துள்ளது. (அ-2)

# சம்பந்தன் நேர்மையான தலைவர்

## சுஷ்மா புகழாரம்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஓர் நேர்மையான தலைவர் என்று இந்திய பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் பா.ஜ.க. தலைவருமான சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தலைவர்களும் தமிழர்களும் பிளவுபடாத ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றை காண்பதற்கே விரும்புகின்றனர். இலங்கையின் இறைமை ஒருமைப்பாட்டை மதிக்கின்றனர்.

அந்த வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஓர் நேர்மையான தலைவர் என்று சுஷ்மா சுவராஜ் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய எதிர்க்கட்சித் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஆறுநாட்கள் விஜயத்தை முடித்துக்கொண்டு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் கேட்ட வினாக்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் தீர்வு விடயம் தொடர்பிலும் கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி கால வரையறை கொடுத்துள்ளாரா என்று ஊடகவியலாளர்கள் வினவினர்.

அதற்கு அவர் பதிலளிக்கையில்,

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதில் தமிழ் தலைவர்கள் உறுதியாகவே இருக்கின்றனர்.

அரசியல் தீர்வு தொடர்பில் நாம் ஒவ்வொரு சந்திப்புக்களிலும் வலியுறுத்தியே வந்திருக்கின்றோம். ஜனாதிபதியிடமும் வலியுறுத்தினோம்.

பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வொன்றே அவசியம் என்தேறபதை சம்பந்தன் பல தடவைகள் வலியுறுத்தி யுள்ளார்.

அவர் ஒரு கௌரவமான இலங்கையர் என்றும் குறிப்பிட்டார். எம்மை பொறுத்த வரையில் அவர் ஒரு நேர்மையான தலைவர் என்றார். (2)

# கல்கமுவவில் கடும்காற்று; 67 வீடுகள் சேதம்

கல்கமுவ பிரதேச செயலர் பிரிவில் வீசிய கடும் காற்று காரணமாக 67 வீடுகள் சேதமடைந்துள்ளன.

புதுருவகந்த, குருந்தன் குளம் மற்றும் கெலேகம ஆகிய பிரதேசங்களை ஊடறுத்து இந்த கடும் காற்று வீசியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலைய ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் சரத் லால் குமார தெரிவித்துள்ளார்.

அதிகளவான வீடுகளுக்கு சிறு அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதுருவகந்த பகுதியில் 49 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் ஒரு வீட்டிற்கு முழுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (2)

# பொறளை கனத்தை மயானத்தில் நள்ளிரவில் சடலங்கள் எரிப்பு

கொழும்பு, பொறளை கனத்தை மயானத்தில் மர்மமான முறையில் பிணத்தை எரிக்கும் பணிகள் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணிக்கும் 2 மணிக்கும் இடையில் இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக லங்கா நியூஸ் வெப் இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வழக்கமாக பொறளை கனத்தை மயானத்தில் மாலை 7 மணிக்குப் பின்னர் சடலங்களை எரிக்கும் பணிகள் இடம் பெறுவதில்லை.

நேற்றுமுன்தினம் அதிகாலை சடலம் எரிக்கும் பணி இடம்பெற்றபோது மயானப் பகுதியில் இரண்டு ஜீப் வண்டிகளும், வெள்ளைவான்களும் நின்றதாக அயலில் உள்ள ஒருவர் பொறளை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இதுபற்றி தாம் 1.40 மணியளவில் பொறளை பொலிஸாரிடம் முறையிட்டதாகவும் ஆனால் அந்த ஜீப்கள் மற்றும் வெள்ளை வான்கள் அவ்விடத்திலிருந்து செல்லும் வரை பொலிஸார் அங்கு வரவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். பொறளை பொலிஸ் அதிகாரி ஒருவர் இந்த முறைப்பாடு கிடைத்துள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் மேற்பார்வையில் இயங்கும் கனத்தை மயானம் இரவு 7 மணிக்குப் பின்னர் இயங்குவதில்லை என்றும் அதன் பின்னர் மயானத்தின் சாவி பிரதம பாதுகாப்பு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும் என்றும் கொழும்பு மாநகரசபை அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

1988,89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜேவீர உள்ளிட்ட ஏராளமானோரின் சடலங்கள் நள்ளிரவு நேரங்களில் இரகசியமாக கனத்தை மயானத்தில் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)


# பதவி வெற்றிடம்

★ ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள் (பயிலுநர், ஆண்கள்)

★ பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)


மேற்படி இரண்டு வெற்றிடங்களுக்கும் கிளிநொச்சி முல்லைத்தீவைச் சேர்ந்தவர்களிட மிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. தெரிவு செய்யப்படுவர்களுக்கு தகுந்த வேதனத்துடன் உணவு மற்று தங்குமிடவசதி வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை

மனிதவள முகாமையாளர்
வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# ராஜஸ்தான் றோயல்லை 46 ஓட்டங்களால் வென்றது பெங்களூர்



(ஜெய்ப்பூர்)

ஐ.பி.எல்.போட்டித் தொடரின் 30ஆவது லீக் ஆட்டம் ஜெய்ப்பூரில் உள்ள சவாய் மான்சிங் மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் டிராவிட் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

ராஜஸ்தான் அணியில் அமித் சிங், மெனேரியா ஆகியோருக்கு பதிலாக பங்கஜ் சிங், சண்டிலா அணியில் சேர்க்கப்பட்டனர்.

பெங்களூர் அணியைப் பொறுத்தவரை டில்சான் அணிக்கு திரும்பியதால் மெக்டொனால்ட் சேர்க்கப்படவில்லை. மேலும் அருண் கார்த்திக்குக்கு பதிலாக அப்பண்ணா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணித் தலைவர் ராகுல் ராவிட் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனால் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் துடுப்பாட்டம் செய்யக் களமிறங்கியது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய டில்சானும் ;விராட் கோலியும் களம் இறங்கினார்கள்.கோலி 16 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டம் இழந்தார். பின்னர் வந்த அகர்வால் 15 ஓட்டங்களிலும் கெய்ல் 2 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து வெளியேறினர்.

அடுத்து டில்சான், ஏபி டி வில்லியர்ஸ் ஜோடி அதிரடி ஆட்டம் மூலம் அணியை தூக்கி நிறுத்தினர்.

இதன் மூலம் பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது.

இதனையடுத்து 190 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி களமிறங்கியது.

ராஜஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ராவிட்டும், ரகானேயும் களமிறங்கி அதிரடியாக ஆட ஆரம்பித்தனர்.

ஆனால் ராவிட் மட்டும் 42 பந்துகளில் 58 ஓட்டங்களை பெற்றார். மற்றைய வீரர்கள் எவரும் சொல்லிக் கொள்ளும்படியாக விளையாட வில்லை.

பெங்களூர் அணியின் பந்துவீச்சாளர் அப்பண்ணா 4 விக்கெட்டுகளையும் பட்டேல் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ராஜஸ்தான் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து143 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. இதனால் ராஜஸ்தான் அணி 46 ஓட்டங்களால் பெங்களூரிடம் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஏபிடி வில்லியர்ஸ் தெரிவானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டிகள்:**

மாலை 4 மணிக்கு புனேயில் நடைபெறும் போட்டியில் புனே வாரியர்ஸ் எதிர் டில்லி டேர்டேவில்ஸ் அணிகளும் இரவு 8 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் எதிர் டெக்கான் சார்ஜர்ஸ்அணிகளும் மோதுகின்றன.

# கிரிக்கெட் வீரர் ஜெஹான் முபாரக் பிணையில் விடுதலை

(சிலாபம்)

வாகன விபத்துச் சம்பவம் ஒன்று தொடர்பில் சிலாபம் பொலிஸாரால் நேற்று திங்கட் கிழமை காலை கைது செய்யப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் ஜெஹான் முபாரக் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான தனிநபர் பிணையில் செல்ல சிலாபம் நீதிவான் நீதி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

அத்துடன் விபத்தில்உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு 6 லட்சம் ரூபாயினையும் காயமடைந்தவருக்கு 4 லட்சம் ரூபாயினையும் வழங்குமாறு கிரிக்கெட் வீரர் ஜெஹானுக்கு நீதி மன்றம் பணித்துள்ளது.

கொழும்பு – சிலாபம் பிரதான வீதி, மைக்குளம் பகுதியில் கிரிக்கெட் வீரர் ஜெஹான் செலுத்தி வந்த டிபென்டர் ரக வாகனம் எதிரில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றும் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவத்தை அடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கிரிக்கெட் வீரர் ஜெஹானை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியதை அடுத்தே அவரைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

# தென்னாபிரிக்காவுடன் மோத பங்களாதேஷ் விருப்பம்

தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரொன்றில் பங்குபற்ற பங்களாதேஷ் கிரிக்கெட் சபை விடுத்த கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து வருவதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இது சாத்தியமானால் எதிர்வரும் மே மாதத்தில் இத் தொடர் இடம்பெறவுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் முஸ்தபா கமால் கடந்த வாரம் இந்தக் கோரிக்கையை விடுத்ததோடு, தொடருக்கான முழுச் செலவுகளையும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ளும் என அறிவித்துள்ளார்.

அத்தோடு இந்தத் தொடர் பங்களாதேஷிலா அல்லது தென்னாபிரிக்காவிலா இடம்பெறும் என்பது தொடர்பான முடிவுகளும் இன்ன மும் எடுக்கப்படவில்லை.

இக்கோரிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜக்ஸ் போல், பங்களாதேஷின் கோரிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அத் தொடர் சாத்தியமானதா என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

பிரேரிக்கப்பட்டுள்ள தொடர் குறித்து தங்களுக்கு எந்த விருப்பமின்மைகளும் கிடையாது எனத் தெரிவித்த அவர், போட்டி அட்டவணைகளுக்கு நடுவே இத் தொடரை உள்ளடக்க முடியுமா என்பதே கலந்துரையாடப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தத் தொடர் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காக தென்னாபிரிக்கக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்புடனும், அணியின் பயிற்றுவிப்பாளர் ஹரி கேர்ஸ்டனுடனும் இவ்வாரத்தில் சந்திப்பொன்றை ஜக்ஸ் போல் மேற்கொள்ளவுள்ளார்.

வீரர்களின் உடற்தகுதியை பாதிக்காமல் இத் தொடரை ஏற்பாடு செய்ய முடியுமா என்பது குறித்தான கலந்துரையாடல்களே இவர்கள் இருவருடனான சந்திப்பிலும் முக்கிய இடம் வகிக்க உள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பரில் இருபது-20 உலகக்கிண்ண போட்டிகள் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னதாக பங்களாதேஷ் அணி எந்தப் போட்டிகளிலும் பங்குபற்றவில்லை. ஆனால் மறுபுறத்தில் தென்னாபிரிக்க அணி அதிக போட்டிகளைக் கொண்டு காணப்படுகின்றது.

அண்மையில் நியூசிலாந்தில் முழுமையான தொடரொன்றில் பங்குபற்றி நாடு திரும்பிய பின்னர், ஜுலையில் இரண்டு மாதங்களுக்கும் மேற்பட்ட கிரிக்கெட் பயணத்திற்காக இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளது.

அதன்பின்னர் இருபது-20 உலகக் கிண்ணம், அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம், நியூசிலாந்துடனான தொடர் என தொடர்ச்சியான போட்டிகள் காணப்படுகின்றன.

அத்தோடு ஐ.பி.எல் போட்டிகள் மே 27 ஆம் திகதியே நிறைவடையவுள்ள நிலையில் தென்னாபிரிக்க அணியின் முக்கிய வீரர்களான ஏபி டி.வில்லியர்ஸ், டேல் ஸ்ரைய்ன்,, மோர்னி மோர்கல் உட்பட 20 வீரர்கள் ஐ.பி.எல் போட்டிகளுக்காக இந்தியாவில் உள்ளனர்.

பங்களாதேஷ் அணியின் முக்கிய வீரர்களான தமிம் இக்பால், ஷகிப் அல் ஹசன் ஆகியோரும் இந்தியாவிலேயே காணப்படுகின்றனர். ஆகவே இத் தொடரில் பிரதான வீரர்கள் பங்குபற்ற முடியாத நிலை ஏற்படலாம்.

# மான்டி கார்லோ டென்னிஸ் நடால் சம்பியனானார்

(மான்டி கார்லோ)

மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். ஏடிபி அந்தஸ்து பெற்ற மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி பிரான்சின் மான்டி கார்லோ நகரில் நடைபெற்று வந்தது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில், உலகின் நம்பர் 1 வீரரான சேர்பியாவின் நோவாக் டிஜோவிக், ஸ்பெயினின் ரபேல் நடால் மோதினர்.

களிமண் ஆடுகளத்தில் ஆதிக்கம் செலுத்தக் கூடியவரான நடாலை இம்முறை நம்பர் 1 வீரரான டிஜோகோவிக் வீழ்த்துவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், நடாலின் அதிரடி ஆட்டத்துக்கு டிஜோகோவிக்கால் ஈடுகொடுக்க முடியவில்லை.

நடால் 6:3,6:1 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.



இத் தொடரில் நடால் வெல்லும் 8ஆவது சம் பியன் கிண்ணம் இது. மேலும், இவர் வெல்லும் 47-வது ஏடிபி சம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக் குடியரசின் ராடிக் ஸ்டீபனிக் ஜோடி கால் இறுதியில் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் வீரர்களுக்கு பங்களாதேஷ் பிறீமியர் லீக் இன்னும் ஊதியம் வழங்கவில்லை

பங்களாதேஷில் இடம்பெற்ற பங்களாதேஷ் பிரிமியர் லீக் தொடரில் பங்குபற்றிய பாகிஸ்தான் வீரர்களுக்கான பெரும்பகுதி ஊதியப்பணம் இன்னமும் வழங்கப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியாகியுள்ள தகவலின் அடிப்படையில் வீரர்களுக்கு 25 சதவீதமான ஊதியம் மாத்திரமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

வெளியாகியுள்ள இந்தத் தகவலை உறுதிப்படுத்திய பாகிஸ்தானின் சிரேஷ்ட வீரரொருவர், அணிகள் வழங்க வேண்டிய பணத்தில் 25 சதவீதம் மாத்திரம் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய 75 சதவீதம் தொடர்பாக இன்னமும் உறுதியான நிலைப்பாடு எதுவும் வெளிப்படுத்தவில்லை எனத் தெரிவித்தார்.

தங்களின் வாழ்க்கை பற்றிய கவலை தங்களுக்கு உள்ளதாகத் தெரிவித்த அந்த வீரர், பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கு இது தொடர்பாக நினைவுபடுத்துவதைத் தவிர வேறெந்த வழியையும் அறிய முடியாதுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாண்டு இடம்பெற்ற பங்காளதேஷ் பிரிமியர் லீக் தொடரில் ஏராளமான பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்றதுடன், 25 ஆயிரம் ஐக்கிய அமீரிக்க டொலர்களிலிருந்து 5 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வரையிலான பெறுமதியில் அவ் வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதிய அங்கத்துவ...

மற்றும் கட்டார் உள்ளிட்ட நாடுகளுக்கு 2012 ஆம் ஆண்டுடன் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவக் காலம் நிறைவடைகிறது.

எனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத் தொடரில் இலங்கைக்கான செல்வாக்கு பலவீனம் அடைந்து ஆதரவு வீதம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படலாம்.

இத்தகையதொரு நிலை ஏற்படுமாயின் இலங்கை சர்வதேச பிடியிலிருந்து மீண்டெழ முடியாதவாறு சிக்கிவிடும்.

இந்த அபாயகரமான நிலையை உள்ளூர அறிந்து வைத்துள்ளமையாலேயே அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தில் புதிதாக அங்கத்துவம் பெறும் நாடுகளை வளைத்துப் போடுவதற்கு முயற்சிக்கிறது.

இப்புதிய வியூகத்திற்கு இணங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஆசிய, ஆபிரிக்க , லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்வார் என்றும் இராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-8;11)

## சனல் 4 ஆவணப்...

கனேடியர்களின் சார்பில் கனேடியப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் செனற் சபை உறுப்பினருக்கும் எனத் தனிப்பட்ட முறையில் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற் கலந்து கொள்ளுமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினருக்கும் செனற் சபை உறுப்பினர்களுக்கும் கனேடிய தமிழர் பேரவை தனிப்பட்ட அழைப்புகளை அனுப்பியுள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற பெரிதும் துணை நின்ற கனேடிய அரசின் உறுப்பினருக்கு தொடர்ந்தும் ஈழ மக்களின் உண்மை நிலை குறித்து அறிவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

தொடரும் இம்முயற்சிகளின் ஒரு பகுதியாக இக் காணொளி கனேடியப் பாராளுமன்ற வளாகத்திற் காண்பிக்கப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-8,11)

## புதுவருடம் கொண்டாடு...

குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என இந்தியப் பிரதிநிதிகளிடம் கூறுகின்றனர். இந்தியக் குழு சென்றதும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜெயசேகர அப்படி உறுதியளிக்கவில்லை என்கிறார்.

தனி ஈழக் கோரிக்கையை கருணாநிதி ஐ.நாவுக்கு முன்வைத்துள்ளார். இலங்கை அரசின் இரட்டை வேடம் காரணமாகவே வெளிநாடுகள் எமக்கு அழுத்தம் கொடுக்கின்றன என்றார். (ந-8,11)

# சர்வதேச அரங்கில் தலைநிமிர்ந்துள்ள தமிழருக்கு நியாயமான தீர்வை அரசு வழங்கித்தானாக வேண்டும்

## இரா. சம்பந்தன் வலியுறுத்து



(திருகோணமலை)

கடந்த காலத் தேர்தல்களில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு அளித்த வாக்குப் பலத்தினால் நாம் இன்று சர்வதேச அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். இந்த வாக்குப் பலத்தை இனிவரும் காலங்களிலும் தமிழ் மக்கள் அதிகரிக்கச் செய்ய வேண்டும். அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையும் அவசியமான ஒன்று. இந்த ஒற்றுமை தொடர்ந்து பேணப்படவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களை நேற்று காலை சந்தித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், எமது தமிழ் மக்கள் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். தமது உறவுகளை இழந்தவர்கள். எனினும் எமது மக்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக உள்ளனர். இது கடந்த கால தேர்தல் பெறுபேறுகளில் தெட்டத் தெளிவாகின்றது.

மக்களின் வாக்குப் பலத்தினால் நாம் இன்று சர்வதேச அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கின்றோம். இந்த வாக்குப் பலத்தை இனி வரும் காலங்களிலும் தமிழ் மக்கள் அதிகரிக்கச் செய்யவேண்டும். அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை அவசியமாகும். இந்த ஒற்றுமை தொடர்ந்து பேணப்பட வேண்டும்.

தமிழர்கள் எந்தத் தீர்வை ஏற்றுக் கொள்கிறார்களோ அந்தத் தீர்வு முஸ்லிம் மக்களுக்கும் பயனுள்ளதாகத்தான் இருக்கும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

சர்வதேச நாடுகள் இன்று நம்பக்கம் உள்ளன. எனவே இலங்கை அரசு இனியும் எம்மை ஏமாற்ற முடியாது. தமிழருக்குரிய தீர்வை அரசு வழங்கியே ஆகவேண்டும். தமிழர் தங்கள் தன்மானத்தை எக்காரணமும் கொண்டு விற்கமாட்டார்கள். அரசின் அற்பசொற்ப சலுகைகளுக்கு ஒருபோதும் துணைபோக மாட்டார்கள். இதனை அரசு விளங்கிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த மக்கள் சந்திப்புகளில் சம்பந்தனுடன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன் மற்றும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-8,11)

## மத்திய அரசின்...

அடங்குகின்றன.

இந்த அதிகாரங்கள் பூரணமாக மாகாண சபைகளுக்கு கையளிக்கப்படவேண்டும் என தனது கட்சி விரும்புவதாக இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரி. ஹஸன் கூறினார்.

தென்கிழக்கு மாகாணம் என அழைக்கப்படும் சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை தேர்தல் தொகுதிகளைக் கொண்ட ஒரு மாகாணம் தனியாக அமைய வேண்டும். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு, திருகோணமலையில் காணப்படும் முஸ்லிம் பகுதிகள் இந்த புதிய மாகாணத்துடன் நிர்வாக தேவைகளுக்காக இணைக்கப்படவேண்டும்.

ஆயினும் நாம் இந்த விடயத்தை இந்தியத் தூதுக் குழுவிடம் தெரிவிக்கவில்லை. நாம் 13வது திருத்தம் பற்றி மட்டுமே அவர்களுடன் பேசினோம் என அவர் மேலும் கூறினார். (ந-8,11)

## பலவீனமான சமூகத்தை பாதுகாக்க...

என்று கோருவது ஒரு பலமான அரசாங்கத்துக்கு எவ்வகையிலும் பொருத்தமானது அல்ல.

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் இடம்பெறுகின்ற அநீதிகளுக்கு இந்த அரசாங்கம் துணை நிற்க முடியாது.

இந்நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டும் என்றால் அனைத்து இனங்களுக்கும் நீதியும் நியாயமும் கிடைக்க வேண்டும்.

இவ்விவகாரம் தொடர்பில் அரசாங்கம் கவனத்தில் கொண்டு இந்நாட்டில் உள்ள சிறுபான்மை சமூகத்தின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

எமது உரிமைகளுக்காக எவ்வளவு தூரம் போராட முடியுமோ அவ்வளவு தூரம் போராடுவோம்.

வன்முறைகள் இன்றி அகிம்சை ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் போராடுவோம்.

எதிர்த்துப் போராடக் கூடிய ஒரு சமூகமாக நாங்கள் இருக்க வேண்டும்.

தம்புள்ள ஜும்மா பள்ளிவாசலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் அனைத்து முஸ்லிம் மக்களின் உள்ளங்களைப் புண்படுத்தியதுடன் அவர்களை ஆத்திரமடையவும் செய்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் பிரதமரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இப் பள்ளிவாசலை வேறிடத்திற்கு மாற்றுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. அது எனக்குத் தெரியாது.

அப்படியான ஒரு முடிபெடுக்கும் கூட்டத்திற்கு அமைச்சர்கள் எவரும் போயிருக்க மாட்டார்கள் என நினைக்கின்றேன்.

இச்சம்பவத்தின் பின்னணியில் ஒரு பிராந்திய வானொலியும் உள்ளது.

இந்த வானொலி ஒரு சமூகத்திற்கு எதிராக அப்பட்டமாக இனவாதத்தை தூண்டி விட்டுள்ளது. இவ்வானொலியை அரசாங்கம் உடனடியாக தடை செய்ய வேண்டும்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என சர்வதேச சமூகம் கூறிவரும் நிலையில் தம்புள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தம்புள்ளவில் 60 வருடங்களுக்கு மேலாக உள்ள ஒரு பள்ளிவாசலை அவ்விடத்தில் இருந்து அப்புறப் படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்விவகாரத்தில் நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது.

விட்டுக் கொடுக்கும் பட்சத்தில் எங்கள் மத உரிமைகளில் கை வைப்பதாக மாறி விடும் அபாயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் இது சம்பந்தமாக நிர்வாக ரீதியாக எந்தப் பலவந்தம் வந்தாலும் அவற்றை எதிர்கொள்ள வேண்டும்.

நீதி அமைச்சர் இருக்கிறபோது முஸ்லிம்களுக்கு நீதி நியாயம் கிடைக்கவில்லையே என்று என்னிடம் ஆத்திரத்துடன் மக்கள் கேட்டார்கள்.

அந்த இடத்தில் தான் பள்ளிவாசல் இருக்க வேண்டும். அவ்வாறு மாற்றுவதாக இருந்தால் எங்களின் உலமா சபை அனைத்து அரசியல்வாதிகள் மற்றும் அப் பிரதேச மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஆலோசித்த பின்னர் தான் நாங்கள் முடிபை மாற்ற முடியும் என ரவூப் ஹக்கீம் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8,11)

## ஜனாதிபதி மகிந்த...

விஜயத்தில் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். (ந-8,11)

அக்ஷய திருதியை தின அழைப்பு
நியூ பிரியங்கா நகை மாளிகை
24.04.2012
அன்புடையீர் !
சுபமங்கலமான நந்தனவருடம் (24.04.2012) சித்திரை திங்கள் 12 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (இன்று) அக்ஷய திருதியை தினமாகும். இன்றைய தினம் நகை அணிகலன்கள் வேண்டுவோருக்கு நன்மை உண்டாகும்.
அன்பான வாடிக்கையாளர்களே! இத்தினத்தில் நகைகளை எமது நிறுவனத்தில் கொள்வனவு செய்யுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.
(C-6404)
உங்கள் தேவை எங்கள் சேவை
இவ்வண்ணம்
அன்புடன்
சு.கந்தஞானி (உரிமையாளர்)
நிறுவன பணியாளர்களும்.
02G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212225644
இல.69, கச்சேரி முன்பாக,
A 9 வீதி, கிளிநொச்சி,
தொ.பே:-2285433

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள் மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்
இவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081

-ஓம் சாயிராம்-
A/L பொருளியல் நூல்
பொருளாதார வளர்ச்சி
ஆசிரியர் : வே. கருணாகரன்



பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை
24.04.2012
(8226)

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
(8217)
4 ரெக்டர் - 23000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)
தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.